Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 25 | 15 - 21 ஆகஸ்ட் 2003



## புலிகளை எதன்பக்கம் சாய்க்க போகின்றது அரசு?



## யாழின் பேராளர்கள்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 15.08.2003
மின் அஞ்சல் : Ehatham@sltnet.lk

# அரசின் இலக்கு சமாதானமல்ல... பொருளாதார வளர்ச்சி மட்டுமே...!

இன்றைய சமாதான சூழல் என்பது தமிழ் மக்களுக்கு என்ன நன்மையைக் கொண்டு வந்தது என்ற கேள்விக்குரிய விடை இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கின்றபோதிலும் சிறிலங்காவுக்கும் தென்பகுதிமக்களுக்கும் அது எவ்வளவோ நன்மைகளை இந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் ஈட்டிக் கொடுத்தேயுள்ளது.

'A9' என்று சுருக்கமாக அழைக்கப்படும் யாழ் - கண்டி சாலையருகே ஒரு சிலமணிநேரம் நின்று அவதானித்தால் போதும் சமாதான சூழல் தென்பகுதியினருக்கு பெற்றுக் கொடுத்துள்ள பெறுபேறுகளை பிரமிப்புடன் உணரமுடியும்.

போர் அவர்களுக்கு பொருளாதர வீழ்ச்சியை, பின்னடைவை ஏற்படுத்தி இருந்தாலும் அவர்களின் வாழ்வியல் - அரசியல் உரிமை தொடர்பான விடயங்களில் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

ஆனால் தமிழ் மக்கள் மீதான சிங்கள பேரினவாதிகளின் ஒடுக்குமுறை மற்றும் இன அழிப்புக் கொள்கையின் அடிப்படையிலான யுத்தம், அவர்களின் ஒட்டுமொத்த இருப்பையே முற்றாகத் தகர்த்தழித்துள்ளதுடன் இயல்பு வாழ்வை திக்குத்திசை தடுமாறவும் வைத்துள்ளமையை எவரும் அறிவர்.

சமாதானம் போர் ஓய்வை தற்காலிகமாக ஏற்படுத்தியிருந்தாலும், தமிழ்மக்களின் முட்கம்பி வலயத்துக்குள்ளான, இராணுவ ஆக்கிரமிப்பு நிலையிலான அச்சுறுத்தலுடன் கூடிய வாழ்க்கையில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை.

சமாதான மாறுதல்களின் தாக்கங்கள் சராசரித் தமிழ் மக்களையும் சாமானியர்களையும், மேலும் விழிபிதுங்கவே வைத்துள்ளது.

வாழ்வியல் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்படாத வரையில், தமிழ்மக்களின் இயல்பு வாழ்வானது இந்த சமாதானக் களியாட்ட நிகழ்வுகளால் எந்த வகையிலும் மேம்பாடு காணப்போவதும் கிடையாது. இந்த ஒன்றரை ஆண்டுக்கும் அதிகமான கால புரிந்துணர்வு உடன்பாட்டின் பேரிலான 'சமாதானக்காலம்' தமிழ்மக்களை மேலும் பொருளாதார ரீதியில் 'சுரண்டப்படும்' இனமாகவே மாற்றியுள்ளது.

யாழ்குடா தென்னிலங்கையின் மாபெரும் வர்த்தகமையமாகிவிட்டது.

ஐந்தைக் கொடுத்து ஐம்பதைச் சுரண்டும் வர்த்தக மூலோபாய வியூகத்துள் தமிழ் மக்களின் எஞ்சிய பொருளாதார வளமும் மிக கவர்ச்சிகரமான - அதேசமயம் நுணுக்கமான முறையில் தென்பகுதி வர்த்தகர்களால் பறிபோய்கொண்டிருக்கிறது.

தற்காலிக சமாதான பரபரப்பு சூழலில் தாம் 'இளிச்சவாயர்கள்' ஆக்கப்படுவதை தமிழ் மக்கள் தொடர்ந்தும் புரிந்துகொள்ளாதிருப்பது மிகவும் ஆபத்தான ஒன்றாகும்.

போரினால் சரிந்த தென்னிலங்கைப் பொருளாதார வளம் சமாதானத்தினால் நிமிர்வு கண்டு வருகிறது.

இந்த வளமான நிமிர்வு சமாதானம் தோற்கின் சிறிலங்காவின் அடுத்த கட்ட போருக்கு உரமூட்டுவதாகவே அமையும்.

ஒரு இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு ஒன்றைத்தற்காலிகமாக உருவாக்கவே பின்னடிக்கும் - காலங்கடத்தும் அரசு தமிழ் மக்களுக்கு, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வல்ல ஒரு உறுதியான நியாயமான அரசியல்தீர்வை வழங்கும் என நம்புவது கடினமே ஆகும்.

அதனை எதிர்க்கட்சிகள் ஆதரிக்கும் ,என எவரும் நம்பினால் அது முட்டாள்தனமுமாகும்.

ஆனாலும் அரசுக்கு இப்போது சமாதானம் தேவை. அது தமிழ் மக்களை வளம்படுத்தவல்ல.... சிங்கள மக்களை மேம்படுத்த.... அவ்வளவு தான்

அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 'சமாதானத்தை மையமாகக்கொண்டு சிறிலங்காவின் பொருளாதாரக்கொள்கை வகுக்கப்படும்' எனத்தெரிவித்திருப்பதை நாம் கவனத்தில் கெள்வது அவசியமாகும்.

அவர் சமாதானத்தை மையமாகக்கொண்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வைக்காண்பதற்கான அரசியல் கொள்கை வகுக்கப்படும் எனக்கூறியிருப்பாரேயானால் சந்தோசப்படலாம். ஆனால்...

ரணிலின் சமாதானப்பேச்சு பல்லக்கிலை... தீர்வு முயற்சியோ கால்நடையிலை..... இல்லையில்லை.... தவழ்நிலையிலை என்பதை கண்கூடாகப்பார்க்கக்கூடியதாக இருக்கிறதல்லவா?

## தூரனின் பார்வை

# ஜே.வி.பியினரின் போராட்டம் இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரானதல்ல... சமாதானத்திற்கே எதிரானது...!

இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரான பிரச்சாரங்கள் மற்றும் போராட்ட நடவடிக்கைகளை ஜே.வி.பியினர் தென் பகுதியில்தீவிரமாக ஆரம்பித்துள்ளனர்.

இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்று இது கூறப்பட்டாலும் கூட உண்மையில் இவை ஒட்டு மொத்தமான சமாதான நடவடிக்கைகளுக்கும் எதிரான நகர்வுகளே ஆகும்.

ஒரு காலத்தில் ஆயுதக் கிளர்ச்சி மூலம் புரட்சி செய்து அரசில் மாற்றம் ஒன்றை கொண்டு வரப்போவதாகக் கூறிக்கொண்டு சிறிலங்காவை -தமது செயல்திறனும் தீர்க்க தரிசனமுமற்ற அரை குறைப்போராட்ட நடவடிக்கைகளால் சீரழித்த ஜே.வி.பியினர் 1971இலும், பின்னர் 1980களின் இறுதிப்பகுதியிலும் சந்தித்த மிக மோசமானதும் அவமானகரமானதுமான தோல்விகளுக்குப்பின்னர், தமது இடது சாரித்தனத்தை இழந்து விட்டுள்ள நிலையில் மிகவும் கீழ்த்தரமான இனவாத அரசியல் வாதிகளுடன் சமரசம் செய்து கொண்டு 'பதவி'களுக்கான மூன்றாந்தர அரசியல் பேரத்தில் இறங்கியுள்ள இன்றைய நிலையில் சமாதானத்திற்கெதிரான அரசியல் கிளர்ச்சி நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முனைந்துள்ளதன் மூலம் தமது அரசியல் 'வங்குரோத்து' நிலையை தாமே பகிரங்கமாக வெளிக்காட்டத் தொடங்கியுள்ளது.

இது அவர்களின் பரிதாபத்திற்குரிய, இயலாமையின் வெளிப்பாடான, அரசியல் நடவடிக்கையாக மிகத்தெளிவாகவே இனம்காணப்பட்டாலும்கூட, இதன் விளைவுகள் சிறிலங்காவின் எதிர்காலத்தை மேலும் அதலபாதாளத்திற்கே இட்டுச் செல்லப்போகிறது என்பது உறுதியான ஒன்றாகும்.

ஒரு தேசிய நலனில் அக்கறை கொண்ட, பொறுப்புணர்வுள்ள, எந்தவொரு அரசியல் கட்சியும் யுத்தத்தாலும் இனவாத அரசியல் கலாச்சாரத்தாலும் சீரழிந்து போயுள்ள ஒரு நாட்டை சமாதான மற்றும் அமைதிவழிக்கு இட்டுச் செல்லும் எந்தவொரு நடவடிக்கையையும் நியாயபூர்வமான முறையில் ஆதரிக்கவே செய்யும்.

இம்மாதிரியான நடவடிக்கையில், அம்மாதிரியிலான கொள்கைப்பிடிப்பும் தேசிய பற்றும் கொண்டதான எந்தவொரு கட்சியும் தன்சுயநல அரசியல் அபிலாசைகளை இலக்கு வைத்து செயற்படாது என்பது தெளிவு.

ஜே.வி.பிக்கு எந்தக்காலத்திலும் ஒரு உறுதியான தேசியக் கொள்கை என்பது இருந்ததே கிடையாது. அது எப்போதுமே சோசலிசம் பேசும், இடதுசாரி வேஷம் போடும் சந்தர்ப்ப வாதத்தன்மை கொண்ட அரசியற் கோட்பாடுகளையே ஆத்மார்த்தமாக வரித்துக் கொண்ட ஒன்றாகவே இயங்கிவந்துள்ளது.

அது ஆரம்பத்தில் 'சிறிமாவோ'வின் 'அரசு ஆட்சிஅமைக்க பின்னணியில் நின்று உதவியது. சிறிமாவோ ஆட்சிப்பீடம் ஏறியதும் தமது அரசியல் கோரிக்கைகளுக்கு இசைவாக அந்த அரசு நடக்கமறுத்ததால் அதற்கு எதிராக 1971 ஏப்ரலில் தனது முதல் 'புரட்சி' என்ற பெயரிலான ஆயுதக் கிளர்ச்சியை நடத்தியது.

அந்தக்கிளர்ச்சியை சிறிமாவோ இந்திய அரசின் உதவியுடன் இராணுவரீதியில் ஈவிரக்கமற்ற காட்டுமிராண்டித்தன முறையில் அடக்கினார். இருபத்தையாயிரத்துக்கும் அதிகமாக சிங்கள இளைஞர், யுவதிகள் மிகக் கொடூரமாகவும், அநாகரீகமான முறையிலும் கொன்றழிக்கப்பட்டனர்.

கதிர்காம அழகி பிறேமாவதி மன்னம் பெரியின் கொலை இதற்கு மிகவும் சிறந்த உதாரணமாகும்.




ஜே.வி.பியின் சிரேஷ்ட தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டு கொடும் சித்திரவதைக்குள்ளாகினர். சிலர் படுகொலை செய்யப்பட்டனர்.

பின்னர் ஜே. ஆரின் ஆட்சிக்காலத்தில் விடுதலையான ரோகணவிஜேவீர உட்பட அதன் சிரேஷ்ட தலைவர்கள் ஜே.வி.பியை புரட்சிகரத்தன்மையில் இருந்து விலக்கி, அவர்களால் மிகக்கேவலமாக விமர்சிக்கக்கப் பட்ட சனநாயக நீரோட்டத்திற்கு இறங்கினர்.

அதாவது ஆயுதப் புரட்சியில் தோற்று அரசியல் புரட்சியில் இறங்க எத்தனித்தனர்

அவர்களின் சிவப்புக் கொள்கைகள் சாயம் போகத் தொடங்கியது.

அவர்களும் பூர்ஷுவா சோசலிஷவாதிகளாகிக் கொண்டனர்.

பாராளுமன்றப் பாதை பணக்காரப் பாதை என்றவர்கள் சனாதிபதிக்கதிரைக்கும், பாராளுமன்ற இருக்கைகளுக்கும் 'வாயூறும்' மூன்றாந்தர அரசியல் வாதிகளாக தம்மை மாற்றிக் கொண்ட போதும் தேர்தலில் மக்கள் அவர்களை நிராக ரிக்கவேசெய்தனர்.

1987இல் இந்தியப்படையின் (அமைதிப்ப(ா)டை) வருகையின் பின் மீண்டும் தமது கிளர்ச்சியை பழைய பாணியில் 'இந்திய விஸ்தரிப்பு வாதஎதிர்ப்பு' என்றபோர்வையில் ஆரம்பித்தனர்.

மனிதர்களை 'டயர்' போட்டு எரித்தும், அரை குறையாக எரிக்கப்பட்ட நிலையில் சடலங் களைஆறுகளில் தள்ளி மிதக்க விட்டு வேடிக்கை பார்த்தும் தமது புதிய அரசியல் கலாச்சாரத்தை அரங்கேற்றிய போதும் பிரேமதாஸஅரசு அவர்களை மிருகத்தனமாக வேட்டையாடியது.

ரோகண விஜேவீர, உப திஸ்ஸ கமநாயக போன்ற சிரேஷ்ட தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த இரணடாவது கிளர்ச்சியின் போது தான் இவர்களால் இன்றைய சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜேகுமாரணதுங்க படுகொலை செய்யப்பட்டார்.

கொஞ்சக்காலம் விலாசமற்றிருந்தவர்கள் மீண்டும் புதிய தலைமையுடன் அதே சிவப்பு வேஷங்களுடன் 1990களின் பிற்பகுதியில் அரசியல் பிரவேசம் செய்தனர். பெரும்பான்மை கட்சிகளின் போக்கில் அதிருப்தி கொண்ட சிங்கள மக்களின் மிகவும் சொற்பவீதமானோர் இவர்களை விருப்பமின்றியே ஆதரிக்க அவர்கள் மீண்டும் 'முளை' கொள்ளத் தொடங்கினர்.

தொண்ணூறுகளின் இறுதிவாக்கில் அரசியல் சுய நலன்களுக்காக,தன்னைக் கைம் பெண்ணாக்கிய கொலைகாரர்கள் என ஜே.வி.பியினரை வர்ணித்த சந்திரிகாவே அவர்களுடன் தேர்தல்கால உறவுகளை மேற்கொள்ள வேண்டிய கேவலமான சூழல் உருவாகியது.

புத்தாயிரமாம் ஆண்டுத் தேர்தலில் ஐ.தே கட்சியின் வெற்றியும் ரணில் தலைமையிலான ஆட்சியின் ஆரம்பமும், மூன்றாம் கட்ட ஈழப்போரின் முடிவும்சிறிலங்கா அரசியலில் ஏற்படுத்திய எதிர்பாராத திடீர் மாற்றமும், சந்திரிகா-ஜே.வி.பி உறவை இறுக்கமாக்க வேண்டிய சூழலை, சுயநல அரசியல் இலக்கின் காரணமாக இருதரப்பினருக்கும் எற்படுத்தியது.

அந்த உறவு 'சமாதானத்திற்கும், பேச்சுவார்த்தை நகர்வுகளுக்கும் எதிரான உணர்வின் பாற்பட்ட ஒன்றாகவே முனைப்புக் கொள்ள ஆரம்பித்தது.'

தேசபக்தர்கள் கூட்டணி என்று இணைய முயன்று 'பதவிப் பக்தி' காரணமாக இன்னமும் ஒட்ட முடியாது உள்ள சந்திரிகாவும்-ஜே.வி.பியும் சமாதானத்திற்கு எதிரான பேரினவாத கோட்பாடுகளின் அடிப்படையிலான செயற்பாடுகளில் மட்டும் உடன்பாடு கொள்ளக்கூடியவர்களாக உள்ளனர்.

தேசம் எப்படிக் குழம்பினாலும் தேசிய அரசியலில் தமது இலக்கினை எட்டினால் போதும் என்ற சந்தர்ப்பவாத கொள்கையே ஜே.வி.பியின் இன்றைய தாரக மந்திரமாகியுள்ளது.

இதன் அடிப்படையிலான ஜே.வி.பியின் தற்போதைய செயற்பாடே இடைக்கால நிர்வாகத்திற்கெதிரான போராட்ட நடவடிக்கைகளாகும்.

இறந்த கால சோஷலிஸவாதிகளும், நிகழ்காலச் சந்தர்ப்பவாதிகளும், எதிர் காலப் பேரினவாதிகளுமான ஜே.வி.பியின் அரசியல் கொள்கைமற்றும் கோட்பாடுகளின் வங்கரோத்து நிலையில்- அரசியல் இயலாமையின் கடைசிச் செயற்பாடே இந்த சமாதான விரோத செயற்பாடுகளாகும்.

சந்திரிகாவின் பின்னணியில் ஜே.வி.பியும், ஜே.வி.பியின் பின்னணியில் சந்திரிகாவும், சமாதான எதிர்ப்பு முன்னணியொன்றை உருவாக்கி அதன்மூலம் பேரினவாதிகளை உருவேற்றி நான்காம் ஈழப்போருக்கான 'பேயாட்டத்திற்கு' தயாரிப்புவேலைகளை ஆரம்பித்துள்ளனர் என்பதே உண்மை.

சர்வதேச சமூகம் இதைப்புரிந்து கொள்ள வேண்டும். அதாவது உறுதியான சமாதானத்தையும் நியாயமான அமைதித் தீர்வையும் சிறிலங்காவுக்கு வழங்க எந்தப்பேரினவாதிகளும் தயாராக இல்லை. இதுவே இன்றைய யதார்த்த நிலையுமாகும்.

# புலிகளை எந்தப்பக்கம் சாய்க்க போகிறார்கள்

*விடுதலைப்புலிகள்* சமாதானப் பாதைக்கு வர நேர்ந்தால் அரசியல் நீரோட்டத்தில் கலக்க நேர்ந்தால் அவர்கள் நீர்த்துப்போய்விடுவர். எனவே புலிகள் இதற்கு ஒரு போதும் உடன்படமாட்டார்கள். இப்படி எழுதினார் பிரஞ்சு பத்திரிகைக் கட்டுரையாளரான எரிக்மேயர்.

இத்தகையதொரு விமர்சனம் தொண்நூறுகளில் விடாப்பிடியாக தெற்கின் பலஆய்வாளர்களாலும் முன்வைக்கப்பட்டிருந்தது. இத்தகையதொரு கருதுகோலுக்கு சர்வதேச அளவில் ஒரு செவிசாய்ப்பும் உடன்பாடும் கூட இருந்ததென்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் சர்வதேச அனுசரணையோடு சர்வதேசமயப்படுத்தப்பட்டுவிட்ட முக்கியத்துவத்தோடு நடந்த இம்முறை பேச்சின் தற்போதைய நிலவரம் இந்த விமர்சனத்தைத் தூக்கி விழுங்கிவிட்டு உண்மையை வேறுவிதமாக அம்பலப்படுத்துகிறது.

அமெரிக்காவில் நடந்த வோஷிங்டன் முன்னோடி நிதி மாநாட்டிற்கு புலிகள் புறக்கணிக்கப்படும் வரையான பேச்சு முயற்சி வெற்றிகரமாக அமைந்தது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கவில்லை.



ஒஸ்லோ மாநாட்டு தீர்மானத்தில் புலிகள் சமாதான பாதையில் பேச்சு நகர்வதற்கான மற்றும் அரசியல் நீரோட்டத்தில் புலிகள் கலந்து கொள்வதற்கான மிகவும் முன்னேற்றகரமான நடைமுறைச் சாத்தியங்களை வெளியிட்டிருந்தனர்.

இதில் புலிகள் தனிநாட்டு கோரிக்கையில் இருந்து ஒரு உள்ளகச் சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டித் தீர்வைப் பரிசீலிக்கத் தயார் என அறிவித்ததும் அதற்கான உபகுழுவை அமைத்ததும் ஒரு துணிகரமான செயல் என்றுதான் இனப்பிரச்சினையின் கூர்மையைப் பொறுத்தும், நடந்த போராட்டத்தினைப் பொறுத்தும் சொல்லவேண்டும்.

மேலும் இடைக்கால அரசாங்கத்திலிருந்து படியிறங்கி கூட்டுச் செயலணியில் வந்து மேலும் இறங்கி 'சிறான்' அமைப்பை மாற்றீடாக ஏற்றுக் கொண்டதும் சமாதானத்தை சாத்தியப்படுத்துவதற்கான அதிக முயற்சி அல்லது அதிக விட்டுக் கொடுப்பு என்றுதான் கொள்ளவேண்டும்.


ஆனால் மீள் குடியேற்றத்தை உயர்பாதுகாப்பு வலயத்தால் தடுத்து உயர்பாதுகாப்பு வலய நீக்கத்தை நம்பியாரின் ஆலோசனையால் தடுத்து துரித அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கான 'சிறானை' சட்டப்பிரச்சினையால் தடுத்து அரசியல் நீரோட்டத்தில் கலக்கவந்த புலிகளுக்கு சிறிதளவு அதிகாரங்களையும் வழங்காது பின்னடித்தமைக்கு அரசாங்கம் அதுதொடர்பில் கொண்ட அச்சமே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

புலிகளிடம் நிதியும் திட்டமிடுதலும் அதனை நிறைவேற்றுவதற்குமான அதிகாரமும் போய்ச்சேரும்போது யுத்தத்தால் சிதைந்துபோயுள்ள வடக்கு - கிழக்கையும் இடம்பெயர்ந்த மக்களையும் மீள் குடியேற்றம் - புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செய்யும் கவர்ச்சி மிக்க செயற்திட்டத்தில் புலிகள் அரசியற் செல்வாக்கையும் அந்தஷ்தையும் பெற்று மேலும் ஸ்தாபிதமடைந்துவிடுவர். தம்மை சர்வதேச அளவில் அரசியல் இயக்கமாக வெளிப்படுத்தவும் இது ஒருவாய்ப்பையும் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்துவிடும் என ரணில் அஞ்சினார்.

ஏனெனில் ஒரு நிரந்தரத் தீர்வுக்கும் போரின் இடைநிறுத்தத்திற்கும் இடையில் போடப்பட வேண்டிய பாலமான எந்தவொரு இடைக்கால ஏற்பாட்டின் பிரகாரமும் புலிகளின்கையில் சிறு அளவிலேனும் நிறைவேற்றும் அதிகாரம் போய்ச் சேருவதை அரசு விரும்பியிருக்கவில்லை. அதுவே ஆரம்பத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட இடைக்கால நிர்வாகம் கூட்டுச் செயலணியாகி பின் 'சிறானாகி' பின் அதுவுமற்றுப் போனதற்கான காரணம்.


மேற்சொன்ன அரசின் நடவடிக்கைகளின் விளைவால் புலிகள் ரோக்கியோ மாநாட்டை புறக்கணித்து பின் பேச்சையும் இடைநிறுத்த வேண்டியதாயிற்று.

இடைக்கால நிர்வாகத்தைக்கோரி இடைநிறுத்தப்பட்ட பேச்சின் பின்னாண



சூழலில் அரசியல் யாப்பை மீற முடியாது என்ற கோதாவில் முன்வைக்கப்பட்ட அரசின் யோசனைகள் புலிகளால் புறக்கணிக்கப்பட்டன. இப்போது அமைச்சரவைக்கு பதில் சொல்லத் தேவையில்லாத ஒரு வரைபு புலிகளிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இதை விடவும் அரசியல் யாப்புக்கு வெளியே ஏற்படுத்த வேறு மார்க்கங்கள் இருப்பதாகவும் (செயற் குழு முறைமை) ரணில் கூறுகிறார்.

இப்போது ரணில் இதுகுறித்த விடயத்தில் முன்னேறியிருப்பது பேச்சை இடைநிறுத்திய மற்றும் அரசியல் யாப்பிற்கு உட்பட்ட யோசனைகளைப் புறக்



கணித்த புலிகளின் காட்டமான எதிர்வினையால் நிகழ்ந்தது.

அப்படியாயின் இதற்கெல்லாம் வழி இல்லை என்பதை விட வழியைத் திறக்க ரணில் தயாராக இல்லை என்று சொல்வதைவிட வேறென்ன இருக்கிறது.

பேச்சை முறித்து புலிகள் யுத்தத்தை நோக்கி திரும்பும் ஒரு சூழலை சிங்கள ஆட்சியாளர்கள் அறவே விரும்பவில்லை. அத்தகைய ஒரு சூழலுக்கு அச்சம் கொண்டவர்களாகவே இப்போது அவர்கள் காணப்படுகிறார்கள். அதனையே மேற்சொன்ன படியிறக்கம் தெளிவுபடுத்துகின்றது.

இதை விளங்க வேண்டுமாயின் குரங்குப்பாஞ்சான் விவகாரத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ புலிகள் முகாமை எடுக்காவிட்டால் இராணுவப் பிரயோகத்தின் மூலம் அகற்றவேண்டிவரும் என்று அறிவித்தார். இதற்குப் புலிகள் இந்த அறிவிப்பை யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி உடன்பாட்டை முறித்துக்கொள்ளும் பதினைந்து நாள் முன்னறிவிப்பாகவோ அல்லது அதற்கான சமிக்கையாகவோ இதை நாம்கொள்ளவேண்டுமா? என்று ரணிலிடம் கேட்டதாக நம்பிக்கைக்குரிய வட்டாரங்கள் கூறின.

இதன் விளைவே அவசரப்பட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்குத்தெரியாது விடுக்கப்பட்டமுடிவு அது என்றும் ஒருவகையில் தன் அதிகாரிகளைக் கண்டிக்கும் தோறணையிலும் மறுப்பு வெளியிட்டிருந்தார். பின்னர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் தான் இவ்வாறு கூறவில்லை என்றும் மறுத்திருந்தார்.

புலிகளை யுத்தத்திற்கு திரும்பவிடாது வைத்திருப்பது இன்றைய ஆட்சியாளர்களின் தேவையும் சிங்கள மனோபாவத்தின் விருப்பமுமாகும்.

ஆனால் இந்த சமாதானப் பேச்சில் புலிகளின் கையில் ஒரு அதிகாரம் போய்விடுவதினால் அரசியல் அர்த்தத்தில் புலிகள் நிலைபெற்று விடவும் சர்வதேச அரங்கில் ஒரு அரசியல் அமைப்பாக தம்மை ஸ்தாபித்து விடவும் முடியும் என்பதால் அதைத் தவிர்க்க விரும்புகிறது அரசு.

இந்தவாரம் கேசரிக்கு அளித்த பேட்டியில் பேராசிரியர் ஜெயதேவஉயங் கொட சொன்ன விடயம் ஒன்றை நோக்குதல் நலம்.

"சிங்கள மக்கள் மத்தியில் மிகுந்த குழப்ப நிலையே காணப்படுகிறது. போர் தொடர்வதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களுக்கு சமாதானம் தேவைப்படுகிறது. அரசியல் தீர்வு தேவைப்படுகிறது. அதேநேரத்தில் புலிகளைப்பற்றியும் தமிழரின் அரசியல் நோக்கம் பற்றியும் அவர்களிடம் ஒரு பரவலான அச்சம் உள்ளது."

**கு.கவியழகன்**

யுத்தத்தை தவிர்ப்பதில் உள்ள அவர்களின் ஆர்வம் தோல்வி பற்றிய பயத்திலும் பாதுகாப்பின் பலத்திலுள்ள சந்தேகத்திலுமே உருவானது. ஆனால் ஒரு அரசியல் அதிகாரத்தை இடைக்காலத்திலேனும் வழங்குவதனால் அதில் புலிகளோ, தமிழர்களோ ஸ்தாபிதமடைந்துவிடுவார்கள் என்றும் அதனால் தமக்கு பாதிப்புக்கள் நேரலாம் என்றும் அவர்கள் அச்சப்படுவார்களேயானால் யுத்தத்திற்குத்திரும்ப விடாமலும் அதேநேரம் அதிகாரத்தைக்கொண்ட ஒரு புனர்நிர்மாணத்திற்கான அலகையே உருவாக்க மனமின்றி இருக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் மீது தமிழ் மக்கள் எத்தனை தூரம் அச்சமடைய வேண்டும்.


சமாதானத்தின் நிகழ்ச்சி நிரல் எதனை உள்ளடக்கியிருக்கின்றது என்று தமிழர்கள் நம்பட்டும்?

ஒடுக்கப்பட்டவர்களின் சனநாயக அரசியல் பிரவேசம் குறித்து அவர்களுக்கு வழங்கப்படும் அதிகாரம் குறித்து சிங்களவர்கள் அச்சமடைய வேண்டுமாயின் ஒடுக்கியவர்களின் அரசியல் வியாக்கியானம் குறித்து பேச்சிற்கான அவர்களின் நிகழ்ச்சி நிரல் குறித்து ஒடுக்கப்பட்ட தமிழர்கள் எவ்வளவு தூரம் அச்சமடைய வேண்டும்.

சிங்கள ஆட்சியாளர்கள் புலிகள் கொடுக்க இருக்கும் இடைக்கால நிர்வாக வரைபின் பக்கமோ அல்லது யுத்தத்தின் பக்கமோ சாய்வதற்கான ஒரு முடிவை எடுக்கவேண்டிய தருணம் நெருங்கி வருகிறது.

அவர்கள் நினைப்பதுபோல் யுத்தமும் புலிகளைப் பலப்படுத்தும். சமாதானத்தின் தவிர்க்கவியலாது கொடுக்க நேரம் அரசியலதிகாரமும் புலிகளைப் பலப்படுத்தும். எனவே இரண்டும் அற்று சர்வதேச அரங்கில் தமக்கான ஆதரவுச் சக்திகளோடு இராஜதந்திர ரீதியாக புலிகளைச் சுற்றி வளைப்பதே சமாதானத்தின் நிகழ்ச்சி நிரல் என்றாயின் அது புலிகளுக்கான நியாயத்தை பரப்பியவாறு யுத்தத்தை விரைந்து கொண்டுவரும். ●

## மதவடி மயிலர்



**செய்தி:-** *அரசு - புலிகளுக்கு இடையிலான பேச்சுக்கு ஒத்துழைப்பு வழங்க பிரான்ஸ் தயார் - பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு.....*

**மயிலர்:-** பிரான்ஸ் தயார்... சுவிஸ் தயார்.... ஜெர்மனி தயார்... கனடா தயார்... ஆனால் சிறிலங்கா சனாதிபதி தயாரில்லையே... அம்மணி தயாரில்லாட்டி சமாதானம் செம்மணி விவகாரமாகத்தான் போய் முடியும் பாருங்கோ

**செய்தி:-** *குரங்குப் பாஞ்சான் குள முகாம் திருமலைத் துறைமுகத்திற்கு அச்சுறுத்தல் என்கிறார் பொ.ஜ. முன்னணிப் பேச்சாளர் சரத்தஅமுனுகம.*

**மயிலர்:-** குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரம் கொப்புக்கு கொப்பாக பாஞ்சுகொண்டுதான் இருக்கு பாருங்கோ... இராணுவமும், எதிர்க்கட்சியும் மாறி மாறி குரங்குச் சேட்டை விட்டுக் கொண்டுதான் இருக்கினம்...

**செய்தி:-** *லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு விஜயம்... இந்திய வெளியுறவு அமைச்சர் உட்பட பல அதிகாரிகளையும் சந்திப்பார்.*

**மயிலர்:-** முன்னாள் வெளியுறவு அமைச்சர்... இன்னமும் வெளி விவகாரங்களில் தலையீடு செய்து பிரச்சினைகளை விகாரமாக்குவதில் தீவிரம் காட்டிவரு கிறார் போலைக்கிடக்குது... அதுவும் இந்தியாவுக்கு அடிக்கடி பறந்து சென்று என்ன பேசுகிறாரோ... அந்த கதிர்காமக் கடவுளுக்கு தான் தெரியும் பாருங்கோ... இப்பிடி யோசிக்கேக்கை 'நாய்க்கு வேலையுமில்லை நடக்க நேரமுமில்லை' எண்ட பழமொழிதான் நினைவுக்கு வருது பாருங்கோ.

**செய்தி:-** *வடக்கு - கிழக்கைப் பிரிக்க பிரேரணை கொண்டுவரின் அதனை ஆதரிப்போம் என்கிறார் 'அதாவுல்லா...'*

**மயிலர்:-** முஸ்லிம் காங்கிரசை பிரிச்சு கூத்தாடிக் கும்மாள மிடுகிறவர்... தன்ரை இனத்துக்கையே பிரிவினைக்கு தூபம் போடுகிறவர் வேறு என்னதான் செய்யமாட்டார் பாருங்கோ....

வடக்கு கிழக்கு பிரிப்பு அவற்றை கொல்லைப்புற விவகாரம் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறார் போலும்... அதாவுல்லாவுக்கு அல்லா தான் நல்ல புத்தியைக் கொடுக்க வேணும்....

**செய்தி:-** *'போருக்கு அனுப்புவதை விடுத்து அமைதிப்பணிக்கு அனுப்புங்கள்' - பிரிட்டிஷ் அதிகாரி சிறிலங்கா இராணுவத்திற்கு ஆலோசனை...*

**மயிலர்:-** *பிள்ளையைக் கிள்ளி விட்டுக்கொண்டே தொட்டிலையும் ஆட்டி ஆராரோ பாடுறகதை இதுதான் பாருங்கோ.... ஒரு பக்கத்தாலை போருக்கு வேண்டிய ஆயுதங்களை வழங்கிக் கொண்டு மறுபக்கத்தாலை அமைதிப்பணி செய்யுங்கள் எண்டால் என்ன அர்த்தம்.*

**செய்தி:-** *மகிந்தவை விட கூடுதல் செல்வாக்கு தனக்கு இருப்பதாகக் கூறுகிறார் அநுரா.*

**மயிலர்:-** பாவம் சரியும் தனது செல்வாக்கை இப்படிக் கூறியாவது நிமிர்த்தலாம் என நினைக்கிறார் பாருங்கோ... இவர் தனது செல்வாக்கை ஜே.வி.பியைக் கொண்டு நிமிர்த்த முயல்வது தான் கோமாளித்தனத்தின் உச்சம்... மகிந்தவின் செல்வாக்கே அப்பிடி இப்பிடி இருக்கையில் அநுராவின் செல்வாக்கு எப்பிடி இருக்கும் என்று சொல்ல வேண்டுமே...

ஆழிக்கும் எல்லையுண்டு; ஆனால், ஆசைக்கு எல்லை இல்லை. - வில்லியம் ஷேக்ஸ்பியர்

# எதற்கு... எப்போது இவர்கள் தயாரானார்கள்...?

## சிறி.இந்திரகுமார்

கொழும்பிலுள்ள ஒரு இலத்திரனியல் ஊடக நண்பரிடம் கேட்டேன் கொழும்பு எப்படி இருக்கிறது என்று....

அதற்கு அந்த நண்பர் பகிடியாகச் சொன்னார் "இங்கு சண்டைதான் வேணுமாம்... அதற்காக அவர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். மக்களை தயார் படுத்திக்கொண்டிருக்கிறார்கள்" என்று..

அவர் சண்டையென்று சொன்னது இரண்டுவிதமான சண்டைகளை. ஒன்று அரசியல் சண்டை, இரண்டாவது துப்பாக்கிச் சண்டை.

இதில் இரண்டாவது சண்டையானது துப்பாக்கிச்சண்டைக்காக அரசியல் சண்டையில் இறங்கிவிட்டார்கள்.

இதில் அதிகம் முன்னணியில் நிற்பவர்கள் ஜே.வி.பிக்காரர்களும் சிகல உறுமயக்காரர்களாகவும் இருந்தாலும் பௌத்த பிக்குகளின் பங்கும் குறைவானதாக இல்லை.

இந்த இரண்டு சண்டைகளினதும் நோக்கம் அடிப்படையில் ஒன்றானாலும் பார்வையில் இரண்டும் வேறுபட்டது.

முதலாவதான அரசியல் சண்டை மூலம் தமிழரின் உரிமையைப்பறிப்பது அல்லது தடுப்பது. இரண்டாவது சண்டையின் நோக்கம். தமிழரின் மண்ணைப்பறிப்பது.

இதில் முதற்சொன்ன அரசியற் சண்டையென்றதில் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்லது சுயஅரசியல் இலாபம் தேடுபவர்கள் என்ற கூட்டம் எப்பொழுதும் இருக்கவே செய்யும் என்பதால் நாம் இதைப்பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவேண்டியதில்லைத் தான்.

ஆனால் அந்த உரையாடலுக்குப் பின்னர் வெளிவந்த ஒரு கருத்துக்கணிப்பீடு அவ்வாறு சிந்திக்க முடியாமற்செய்கிறது.

அந்தக்கணிப்பீடு கூறும் தகவல் இதுதான். பதினேழு மாவட்டங்களில் 'சோஷல் இன்டிக்கேட்டர்' என்ற அரசசார்பற்ற நிறுவனம் நடாத்திய கணிப்பீடொன்றின்படி எண்பது வீதமான சிங்களவர்கள் சமஷ்டி மூலமான தமிழர்களிற்கான தீர்விற்கு எதிர்ப்பு என்பதாகவும்,

தமிழரின் தலைவிதிக்கு தமிழீழ தனியரசொன்றே தீர்வென போராடிய போதிலும் இன்றைய சமாதான நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஒரு மாற்றுத் தீர்வாக சமஷ்டி மூலமான தீர்விற்கு முன்வந்த போதும் தமிழர்களுக்கு சிங்களவர்கள் கூறும் செய்தி சமஷ்டி மூலமான தீர்விற்கும் தாங்கள் எதிர்ப்பு என்பதேயாகும்.

இதில் பதினேழு மாவட்டங்கள் என்கின்ற போது தமிழர்களின் மாவட்டங்களான எட்டு மாவட்டங்கள் தவிர்க்கப்படுகின்றது. அப்படியானால் பெருமளவு சிங்களவர்கள் தமது கணிப்பபை சொல்லியாகிவிட்டது என எடுத்துக்கொள்ளலாமா?

அப்படியானால் சமஷ்டியை விரும்புகின்றதாக சொல்லப்படும் இருபத்தியிரண்டு வீதமான சிங்களவர்கள் தமிழர்களுக்கு எதைத்தரப்போகின்றார்கள்.

இப்போது தான் எங்களுக்கான செய்தி இதிலிருக்கிறதா என சிந்திக்க வேண்டும்.

இதை நாம் ஒரு அர்த்தத்தில் எடுத்துக்கொண்டால் தமிழர்கள் சமஷ்டிக்கு இணங்கியபோது கூட அவர்கள் சண்டைக்கு தயாராகின்றார்கள் என்று....

இந்த வகையில் இவர்கள் தமிழர்களுக்கு எதையுமே கொடுக்கப் போகிறார்கள் இல்லை. இதற்கான மனநிலையும் அவர்களிடம் இல்லை. அவர்கள் வெறும் ஒப்புக்குப்பேசுகிறார்கள். ஒப்புக்காக கண்ணீர் வடிக்கிறார்கள் . அவர்களுக்கு சண்டை தணிக்கப்பட்டிருக்கவேண்டும். அதே நேரத்தில் தமிழர்களின் தீர்வும் தவிர்க்கப்பட வேண்டும்.

இங்கே வேடிக்கை என்னவென்றால் மாற்றுக்கொள்கைகளிற்கான நிறுவனம் நடாத்திய கணிப்பீடொன்றில் சுமார் நாற்பது வீதத்திற்கு மேலானவர்கள் இலங்கையில் இனத்துவேச அரசியல் காரணங்களுக்காகவே யுத்தம் தோன்றிய தாக நம்புகிறார்கள்.

இந்த இனத்துவேசம் என்பது மாயமான் போல தோன்றியது. அது மறைந்து விடும் என நம்புகிறார்கள்.

இது சிங்கள தேசத்திற்கு இன்னும் இழப்பீடு காத்திருக்கிறது என்பதை சொல்லாமல் சொல்லும் வித்தையை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

தமிழரின் தியாகத்திற்கான பதில் தீர்வு எதுவென்பதை இன்னும் அவர்கள் தீர்மானிக்கவில்லை. இன்னும் அவர்கள் குரோத மனப்பாங்கிலிருந்து மாறவில்லை.

இது இப்படியிருக்க சிங்கள தேசம் போரைச்சுமக்கத்தயாரா? இதுவொரு பெருங்கதை. இதுவரை கொல்லப்பட்ட படையினரின் உண்மையான தொகை வெளியிடப்படாத நிலையில் அண்மையில் இரண்டுதசாப்த காலத்தில் நடந்த யுத்தத்தில் மாத்திரம் முப்படையிலும் சுமார் பன்னீராயிரம் பேர் அங்கவீனமாக உள்ளதென அமைச்சர் பூஞ்சி நிலமே நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

இதைவிட இந்த வருட முதல் ஐந்துமாத காலப்பகுதியில் மாத்திரம் நான்காயிரத்து ஐநூறு வரையான படையினர் தப்பியோடியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றது.

இப்படியாக போரைச்சுமக்க வேண்டிய படையினர் இனியும் சுமக்க



முடியாதவாறு களைப்படைந்துவிட்டனர்.

ஒரு முறை சனாதிபதி சந்திரிகா ஒரு செவ்வியில் கூறினார்; எந்தவொரு கெரில்லாப்போராளியும் ஒரு காலகட்டத்தில் களைப்புறுவான். அவ்வாறு பிரபாகரனும் களைப்புறுவார் என்று. ஆனால் அவரது கணிப்பீட்டுக்கு மாறாக சிறிலங்காவின் மரவுப் போர்ப்படை களைப்புற்றுவிட்டது.

இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் தென்னிலங்கையில் சமாதானத்திற்கு எதிர்க்கருத்துருவாக்கி போரொன்றைத்தீர்வாக முன்வைப்பவர்கள் போரைச் சுமக்கவேண்டிய படையினரின் தலைகளில் சுமக்க முயல்கிறார்கள்.

ஆனால் படையினரின் ஒரு தரப்பு இனியும் போரைச்சுமக்க அஞ்சுகிறார்கள் போலும் தெரிகிறது. இதைத்தான் அண்மையில் இராணுவம் மற்றும் பொலிஸ் நிலையங்களிற்கும் உயர் அதிகாரிகளுக்கும் இலங்கை இராணுவவீரர்களின் குரல் என்னும் அமைப்பு விடுத்த துண்டுப்பிரசுரத்தில் "முதுகெலும்பில்லாத சிங்கள அரசியல் வாதிகள் இன்னும் எங்கள் குருதியின் மேல் நாடகம் நடித்துக் கொண்டிருப்பதால் எமது ஆயுதங்களை தெற்கிற்கெதிராக திருப்புவோம்'' எனத்தெரிவித்திருந்தது.


இது எதைக்காட்டுகின்றது என்றால் சிங்களப் படையினரும் அவர்களது போரிடும் ஆற்றலும் களைப்புற்று விட்டது என்பதையே.

ஆகவே கொழும்பிலுள்ள நண்பர் சொன்னது போல அவர்கள் எதற்குத் தயாரானாலும் அதனைச்சந்திக்கும் முழு நிலையை தமிழர்கள் எப்போதோ பெற்றுவிட்டார்கள்.

எனவே சமஷ்டிக்கு முதல் புலிகளால் முன்வைக்கப்போகும் இடைக்கால யோசனையைக்கூட அவர்கள் அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்க்கத்தேவையில்லை.

---

# கனவுகளும் யதார்த்தமும்



தம்புள்ளவில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டிலே, அற்புதமான முன்மொழிவு ஒன்றை, ஆங்கிலப்பத்திரிகைகள் 'கோமாளி இளவரசன்' என அன்போடு அழைக்கும் திரு. அநுரா பண்டாரநாயக்கா முன் மொழிந்திருக்கிறார். நாட்டைக்காப்பாற்ற உயிர்த்தியாகம் செய்தாவது ஜே.வி.பியுடன் உடன்படிக்கை செய்வோம் என்று அவர் கூறியிருக்கிறார். சோகமான விடயம் என்னவென்றால் யாருடைய உயிரைத் தியாகம் செய்யப்போகிறோம் என்று அவர் சொல்லவில்லை.

தன்கணவனைக்கொன்றதாக தானே விரல் சுட்டிக்கூறிய ஜே.வி.பியுடன் வெட்கம் கெட்டுப்போய் தானே ஒப்பந்தம் செய்யமுடியும் சந்திரிகா அம்மையார் உலகிலேயே நீண்டகாலமாக அரசியலில் தலைமை தாங்கும் குடும்பம் என்ற பரம்பரைப்பெயரைக்காக்கும் விதத்தில் தம்பியான அநுராவை சனாதிபதி பதவிக்கென்றே வளர்த்து வருகிறார்.

தனியாக ஐ.தே.கவுடன் மோதினால் விலாசமே இல்லாமல் போகும் என்பது அவரோ அல்லது அநுராவோ அறியாததல்ல. எதிரிக்கு எதிரி நண்பன் என்றவகையிலே ஜே.வி.பியுடன் உடன்பாடுசெய்வது அவர்களுக்கு தவிர்க்கமுடியாததாகும். ஆனால் அதற்காக அநுராவின் உயிரைத்தியாகம் செய்யப் போவதில்லை. ஆக யாருடைய உயிரைத்தியாகம் செய்தாவது ஜே.வி.பியின் வாக்கு வங்கியை தனக்கு சாதகமாக பயன்படுத்த முயல்கிறார்.

இந்தக்கூட்டுக்கு நாட்டைக்காப்பாற்றுவது என்ற சாட்டுக் கூறப்படுகின்றது. ஆக, அநுராவின் பதவி ஆசைக்கு, கட்சிநன்மைக்காக உழைத்த உண்மையான தொண்டர்களின் உழைப்போ உயிரோ பலியாகப்போகின்றது.

அடுத்த பக்கத்தில், ஜே.வி.பி, உத்தேச கூட்டினுடைய சக்திமிக்க செயலாளர் பதவிக்காக பேரம் பேசுகிறது. என்ன தான் பேரணிகளிலே கூட்டம் கூட்டிக்காட்டினாலும் தனியாகப்போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்றும் வலு இன்னமும் தமக்கு இல்லை என்பது ஜே.வி.பி க்கு நன்கு தெரியும். 1980களில் ஜே.வி.பி புரிந்த படுகொலைகளை புகைப்பட கண்காட்சி மூலம் பகிரங்கப்படுத்திய சந்திரிகா இப்போது மகிந்த ராஜபக்ஷவை ஓரம் கட்டி தம்பியை சனாதிபதியாக்கவே தங்கள் காலைப் பிடிக்கிறார் என்றும் தெரியும். பதவிக்குவருவதற்கு இந்தக்கூட்டு அவர்களுக்கு மிகமிக அத்தியாவசியமானது. கூட்டை நியாயப்படுத்த சமாதான முயற்சிகளுக்கும் இடைக்காலநிர்வாகசபை வழங்குதலுக்கும் எதிரான குரலை உரக்கவே எழுப்புகிறார்கள். அண்மையில் 1500 விகாரைகளிலிருந்து அமைதி முயற்சிகளுக்கும் இடைக்காலநிர்வாக சபைக்கும் எதிரான பிரசுரங்களை வழங்கவிருக்கிறார்கள். அவர்கள் பதவி ஆசைக்காக தங்கள் கோட்பாடுகளையும் சித்தாந்தங்களையும் பலிகொடுத்துவிட்டே இந்தக்கூட்டுக்கு முயற்சி செய்கிறார்கள். சில சமயம் தம் தொண்டர்களின் உயிர்களையும் காவு கொடுக்கக்கூடும்.

ஒட்டுமொத்தமாக பதவி ஆசை அடிப்படையில் கட்டப்படும் சுதந்திரக்கட்சி- ஜே.வி.பிகூட்டு என்ற மேடையிலே சமாதானம் என்ற வெண்புறாவை இரத்தப்பலியிட அவர்கள் உத்தேசம் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் சிலவற்றை மறந்துவிட்டார்கள். ரணிலினுடைய சர்வதேசபாதுகாப்புவலை அவர்களுக்கும் வைக்கப்பட்டுள்ள பொறிதான் என அவர்கள் மறந்துவிட்டார்கள்.

பாவம்..... முன்னொரு சமயம் சிங்கள மஹாசங்கத்தினர்



"பௌத்தத்தின் காவலன்'' என்ற முடியை எதிர்க்கட்சித்தலைவர் மகிந்தராஜபக்ஷவுக்குச்சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள். இன்னொருவர் அந்த முடியை தட்டிப்பறிக்க மஹாசங்கத்தினர் அனுமதிப்பார்களா என்பதும் அவர்கள் அனுமதித்தாலும் மஹிந்த விடுவாரா என்பதும் நாலரை மில்லியன் டொலர் கேள்விகளாகும்.

## வின்சென்ற் புளோரன்ஸ்

# நறுக்கென...

## அநுராவின் மதிப்பீடும் ஜே.வி.பி.யினரின் நிலைப்பாடும்



"நான் சபாநாயகராக இருந்தபோது எனது வெறுப்புக்குரியகட்சியாக ஜே.வி.பி.யே இருந்தது. ரோகன விஜேவீர போன்ற தலைவர்கள் இப்போது அக்கட்சியில் இல்லை. இப்போது இருப்பவர்கள் படித்த புதிய சிந்தனையாளர்கள்"

இப்படி ஜே.வி.பி.யின் தற்போதைய தலைவர்களான விமல்வீரவன்ச, டில்வின்சில்வா, மற்றும் நந்தன குணதிலக போன்றோருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவம் கொடுத்திருப்பவர் வேறுயாருமல்ல சனாதிபதி நாற்காலிக்கனவில் மிதந்து கொண்டிருக்கும் அநுராபண்டாரநாயக்கவே தான்...

அவர் தான் சபாநாயகராக இருந்த போது... என்று குறிப்பிடும் காலம் ஒன்றும் வெகுகாலத்திற்கு முன்னான நாட்களல்ல சில ஆண்டுகளின் முன்னர்தான் அவர் சபாநாயகராக இருந்தார். அப்போதும் இதே விமலும், டில்வினும், நந்தனவும் தான் ஜே.வி.பி.யின் தலைவர்களாக விளங்கினர். ரோகன விஜேவீர இறந்து அல்லது கொல்லப்பட்டு ஒரு தசாப்தத்திற்கும் மேலாகிவிட்ட நிலையில் அநுரா, தான் சபாநாயகராக இருந்தகாலத்தில் ரோகன விஜேவீர தான் தலைவராக இருந்தார் என்பது போல் உளறியிருக்கிறார்.

சபாநாயகராக தான் இருந்தபோது ஜே.வி.பி.யின் புதிய படித்த சிந்தனையாளர்கள் எவரும் ஜே.வி.பி.யில் இருக்கவில்லை என்ற தொனியும் அநுராவின் பேச்சில் தெளிவாகவே விழுந்துள்ளது. எனவே அப்போதிருந்த விமலும், டில்வினும் ஏனையோரும் பழைய படிக்காத - சிந்தனையாளுமை அற்ற தலைவர்கள் என்றா அநுரா கூறுகின்றார்.

அப்படியானால் இந்த ஓரிரு ஆண்டுகளுக்குள் அவர்கள் எப்படி அநுராவின் மதிப்பீட்டில் புதிய, படித்த சிந்தனையாளர்கள் ஆனார்கள் என்பது தான் இப்போதைய கேள்வி.

அப்படியானால் அறிஞர் (!?) அநுரா ஜே.வி.பி.யுடன் உறவு கொள்ள ஆரம்பித்தபின்னர் அவர்கள் அனைவருமே படித்த புதிய சிந்தனையாளர்களாக மாற்றம் கண்டு விட்டார்கள் போலும்.

அதிசயம் தான்.

அநுராவை நிறைவேற்று அதிகார சனாதிபதி வேட்டபாளராக ஆதரிக்க ஜே.வி.பி. சம்மதித்து விட்டதா? அப்படியானால் அவர்கள் தமது புரட்சிகர சிவப்பு சிந்தனைகளை (பழைய... மிகப் பழைய...) மூட்டைகட்டி விட்டு, புதிய வரட்சிமிகு நீலச்சிந்தனைகளை (ஒன்றுமில்லை... சி.ல.சு.கட்சி சித்தாந்தங்களைத்தான் கூறுகிறேன்) வரித்துக்கொண்டார்களா? அல்லது அநுராவையே தமது ஞானகுழுவாக ஏற்றுக்கொண்டுவிட்டார்களா?

எப்படியோ விமல் - டில்வின் குழுவை அநுரா படித்த புதிய சிந்தனையாளர்களாக அங்கீகரித்துவிட்டார். அவ்வளவுதான்.

இனிமேல் ஜே.வி.பி.யின் அலுவலகங்களில் ரோகனவிஜேவீரவின் படம் அகற்றப்பட்டு அநுராவின் படம் மாட்டப்பட்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை...

ஆயுதப் புரட்சியில் அம்மா சிறிமாவிடம் தோற்ற ஜே.வி.பி அரசியல் ரீதியில் மைந்தன் அநுராவிடமும் தோற்றுக்கொண்டுவருகிறது போலும்...

நவீன அவிவேக பூரண குருவும் சீடர்களும் உருவாகி வருகிறார்கள் என்று கூறலாமா?

## கதிர்காமரின் கருத்தும்; 'எஜமானி' விசுவாச அறிக்கையும்



'இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வொன்றை காண்பதைவிடவும் இடைக்கால நிர்வாக சபையிலேயே விடுதலைப்புலிகள் அதிக அக்கறை கொண்டுள்ளனர்' - இப்படித் திருவாய் மலர்ந்தருளியிருப்பவர் சந்திரிகா ஆட்சிக் கால வெளியுறவு அமைச்சரும், தற்போது சந்திரிகாவின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தான்.

ஐயா, 'கதிர்'காமரே உங்களின் அம்மணியார் தனது ஆட்சிக்காலத்தில் இனப்பிரச்சினைக்கு ஓர் இறுதித்தீர்வைக் காணப்போவதாகக் கூறிக்கொண்டுதானே ஆட்சிபீடம் ஏறி 'ஆரவல்லி'த் தனமான அதிகாரத்துடன் கூடிய அரசாங்கத்தை உருவாக்கினார். ஆனால் அவரால் அப்படி ஒரு தீர்வு குறித்து முழுமையற்ற ஒரு நல்ல வரைபை மட்டுமே வெளியிட முடிந்ததுடன், இறுதித்தீர்வாக 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற முடிவையே இறுதியாக நடைமுறைப்படுத்த முடிந்தது என்பதை மறந்து விட்டீர்களா?

உங்களின் 'அதியற்புத' ஆலோசனைகள், அனுசரணைகள் தமிழின விரோதச் சிந்தனைகள் ஆகியவைதானே 'போரை' அம்மணியார் முன்னிலைப்படுத்த பெரிதும் உதவியது என்பது உங்களுக்குத்தெரியாதா? என்ன?

அந்த தமிழின விரோத... எஜமானிவிசுவாச செயற்பாடுகளுக்காகத்தானே இன்னமும் உங்களை தனது வெளியுறவு ஆலோசகராகப் பட்டம் சூட்டி தொடர்ந்தும் அதே விசுவாசத்துடன் கைக்கட்டி சேவகம் புரியவைத்திருக்கிறார்.

சட்டம் அறிந்த ஞானி என்று உங்களைக் கூறுகிறார்கள். இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப்புலிகள் ஏன் வலியுறுத்துகிறார்கள் என்பது உங்களுக்கு புரியாத தொன்றல்ல....

புலிகள் இடைக்கால 'தீர்வை' கோரவில்லை... நிர்வாகத்தைத்தான் கோருகிறார்கள்.

ஒரு கட்டமைப்பில் இயங்கியபடி - அதனை நிர்வாகம் செய்தபடி தான் தீர்வு குறித்து நம்பிக்கையுடன் மற்றும் புரிந்துணர்வுடன் பேசமுடியும். இதனையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.


உறுதியான இடத்தில் இருந்து கொண்டு தான் இறுதித்தீர்வு பற்றி விவாதிக்கமுடியும்.

சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு நீதிமன்ற வழக்கு விசாரணை விவகாரமல்ல. ஒத்திவைத்து, ஒத்திவைத்து காலம்கடத்தி நீதியைத் தாமதப்படுத்த....

'கதிர்காமர்'ஐயா அவர்களே நீங்கள் ஒரு சட்டத்தரணியின் பார்வையில்.. குற்றவாளியின் வழக்கறிஞராக செயற்பட்டு, கருத்து தெரிவிக்கிறீர்கள். அவ்வளவுதான். எஜமானி விசுவாசம் அப்படிப் பேசவைக்கிறது. அப்படித்தானே...! விடுதலைப்புலிகள் தமிழ்மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுகிறார்கள்.

நீங்கள் உங்கள் எஜமானியின்... அதாவது சந்திரிகாவின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுகிறீர்கள். உங்களால் இப்படித்தான் ஏதாவது புலம்பிக்கொண்டு இருக்கமுடியும்... என்ன செய்வது? உங்கள் தலையெழுத்து அப்படி!

## 'சிகல உறுமய'வின் புலம்பல் நோர்வேயை வெளியேறட்டாம்!



'எங்களது பிரச்சினையை நாமே தீர்ப்போம் நோர்வே தலையிடுவதை தவிர்த்து வெளியேறவேண்டும். அதன் மூலம் உங்கள் நாட்டின் நற்பெயரைக்காப்பாற்றிக்கொள்ளுங்கள்' - இது சிகல உறுமய கட்சியின் பிரச்சாரச்செயலர் என்று கூறப்படும் 'உதயகம்பன்பிலே' என்பவரின் கூற்று.

இதனை அவர் சிறிலங்காவுக்கு விஜயம் செய்துள்ள நோர்வேநாட்டின் பௌத்த தூதுக்குழுவிடம் தான் கூறியுள்ளார்.

நல்லது உதயகம்பன்பிலே அவர்களே.... உங்களது பிரச்சினைகளை நீங்களே தீர்க்க முடியாமல் போனபின்னர் தானே உலக சமூகத்தினை நீங்கள் மத்தியஸ்தம் பேணுமாறு அழைக்கவேண்டிவந்தது.

சண்டை நடக்கும்போது மட்டும் அதில் பின்னடைவுகளையும் தோல்விகளையும் சந்திக்கும் போதுமட்டும் உலக நாடுகளின் உதவியும் ஆதரவும் தேவை... ஆயுதங்களுக்கும் ஏனைய இராணுவ மற்றும் போர் தொடர்பான உதவிகளுக்கும் மட்டும் எல்லோரிடமும் கையேந்தி - யாசகம் கேட்க உலகெங்கும் ஓட முடியும். அப்போதும் உங்கள் பிரச்சினையை நீங்களே தீர்த்திருக்க முயன்றிருக்கலாமே..!

அதற்கு வக்கில்லை... பலமில்லை...

ஆனால் சமாதானம் என்று வரும் போதும், நீதி நியாயம் பற்றி பேசும் போதும், பிரச்சினைகளின் மூலம் குறித்து ஆராயும் போதும்.... உங்களுக்கு மனம் எரிகிறது, பதட்டம் ஏற்படுகிறது.... கோபம் வருகிறது...

'உண்மை சுடும்.... அதுவே பெரிய உண்மையுமாகும்' அந்த நோர்வே பௌத்த தூதுக்குழுவின் தமது சிறிலங்காவுக்கான விஜயத்தின் நோக்கம் குறித்த உண்மையைப் பின்வருமாறு கூறியுள்ளனர்.

'சிங்கள பௌத்தர்களிடையே நோர்வே மக்கள் காணும் மிலேச்சத்தன்மையை நீக்கும் பொருட்டே நாம் இங்கு வந்துள்ளோம்'


உண்மையை உணர்ந்தவர்கள் உள்ளபடி கூறியுள்ளனர். சிங்கள பௌத்தரின் மிலேச்சத்தன்மையை நோர்வேமக்கள் உய்த்துணர்ந்துள்ளமைதான் இங்கு முக்கிய விடயம். அந்த உண்மை தான் சிகல உறுமயவைச் சுட்டுள்ளது.

பௌத்தத்தின் இதயமாக சிறிலங்கா விளங்குவதாகவும் அதனை புலிகள் பறிக்க முயல்வதாகவும், அதற்கு நோர்வே அவர்களுக்கு ஒத்துழைப்பதாகவும் சிகல உறுமய தலைமை நோர்வே குழுவிடம் ஒப்பாரிவைத்துள்ளது.

பௌத்தத்தின் இதயமாக சிறிலங்கா இருக்குமேயானால் அதாவது உண்மையில் அப்படி இருக்குமானால் - சிகல உறுமய போன்ற பேரினவாத கட்சிகள் இங்கு தோற்றம் பெற்றிருக்க முடியாதே....

'புத்தத்தை சரணடைந்தவன் யுத்தத்தை விரும்பான்' 'சிகலஉறுமய' இதனை புரிந்து கொண்டால் சரி.

## அதாவுல்லாவின் ஆலோசனை; "சிங்களவரை ஆயுத பாணியாக்குங்கள்"



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை உடைத்து முஸ்லிம் மக்களின் ஒருமைப்பாட்டை தனது சுயநல அரசியல் தலைமைத்துவ அபிலாசைகளுக்காக சிதைத்த பெருமைக்குரிய அஷ்ரப் காங்கிரஸ் என்ற பெயரில் இயங்கும் அதாவுல்லா குழுவின் தலைவரான ஏ.எல்.எம். அதாவுல்லாவின் அண்மைக்கால நடவடிக்கைகளும், அவர்விடுத்துவரும் அறிக்கைகளும் அவர் எத்தகைய 'அறிவுக்கொழுந்து' என்பதை தெளிவாக வெளிப்படுத்தியேவருகிறது.

முஸ்லிம் காங்கிரஸை உடைத்த போதே, தனது இனத்தின் அரசியல் ஒருமைப்பாட்டையே எந்தவித தொலை நோக்குச் சிந்தனையுமின்றி, ரவூப்ஹக்கீமுடனான கருத்து முரண்பாட்டின் காரணமாக சிதைக்கத் துணிந்த நபர் அவர் என்பது பகிரங்கமாகியது.

சிறிலங்காவின் பெரும்பான்மையின ஆளும் - மற்றும் எதிர்க்கட்சிகள், சிறுபான்மையினததவரின் கட்சிகளைதமது அரசியல் மற்றும் ஆட்சியல் நலன்களுக்காக பிரித்தாளும் தந்திரோபாயத்தை கையாண்டு, பிளவு படுத்தி, அவர்களின் ஒருமித்த குரலை உதிரிகளாக்கி வலுவிழக்க வைத்த தந்திரோபாயவலையில் சிக்கியவர்களில் ஒருவரான அதாவுல்லாவின் அரசியல் போக்கு ஒட்டுமொத்தமாக - தன்னினத்துக்கு மட்டுமல்ல சிறுபான்மை சமூகங்கள் அனைத்திற்குமே ஆபத்தை விளைவிக்கும் நடவடிக்கைகளாக விரிந்துவருகின்றது.

மிக அண்மையில் அவர் சமாதான நகர்வுகள், இடைக்கால நிர்வாகம், பேச்சுவார்த்தை முன்னெடுப்புகள் ஆகியவை தொடர்பாக விடுத்துவரும் அறிக்கைகள், ஒரு 'சபைகுழப்பி'யின் செயற்பாடுகளாகவே உள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக வடக்கு கிழக்கு இணைந்த இடைக்கால நிர்வாகம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் மட்டும் கொடுக்கப்படக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளமையானது ஒட்டுமொத்த சமாதான முயற்சிகளையும் நிராகரிக்கும் செயலாகவே இருக்கிறது.

இதற்கும் மேலாக, விடுதலைப்புலிகளிடமிருந்து முழுமையாக ஆயுதங்களைக்களையப் படவேண்டும் என்றும் அப்படிக்களையப்படாதுவிட்டால் சகல சிங்களமக்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் ஒரு அதி அற்புதமான 'மாதனமுத்தா' பாணியிலான ஆலோசனையும் அவர் விடுத்துள்ளார்.

இதில் கவனிக்கவேண்டிய விடயம், சகல சிங்களமக்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் என்று தான் அவர் கூறியிருக்கிறார் என்பதேயாகும்.

முஸ்லிம் மக்களை அவர் இதில் சேர்த்துக்கொள்ளவில்லை. அல்லது முஸ்லிம் மக்களையும் சிங்கள மக்களாகவே அவர் கணித்துள்ளாரோஎன்பதும் தெரியவில்லை. அதாவுல்லா அவர்கள் பரந்த சிந்தனையாளர் போலும், சிங்களமக்களின் பாதுகாப்பில் அவ்வளவு அக்கறை அவருக்கு.

அந்தளவு அக்கறை முஸ்லிம்கள் மீது அவருக்கு இருக்கவில்லை. இருந்திருந்தால் 'உடத்தலவின்ன' பகுதியில் தேர்தல்வன்முறைகளின் போது முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை மற்றும் அவரின் 'புத்திரபாக்கியங்களான லொகான் - சானுக்க ஆகியோரின் வழிநடத்தலில் ஆயுதந்தாங்கிய சிங்கள படையினரும் ஏனையோரும் அப்பாவி முஸ்லிம்கள் பலரை ஈவிரக்கமின்றி படுகொலை செய்த சம்பவங்கள் உட்பட அதேபோன்ற பல சம்பவங்களை மறந்து இவ்வாறு பேசியிருக்க மாட்டார்.

மயிலர் பாணியில் சொல்வதானால் அதாவுல்லாவுக்கு அல்லா தான் நல்லபுத்தியைக் கொடுக்கவேண்டும். அவ்வளவுதான்.

**செங்குட்டுவன்**




## நடிகனின் ஆசை



தனது மனைவி மரியாவுடன் பத்திரிகையாளர்களிற்கு மகிழ்ச்சியுடன் உரையாற்றுபவர் வேறு யாருமல்ல. ரேமினேற்றர் நாயகன் எனப்புகழ் பெற்ற நடிகன் சுவாஷினேகர் ஆர்ணோல்ட் தான். அமெரிக்காவின் கலிபோர்ணிய மாநிலத்தின்ஆளுநராக போட்டியிடத் தயாராகும் ஆர்ணோல்ட் தன்னால் அரசியலுக்கு வருவதன் மூலம் மக்களுக்கு அதிகம் உதவலாம் என்கிறார்.பிரபலமாயிருக்கும் இவரின் புகைப்படங்களுக்கு பிரபலமான சஞ்சிகைகளில் இப்போது முதலிடம்.

## நீண்ட குழல்



நீண்ட ஊதுகுழல்களின் அந்தங்களில் காட்சிதருபவர்கள் அல்போன் இசைக்கருவியை மீட்டும் முக்கூட்டு இசைக்குழுவினர். சுவிற்சர்லாந்தின் அல்ப்ஸ் நென்சாடாவில் கூடிய அல்போன் கருவி மீட்டும் கலைஞர்களின் நிகழ்வொன்றில் இவர்கள் அக்கருவியை மீட்டுவதே இக்காட்சி.

## உணர்ச்சிவசம்



கியூபப் புரட்சியின் 50வது ஆண்டு நிறைவை ஒட்டி மென்காடா இராணுவ குடிப்பிரதேசத்தில்இடம் பெற்ற ஒன்று கூடலில் உணர்ச்சி ததும்ப உரையாற்றும் கியூபத்தலைவர் பிடல் கஸ்ரோவின் முகபாவங்கள.

என்றும் அடிபணிய மாட்டோம் என்பதை அடித்துக்கூறுகிறாரோ என்னவோ!.



பேச்சாற்றலில் வன்மை மிக்க பிடலின் உரைகள் எப்பொழுதும் கேட்பவர்களின் உணர்வை தட்டியெழுப்புபவையாகவே இருக்கும். பின்னர் என்ன பேச்சிலே உலக சாதனை படைத்தவரல்லவா! விடுவாரா?



## அடக்கிப்பாருங்களேன்




கட்டுக்கடங்காத குதிரை ஒன்றை அடக்கி அதற்கு சேணம் பூட்ட முயற்சிக்கும் இந்தக்குழுவினர், வோஷிங்ரனின் ஒமேக் நகரில் இடம்பெற்ற 70ஆவது குதிரை அடக்கும் போட்டி நிகழ்வில் போட்டியிட்டனர். கட்டுக்கடங்காத குதிரைகளை குழுக்களாக அடக்குவதும், குதிரைக்கூட்டங்களை அடக்குவதும் இங்குள்ளவர்களின் பொழுதுபோக்கு.

## செல்லக்கடி



தன்முகத்தை முதலை ஒன்றிற்கு செல்லமாக கடிக்கவிட்டுக் காத்திருப்பவர் 66வயதான மெச்சிக்கன் வயோதிபர். மெச்சிக்கோவில் இடம்பெற்ற காட்சி ஒன்றில் தோன்றிய இவர் 47வரையான முதலைகளை பயிற்றுவித்து வருகிறார். இவரிடம் ஐந்து மீற்றரிலும் அதி நீளமான முதலைகளும் உள்ளன.

## பிரமாண்டம்



வட இந்தியாவின் சண்டிகார் நகரில் அமைந்த கிருஷ்ணர் ஆலய விழாவிற்குத் தயாராகும் அசுரப்பொம்மைகளே இவை. ஆகஸ்ட் 19ல் வரும் கிருஷ்ணரின் பிறப்பு நிகழ்வைச் சுட்டும் நிகழ்வொன்றிற்காக அவரின் குழந்தைப்பருவத்தில் அசுரனாக வந்து பாலில் நஞ்சைக் கலந்த ஒரு பெண் உருவத்தையே இச் சிற்பிகள் உருவாக்குகின்றனர். பிரமாண்டத்தின் அளவு தெரிகிறதா?

## புதிய அறிமுகம்



நியூயோர்க்கில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட DVD பதிகருவி இது. கணனி உபகரணங்களுக்கு பெயர்போன hp நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கும் இவ் DVD பதிகருவி மூலம் ஒளிநாடாக்கள், சாதாரண ஒளிப்படங்கள், கணனியில் உள்ள காட்சிகள் என்பவற்றை நேரடியாக DVD யாக மாற்றலாம். இதன் உற்பத்திப் பெயர் dc 3000.

கிடைக்கக்கூடியதன் மேல் ஆசை கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். - மேக்ஸ்வெல்

# விழுதுகளல்ல, வேர்கள்

அம்மாவை முதுமை ஆக்கிரமித்திருந்தது. எனினும் இத்தனையையும் மீறி அவரின் சுறுசுறுப்பான பணிகள் பிரகாசமாய் பளிச்சிட்டன. அம்மாவிடம் செல்லும் இளைஞர்களுக்காக காத்திருக்கும் கருத்துக்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணையத்தூண்டும் தெளிவான கருத்துக்களாகவே இருக்கும். 1983 ஆம் ஆண்டு காலப்பகுதி இளைஞர்கள் தமிழ் தேசியத்தின்பால் ஈர்க்கப்பட்டு எழுச்சி கொண்ட காலப்பகுதியாகும். அக்காலப்பகுதியில் இயக்கத்தில் இணையாத இளைஞர்கள் அம்மாவின் அன்பார்ந்த கண்டிப்புக்குள்ளாகிய நிகழ்வுகளும் நடந்தேயிருந்தன.

## அம்மாவின் எழுச்சி புதிய அத்தியாயத்தின் தொடக்கம்

**இ.கபிலன்**

**மக்கள் விழித்து** எழுந்தால் அந்த எழுச்சியை எளிதில் அடக்கமுடியாது. கட்டுப்படுத்த முடியாது என்பது வரலாறு கண்ட உண்மை.

இவ்வுண்மைக்கு நிகரானதே அழகம்மாவின் வரலாற்றுப்பதிவு.

அழகம்மா யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறையைச் சொந்த இடமாகவும், திருகோணமலை லிங்கநகரை வாழ்விடமாகவும் கொண்டவர். அவர் திருமணம் செய்து ஐந்து பிள்ளைகளுக்குத் தாயானவர். பின்னர் கணவனை இழந்து இருந்தார்.



அம்மா அறுபது ஆண்டுகளாக மேடு, பள்ளங்களை எல்லாம் கண்டு அலுக்காது சலிக்காது வாழ்க்கையைச் சுகமும், சுவையும் ஆக்கிய மனவுறுதியுள்ள பெண்.

அம்மா சிறிது காலம் பிட்டு, இடியப்பம் அவித்து விற்று வந்தார். எனினும் இவை எதுவும்அவருக்கு வசதியான வாழ்க்கையை ஒரு போதும் உருவாக்கிக்கொடுக்கவில்லை. ஆனாலும் சமூகத்தினுள் கௌரவம் மிக்க குடும்பப் பெண்ணாகத்தன்னை நிலைப் படுத்திக்கொண்டார்.

அழகம்மா தான்..... எல்லாம்! வீட்டு நிர்வாகம் என்றாலும் சரி, பிள்ளைகளின் 'பாடுபறப்பு' என்றாலும் சரி, அயலவர், உற்றார், உறவினர் இன்பதுன்ப நிகழ்ச்சிகள் என்றாலும் சரி அம்மாவின் பொறுப்புத்தான்.

இத்தகையதொரு சூழ்நிலையில் அம்மாவின் வாழ்வு நகர்ந்து கொண்டு இருந்தது. இக்காலப்பகுதியில் தான் தமிழ்த்தேசிய இனமான இன் நாட்டின் பூர்வீகத்தமிழர் கள் சிங்களப்பேரினவாத அரசியல் சக்திகளால் மிக மோசமான இன ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்டனர்.

தமிழினத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களது தாய் மண்ணையும் அபகரித்து, அவர்கள் தம்பெயரை தமது மொழியில் சொல்ல முடியாமல் இருப்பிடத்தையே இல்லாமற்செய்து சொந்த மண்ணிலேயே அனாதைகளாக, அகதிகளாக்கப்பட்ட நிலையிற்தான் விடுதலைப்புலிகள் ஆயுதமேந்தி போராட ஆரம்பித்தார்கள்.

ஆயுதப்போராட்டம் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தமிழினம் தமது அரசியற் தகமையைப்பெற்றுக்கொள்ளவும், தமது ஆட்சியை மீள நிலை நிறுத்துவதற்கும் தங்கள் பிரதிநிதிகளிற்கு ஒருங்கிணைந்த ஒரேகுரலில் 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஆணையொன்றை வழங்கினார்கள்.

தேர்தல் காலப்பகுதியில் அம்மா தமிழரின்வாக்கு வங்கியைப்பலப்படுத்தும் அரசியற்பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். இவ்வாறு வெளிப்பட்ட உணர்வு அம்மாவிடம் இயல்பாகவே தோன்றிய உணர்வுகளின் பிரதிபலிப்பாகவே இருந்தது.

அம்மா அரசியற்பணிகளில் பங்களித்த பின்னர் ஆயுதமேந்திப்போராடும் விடுதலைப்புலிகள் இயக்கப் பணிக்காக தன்னை அர்ப்பணிக்க ஆரம்பித்தார். இயக்கத்துடன் அம்மாவின் பிரவாமகன் கப்டன் ரஞ்சன் லாலா முன்னணி செயற்பாட்டு உறுப்பினராக கடமையாற்றிக்கொண்டிருந்தார். அம்மாவிற்கு லாலாவுடன் ஆழமான உறவு, நெருக்கம் இருந்தது. அந்த உறவு லாலாவழியாக மூத்த உறுப்பினர்களான சந்தோசம் மாஸ்ரர், புலேந்தி அம்மான், அம்மாவின் லிங்கநகர் வீட்டிற்கு 1981ஆம்ஆண்டு இறுதிக்காலப்பகுதியில் வருகைதந்தார்கள். மாம்பழம் என்ற இரகசிய பெயரை மாஸ்ரருக்கு அம்மா வீட்டார் தமக்குள் சூட்டிக்கொண்டனர்.

அம்மாவின் வீட்டை ஒரு மறைமுகதளமாக வைத்துக்கொண்டு இயக்கப்பணிகளை விரிவுபடுத்தவும், தீவிரப்படுத்தவும் மாஸ்ரர் மறைமுகமான செயற்பாட்டில் இறங்கலானார்.

இவ்வேலைத்திட்டங்களினது முன்னெடுப்புக் களால் திருமலை மாவட்டத்தில் பரவலான வலை யமைப்புக் கொண்டதோர் இயக்கக்கட்டமைப்பு உருவாகியது. இது செழிப்பான பூமியில் விதைக்கப்படும் ஒரு விதை போன்றது. இன்று இந்த விதையே முளைவிட்டுத் துளிர்த்து வளர்ந்து விருட்சமாகி கிளைபரப்பிக் கொண்டிருக் கின்றது. இப்புதிய அத்தியாயத் தின் தொடக்கத்திற்கு அம்மாவின் பங்களிப்பு ஸ்திரமான முக்கியத்துவம் மிக்கஒன்றாக விளங்கியது.

அம்மாவின் வீட்டுடன் நட்பூடாட்டம் வைத்திருந்த லிங்கநகர் இளைஞர்கள் சிலருக்கு சந்தோசம் மாஸ்டருடன் இணைப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதில் அம்மாவும் உதவலானார். அந்த இளைஞர் களான பேபி, அரியம், மேரி (லெப் இளங்கோ) ஆகியோர் மாஸ்ரரினால் முன்னெடுக்கப்பட்ட மறைமுகச்செயற்பாடுகள் அனைத்திலும் இரண்டறக்கலந்தே இருந்தார்கள்.

இவ் இளைஞர்கள் மாஸ்ரருக்குத்தேவையான அனைத்தும் செய்துகொடுத்தார்கள். அதாவது சிங்களஇராணுவக் கொடுபிடிகளுக்குள் அகப்படாதவாறு திருமலை முகவரிக்குரிய அடையாளஅட்டை செய்து கொடுத்தல், வளமுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல், புதிய உறுப்பினர்களை இணைத்தல், இயக்க வெளியீடுகளை விநியோகித்தல், பாதுகாப்பான தங்குமிடங்களை மாஸ்ரருக்கு ஏற்படுத்திக்கொடுத்தல், ஆகிய பணிகள் மூலம் இயக்கம் ஆழமாக வேரிட இவர்கள் உழைத்தார்கள். அந்தப்பெருமை அம்மா வீட்டாரையே சாரும்.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் தமிழ்ப்பரம் பரையையே அழித்தொழிக்கும் திட்டமிட்ட செயலாகவே இருந்தது. இக்காலகட்டத்தில் அம்மா வீடு சுறுசுறுப்பாகத்துணிவாற்றலுடன் இயங்கியது. லிங்கநகர் இளைஞர்களால் கிண்ணியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 10 கிலோ வெடிமருந்தை மகள் அம்மியில் வைத்து அரைத்துக்கொடுத்தார். அரைத்த வெடிமருந்தை அளவாக பிரித்து இளைஞர்கள் பல எறிகுண்டுகளாக வடிவமைத்தார்கள்.

இக்குண்டிலொன்றை அம்மாவின் மகள் தனது கைப்பைக்குள் மறைத்துக்கொண்டு துணிவாற்றலுடன் பஸ்ஸில் சென்று திருமலை நகர்ப்பகுதியில் வைத்து பேபி, நாதன் ஆகியோரிடம் ஒப்படைத்தார். இக்குண்டு பெரிய கடை மைதானத்துக்கு முன் அமைந்திருந்த சிங்களவரின் ஹோட்டலுக்கு வீசி ஹோட்டல் சேதமாக்கப் பட்டது. இவ்வெற்றிகரமான செயற்பாட்டிற்கு அம்மாவின் மனப்பூர்வமான ஒத்துழைப்பும் மகளுக்கு இருந்தது. அப்போது சிங்களவர்கள், தமிழர்களை ஆங்காங்கே வெட்டி கொலை செய்தும், வீடுகள் கடைகளை எரித்தும் நாசம் செய்தகாலம். அக்காலப்பகுதியில் இக்குண்டு வீச்சு சிங்களவர் மனதிலோர் அச்சத்தை ஏற்படுத்தியது.

இவ்வாறு கலவரங்கள் தீவிரம் அடைந்த காலப்பகுதியில் தான் அம்மாவின் வீடு சிங்களவரின் குண்டு வீச்சிற்கு இலக்காகியது. அதன் போது பரமேஸ்வரி ஆசிரியை, ஸ்ரீ ஆகியோர் காயமடைந்தனர். அம்மாவிற்கோ மகளுக்கோ எதுவும் ஏற்படவில்லை. அம்மா அளவற்ற துணிவை கொண்டிருந்தார். எதுவுமே அம்மாவை அச்சப்படுத்தியதில்லை.

1983 ஆம் ஆண்டு மத்திய காலப்பகுதிக்குப்பின் மட்டக்களப்பு சிறையுடைப்பு ஏற்பட்டது. இவ்வரலாற்றுச் சம்பவத்தின் போது தப்பியவர்களில் இருவரை சந்தோசம் மாஸ்ரர் அம்மாவின் வீட்டில் பாதுகாப்பிற்காக சில நாட்கள் தங்க விட்டிருந்தார். அக்காலப்பகுதியில் அம்மா நெஞ்சுரத்துடன் அக்கடமையை பொறுப்பேற்றுச்செய்து தன் தமிழ்த்தேசியம் மீதான பற்றுணர்வை வெளிப்படுத்தினார்.

அம்மாவை முதுமை ஆக்கிரமித்திருந்தது. எனினும் இத்தனையையும் மீறி அவரின் சுறுசுறுப்பான பணிகள் பிரகாசமாய் பளிச்சிட்டன. அம்மாவிடம் செல்லும் இளைஞர்களுக்காக காத்திருக்கும் கருத்துக்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணையத்தூண்டும் தெளிவான கருத்துக்களாகவே இருக்கும். 1983 ஆம் ஆண்டு காலப்பகுதி இளைஞர்கள் தமிழ் தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்டு எழுச்சிகொண்ட காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் இயக்கத்தில் இணையாத இளைஞர்கள் அம்மாவின் அன்பார்ந்த கண்டிப்புக்குள்ளாகிய நிகழ்வுகளும் நடந்தேயிருந்தன.

அம்மாவின் வீடு தமிழ்த்தேசியம், பாதுகாப்பு, தன்னலமற்ற சேவை, அன்பு ஆகிய பண்புக்கூறுகளை அடையாளப்படுத்தும் உயர் இருப்பிடமாகவே விளங்கியது. இங்கு மூத்த உறுப்பினர்களான மேஜர் கணேஸ், லெப்.கேணல் புலேந்தி அம்மன், கப்டன் ரஞ்சன் லாலா, பொட்டு அம்மன் ஆகியோர் சில நாட்கள் தங்கிச்செல் வார்கள். அவர்களது தினசரி வாழ்வுத்தேவைகள் அனைத்துக்கும் அம்மா வீடுதான் சரணாலயமாக விளங்கியது.

ஒரு தடவை மேஜர் கணேசும், மாஸ்ரரும் வந்திருந்த போது கையில் சூட்கேசுடனேயே வந்திருந் தார்கள். அதனுள் சிறுபொதி வெடிமருந்தும், தோட்டாக்கள், பலதும் இருந்தன. அம்மாவே சூட்கேசை பல நாட்கள் பாதுகாப்பாக வைத்திருந்து மீளக்கொடுத்தார். இக்காலப் பகுதியில் தான் மூத்த உறுப்பினர் லெப்.சீலன் வீரச்சாவடைந்த செய்தி கிடைக்கப்பெற்றது. இதன்பின் அனைத்து மூத்த உறுப்பினர்களும் யாழ்ப்பாணத்தை நோக்கி புறப்பட்டுச்சென்றார்கள்.

இவர்கள் சென்ற சில நாட்களின் பின்னர் திருநெல் வேலித்தாக்குதலில் 13 சிங்களப்படையினர் கொல்லப் பட்டார்கள். இச்செய்தியுடன் அம்மா புன்னகை முகத்தோடு உலா வந்தார்.

"எங்கள் பிள்ளைகள் சிங்களவனுக்கு நல்ல அடி கொடுத்துப்போட்டாங்கள்." என்றவாறே அம்மாவின் வாய் சொல்லிக்கொண்டிருந்தது. அம்மாவின் தமிழ்த்தேசிய அரசியல் அனுபவங்கள் நீண்டவை மட்டுமல்ல. பரந்தவை யுமாகவே இருந்தது.

இக்காலப்பகுதியில் திருமலைக்கடற்படையினரும், சிங்களக்காடையர்களும் இணைந்து தமிழர்கள் மீது பல தரப்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டனர். தமிழர்களது வீடுகள், கடைகள், அழித்தொழிக்கப்பட்டன. இதன்போது அம்மாவும் இடம் பெயர்ந்து நகரில் அமைந்திருந்த வீட்டில் குடியமர்ந்தார்.

இந்த வீடும் காலப்போக்கில் சந்தோசம் மாஸ்ரர் நம்பிக்கையானவர்களைச்சந்தித்து கதைக்கும் சந்திப்பிடமாகவும் மாறியது. அம்மாவும் மகளும் அங்கு வந்து செல்லும் இளைஞர்களை அன்பாக உபசரிக்கும் பண்பு மனநிறைவானது. அதற்கப்பால் தமிழ்த்தேசியத்தின் மீது அம்மாவீட்டார் வைத்திருக்கும் அளவு கடந்த பற்றுணர்வுதான் அங்கு வந்து செல்லும் இளைஞர்களுக்கு அம்மா வீட்டார் மீது அளவற்ற மரியாதையை ஏற்படுத்தியது.

இக்கால கட்டத்தில் அம்மாவின் மகள் மாஸ்ரரின் யாழ்ப்பாணத்திற்கான தொடர்பாளராகவும் செயலாற்றினார். யாழ்ப்பாணம் சென்று வரும் போது ஒரு தடவை மூத்த உறுப்பினர் லெப்.செல்லக்கிளி அம்மானின் புகைப்படங்கள் கொண்டு வந்து பல இடங்களில் விநியோகிக்க உதவினார். அக்காலப்பகுதியில் அப்படம் இளைஞர்களை எழுச்சி கொள்ளச்செய்யக்கூடிய வல்லமையுள்ள பிரச்சார ஊடகமாக இருந்தது.

1983ஆம் ஆண்டு நடுப்பகுதிக்கு பின் லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரரினால் இணைத்துக் கொள்ளப்பட்ட பதினைந்து வரையான இளைஞர்களுக்கு ஆரம்பப்பயிற்சி ஒன்றை திருமலைநகர் விளையாட்டு அரங்கினுள் வைத்துக்கொடுத்து வந்தார். தொடர்பினைச் சீராக பேணவும், மனவுறுதியைப்பரிசீலனை செய்யும் பொருட்டே இது அரங்கேறியது.

இந்நாட்களின் போது ஒரு நாள் புலேந்தி அம்மான் தன் திறமையைக்காட்டிப்பயிற்சி அளித்தார்.அப்பயிற்சியை மேஜர் கணேசும் பார்வையிட்டுக்கொண்டு நின்றார். இத்தகைய பயிற்சிக்குத்தேவையான ஊட்டச்சத்துக்காக பேரீச்சம்பழம், சீனி, பால்மா ஆகியவற்றை இலவசமாக அம்மா குடும்பத்தினர் வழங்கினார்கள். இவ்உதவி அக்காலப்பகுதியில் இளைஞர்கள் மனதிலோர் மதிப்பை அம்மா வீட்டார் மீது ஏற்படுத்தியது. அந்தளவுக்கு திருமலையில் இயக்க நிர்வாகம் நிதி வறுமைக்குள் இருந்த காலம்.

அம்மா குடுபத்தினருடன் உறவாடிவந்த இளைஞர்கள் படிப்படியாகத்திருகோணமலையைவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்தார்கள். சில காலங்கள் அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பயிற்சியை முடித்துக்கொண்டு இயக்கப்பணிக்காக 1984,1985 ஆம் ஆண்டுகளில் திருமலை மாவட்டம் வந்துசேர்ந்தார்கள்

இச்செய்தி அம்மாவின் குடும்பத்தினருக்கு எட்டியதும் அம்மாவின் எண்ணங்கள் யாவும் அன்பாக அரவணைத்த பிள்ளைகளைக்காண வேண்டும். சுவையான உணவு பரிமாறவேண்டும் என்ற நோக்கிலேயே இருந்தது. அம்மாவின் மனதில் வியாபித்திருக்கும் எண்ணங்கள் செயல்வடிவம் பெற்று அது நிறைவேறியது. பிள்ளைகளை சந்தித்துக்கதைத்து இறுதியில் மனஉறுதியுடன் செயலாற்றக்கூடியவாறு கருத்துக்களை பரிமாறி மனநிறைவுடனும், மகிழ்ச்சியுடனும்அம்மா வீடு வந்து சேர்ந்தார்.

(19ம் பக்கம் பார்க்க)

## ஒரு விமர்சனக் கலந்துரையாடல் —

# பனி மலையின் கீழ் உப்பில் உறைந்த உதிரங்கள்

*மெல்லிய* தென்றலை குளிரூட்டி அனுப்பிக்கொண்டிருந்த அந்த அழகிய மலையடிவாரத்தின் கீழ் எங்கோ அவசரமாக ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றுக்கரையோரம் அமைந்திருந்த மண்டபத்தில் குயிலினியின் "உப்பில் உறைந்த உதிரங்கள்" பற்றிய கலந்துரையாடலுக்காய் கூடியிருந்தோம்.

சுவிசில் ஈழத்தமிழ் திரைப்படத்துறையில் ஆர்வமுள்ள இயக்குநர்கள், நடிகர்கள், தமிழீழவிடுதலைப் புலிகள், சுவிஸ் பணியக செயற்பாட்டாளர்கள் மற்றும் கலைத்துறையில் ஆர்வமுள்ளவர்களென முற்பதிற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். இவர்களோடு நிதர்சனத்தின் பொறுப்பாளர் சேரலாதன், ஈழத்துக் கவிஞர் நாவண்ணன், இப்படத்தின் பின்னணி இசையமைப்பாளர் இசைத் தென்றல், தமிழீழப் பின்னணிப் பாடகி தவமலர், இவர்களோடு தனது முதல் திரைப்படம் பற்றிய முதல் கலந்துரையாடல் எப்படி இருக்கும் என்ற எதிர்பார்ப்போடு இயக்குநர் குயிலினி அவர்களும் இருந்தனர். இன்றைய தமிழீழச்சூழ்நிலையில் தமிழீழத்தில் எடுக்கப்பட்ட ஒரு திரைப்படத்திற்கு தமிழீழத்திற்கு அப்பால் வெளிநாடொன்றில் நிகழ்கின்ற இப்படம் பற்றிய கலந்துரையாடலில், அப்படத்தில் பங்குபற்றிய கலைஞர்கள் பங்குகொள்வது ஒரு முக்கியமான நிகழ்வு தான். இது ஒவ்வொருவரது சொல்லாடலிலும் தெரிந்தது.



தாயக விடுதலைக்காக மரணித்த மறவர்களுக்கும் மக்களுக்குமான அகவணக்கத்தோடு நிகழ்வு ஆரம்பித்தது.

முதலில் சுவிசில் எடுக்கப்பட்ட குறும் படங்களான ஜீவனின்
அ-"நிழல் யுத்தம்"
ஆ-"Feel The Bain"
இ-"எச்சில் போர்வை"
கலைச்செல்வனின் "உருகும் பனிப்பூக்கள்" திரையிடப்பட்டன.



இடைவேளைக்குப் பின் "உப்பில் உறைந்த உதிரங்கள்" திரையிடப் பட்டுதொடர்ந்தது விமர்சனக்கலந்துரையாடல்.

இவ் அரங்கை தொடக்கி வைத்துப்பேசிய அன்ரன் பொன்ராசா அவர்கள் கூறுகையில்;

இது ஒரு முழுநீளப்படம். இப்படம் பற்றிய விமர்சனத்தை பொதுவாகச்சொல்லாமல். குறிப்பிட்ட சில விடயங்களை அதாவது. நடிப்பு, ஒளிப்பதிவு, இசை, ஒலிப்பதிவு போன்றவற்றைப்பற்றி விவாதித்தால் சம்மந்தப்பட்டவர்களுக்கு பிரயோசனமாக இருக்கும் என்றார்.

முதலில் இப்படம் பற்றிய ஜீவனின் கருத்து கேட்கப்பட்டது.

### சுவிஸிலிருந்து சுமி சுரேஸ்

கடந்த சில மாதத்தில் "கடலோரக்காற்று" படம் பார்த்துவிட்டு நண்பர்களுக்கு சொன்னேன், இன்னும் 2 வருடங்களில் நல்ல திருப்பங்களோடு குறும்படங்களல்ல, நீண்ட திரைப்படங்கள் வருவதற்கான, சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய திரைப் படங்கள் வருவதற்கான அறிகுறி இதில் தெரிகிறது என இப்படத்தில் எனக்குப்பிடித்த விசயம், இங்கு இடம்பெறும் தாக்குதலில் நாமும் பங்குகொள்வது போலிருக்கிறது. கொடூரம் இதில் தெரியவில்லை. இது ஒரு பெரிய வெற்றி. கதைதான் தளம்பியிருக்கிறது. ஒருபெண் போராளியின் நினைவினூடே ஆரம்பிக்கின்றது அவரினூடே போகின்ற கதை பின் சிதறுகிறது. எல்லாக் கதாபாத்திரங்களிலும் அவர் கலந்திருப்பாராகில் நன்றாக இருந்திருக்கும்.

அப்படிப்பட்ட கருத்துக்களைத்தான் நாம் வரவேற்கிறோம். அவைதான் மற்றைய படங்களில் எங்களைத்திருத்திக்கொள்ள உதவும். எனவே உங்கள் அனைவரிடமிருந்து கூடியவரை காரசாரக் கருத்துக்களையே எ்திர்பார்க்கிறோம்.

புண்ணியமூர்த்தி தொடர்ந்தார்.

தமிழீழ போராட்டவரலாற்றில் மகிழ்ச்சியான விசயம் என்னவென்றால் பெண்கள் போராட்டகளத்திற்கு வந்தது மட்டுமல்ல, கலைத்துறையிலும் தங்களால் சாதிக்கமுடியும் என்பதோடு தொழிநுட்ப ரீதியாகவும் சரி கலைரீதியாகவும் சரி. பங்கு பெறுவது ஒரு முத்திரை பதிக்கக்கூடிய விசயம் எனச்சொல்லலாம். இது குயிலினிக்கு குழந்தைப்பருவம். மேலும் நல்ல சிறந்த படங்களைத்தருவார் என்ற நம்பிக்கை இப்படத்தில் தெரிகிறது. இசை- இது ஏற்கனவே. தமிழீழத்தில் நன்றாக வளர்ந் திருக்கிறது. ஈழத்துப்பாடல் நிலை என்ற நிலையிலிருந்து. தமிழீழ இசையாக மலர்ந்த ஓர் ஆரோக்கியமான போக்கில் இப் படத்திற்கு கை கொடுக்கிறது. பாடல் காட்சியை படமாக்கும் கலை மிகவும் அழகாக இருக் கிறது. இது இப்படத்தில் மட்டுமல்ல "கடலோரக்காற்று" மற்றும் ஒளிவீச்சு ஒளி நாடவில் வரும் குறும்படங்களில் பல இடங் களில் பார்த்திருக்கிறேன். இயற்கையோடு பின்னிப்பிணைந்த விசயம். காட்சிகளிடையே தொடர்பு போன்றவை அற்புதமாக படம்பிடித் திருக்கிறார்கள்.

ஒரு சில Special Effect பாடலில் பாவித்திருக்கிறார்கள். இதுபோன்ற Effect ஐ பாவிக்காமல் விடுவது நல்லது. ஏனெனில் ஒரு சில காலங்களில் அவை மாறிவிடும். ஆனால் திரைப்படங்கள் என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டியவை. மற்றும் சிங்கள இராணுவத்தை தொலைநோக்கில் அதாவது போராளிகளின் நோக்கில் படம் பிடிக்கப் பட்டிருக்கிறது. அதைவிடுத்து அவர்களோடு சேர்ந்து இருந்தால் ஈடுபாடு கூடியிருக்குமென நினைக்கிறேன். தவறி விழுகின்ற போராளி பற்றி தப்பிவருபவர்கள் எவருமே நினைக் காதது இங்கு தொங்கிநிக்கிறது. அவர்கள் தவறியவரை நினைத்து ஓ காணவில்லை எனப்பரிதாபப்பட்டால் எங்களுக்கும் ஓர் ஆறுதல் ஏற்பட்டிருக்கும். குயிலினிக்கு எனது வாழ்துக்கள். முடித்துக்கொண்டார்.

அடுத்து திரு. புண்ணியமூர்த்தியிடம் கருத்து கேட்கப்பட்டபோது

எனது கருத்துக்கள் கொஞ்சம் காரசாரமாகத்தான் இருக்கும். எனத்தொடங்கினார்.

குறுக்கிட்ட சேரலாதன் அவர்கள்

கடல் போராளிகளைப்பொறுத்தவரையில் கடல் அவர்கள் வாழ்வில் ஒன்றாக, கலந்த ஒரு விசயம், அது இப்படம் முழுவதும் காட்சிகளின் பின்னணியில் வருவது ஒரு நல்ல விசயம். அதன்படி பார்த்தால் கடலும்



நடித்திருக்கிறது. அதை அற்புதமாக கமராவுக்குள் கைப்பற்றமுடிந்தகலைஞருக்கு எனது வாழ்த்துக்கள். மீண்டும் தொடர்கிறேன்



என முடித்தார்.

திறந்து கிடந்த யன்னலினால் வந்த இதமான காற்று எல்லோர் முகத்தையும் தடவி மீண்டும் வெளியே ஓடிற்று. அது என்ன செய்திகொண்டுபோயிற்றோ?

இக்கலந்துரையாடலை தொடக்கிவைத்து பேசிய திரு.அன்ரன் பொன்ராசா அவர்கள் மீண்டும் பேசும்போது.

ஆரம்பத்தில் கதையை நகர்த்துகின்ற பெண் போராளி சண்டைக்களத்தில் அப்படியே விடப்படுகிறார். உண்மை நிகழ்வு எப்படி இருக்கலாம் இப்போராளி இரண்டாந்தரத் திற்கு தள்ளப்படுவதுதான் இயக்குநரின் நோக்கமெனில் அது சரி. ஆனால் அப்போராளியின் பாத்திரம் தான் இக்கதையில் முக்கியமென்றயடியால். அப்பெண் பற்றிய தேடல்களையோ அல்லது அவர் பற்றிய முக்கியத்துவமோ கொஞ்சம் அதிகரித்திருக்க வேண்டுமென நினைக் கிறேன். ஏனெனில் நாம் பார்க்கும்போது. ஒரு சண்டைப்படத்தைப்பார்பது போல் ஒரு உணர்வுதான் தெரிகிறது. அப்பெண் தனியாக கரைசேர்வது பெரிதுபடுத்தப்படவில்லை. அது உன்னிப்பாக கவனிக்கப் பட வேண்டியிருக்கிறது.

மற்றும் தமிழீழ படங்களில் முக்கிய பிரச் சனை உரையாடல்கள். போராடுவதற்கு பயிற்சி எவ்வளவு முக்கியமோ அதே போல் நடிப்பதற் கும் பயிற்சிகள் முக்கியமாக இருக்கின்றன. உதாரணமாக உரையாடல்களுக்கான வாயசைவுப்பயிற்சி. இவற்றை உள்வாங்கி செய்திருந் தால் சிறப்பாக இருந் திருக்கும். இசையானது பார்வையாளனின் செவிகளினூடாக சென்று அவரை கூட்டிச்செல்ல வேண்டும். இப்படத்தில் சில இடங்களில் அது தடுமாறுகிறது. சண்டைக் காட்சிகள் மிகவும் துல்லியமாக Hollywood படங்கள போன்று இருக்கின்றன குறிப்பாக கடல்காட்சி கள். உண்மையான கடலில் எடுக்கப்பட்டவை. ஆனால் செட் அமைப்பு போட்டு எடுத்தது போன்று சிறப்பாக செய்திருக்கிறார்கள் என முடித்தார்.

(மிகுதி அடுத்தவாரத்தில் முடியும்.....)

---

## உளவியல்

# தற்கொலை பற்றிய சில தவறான எண்ணங்கள்...

தற்கொலை செய்து கொள்பவர் களையும், தற்கொலை முயற்சியில் ஈடுபடு பவர்களையும் 4 வகையாகப்பிரிக்கலாம். அடிப்படையில் அவர்களின் செயலுக்கு ஒரு சித்தாந்தம் உண்டு.அதனைப்பொறுத்து அவர்களுக்கு சிகிச்சையும் வழிகாட்டுதலும் அமைய வேண்டும்.

முதல் வகையினர் தனிமையால் அவதிப்படுவார்கள். அச்சமும் கையறு நிலையும், தோல்வி மனப்பான்மையும் குடி கொண்டிருக்கும் இவர்கள் பிறரோடு இயல் பான உறவு கொள்ள முடியாதவர்கள். இவர்களுக்கு தீவிரமான மனச்சிகிச்சை யோடு, மனிதஉறவின் மேன்மையும் கற்பிக்கப்படவேண்டும்.

இரண்டாவது வகையினர் முதி யோர், வாழ்வில் சுகத்தை இழந்தவர்கள், வியாதியின் காரணமாக வலியால் துடிப் பவர்கள். இவர்களுக்கு தேவையான சிகிச்சை மூலம் உடல்கோளாறுகளை களை வதோடு - வலியிலிருந்து மீள தகுந்த மருந் துகளை அளிக்க வேண்டும். குடும்பச் சூழ் நிலை சிகிச்சைமுறையின் மூலமே இவர் களை வழிக்குக்கொண்டுவர முடியும்.

மூனறாவது வகையினருக்கு இறப் பைப்பற்றிய மனப்பான்மையே வேறாக இருக்கிறது. இப்பிறவி முடித்து அடுத்த பிறவியில் வேறு உருவில் வாழலாம் என்ற நம்பிக்கை பிரதானமாக இருக்கிறது. எனவே சிகிச்சை மத-வழிபாட்டு அடிப்படை அமையவேண்டும்.

நான்காவது வகையினர் மன நோயாளியாவர்! இவர்கள் மனத்தின் உந்து தல் காரணமாக வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணுபவர்கள்! இவர்களுக்கு மனோதத்துவ சிகிச்சையோடு மருந்துகளும் தேவைப்படும்.


தற்கொலை செய்து கொள்ளப் போகின்றேன் என்று சொல்பவன் - செய்ய மாட்டான் என்பது தவறான எண்ணமாகும். சிலர் முன்கூட்டியே திட்டமிட்டு தற்கொலை செய்து கொள்கின்றனர். சிலர் திடீரென்று செய்து கொள்கின்றனர். ஆனால் தற் கொலை எந்தவிதமான முன்னெச்சரிக் கையும் இல்லாமல் தற்செயலாக நடை பெறுகின்றது என்பது தவறான கருத்தாகும். தற்கொலை செய்து கொண்டவர்கள் முன் கூட்டியே ஏதாவது ஒரு வகையில் தங் களின் எண்ணங் களை வெளிப்படுத்து கின்றனர். யாரோ ஒருவரிடமாவது அவர்களின் எண்ணத்தை வெளிப்ப டுத்திவிடுகின்றனர். ஆனால் அதை அறிந்தவர்களின் அலட்சியம் இவரின் உயிர் இழப்பாக முடிந்து விடுகின்றது.

தற்கொலை செய்து கொள்பவர் கள் விரும்பியே அந்த முடிவை ஏற்றுக் கொள்கின்றனர் என்பது தவறாகும். அது போலவே தற்கொலை செய்து கொள்ள முயன்று தோல்வி அடைந்தவன் திரும்பவும் முயற்சி செய்வான் என்பதும் தவறே. தற்கொலை எண்ணம் பரம்பரையாக வருவது என்பதும் பணக்காரர்கள் தான் அதிகமாகத் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்பதும் தவறான எண்ணமே. தற் கொலை முயற்சிக்கு சாதி - மதம், ஏழை - பணக்காரன் என்கிறபேதமே இல்லை. எல்லாத் தற்கொலையும் மனநோயின் விளைவு என்பதும் தவறான கருத்தாகும்.

டாக்டர். ஜி.ராஜமோகன்

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

## அத்தியாயம் - 09



அரிவுவெட்டு ஆரம்பமாகிவிட்டது.

பச்சைநிற பயிரெல்லாம் மஞ்சள் நிறமாய் பரவியிருந்தது.

முற்றிப்பழுத்து சரிந்து கிடந்த நெல்மணிகளைப்பார்க்க மனதுக்கு ஆனந்த மாய் இருந்தது.

அருகில் உள்ள வயல்காரர் எல்லோரும் வந்து கூட்டமாக அரிவி வெட்டி னார்கள். பண்டா, அருநோசு, மரியக்கண்டு, செல்லத்துரை ஆகியோருடன் அவரவர் கமங்களில் நிற்பவர்களுமாக மொத்தம் பன்னிரெண்டு பேர் வந்து வெட்டினார்கள்.

வேலாயுதம் ஒரு நிமிடம் ஓய்ந்து இருக்கவில்லை. சரசர வென்று மற்றவர்கள் கதிரை அறுத்து வைப்பதை சிவம் வியப் போடு பார்த்தான். அவர்களைப்பார்த்து தானும் கதிரை அறுத்து வைத்தான். பழக்கமற்ற வேலை என்பதால் தொடர்ந்து செய்ய சிரமமாய் இருந்தது. குனிந்து நிமிர முதுகிலும் இடுப்பிலும் பிடித்துக்கொண்டது.

சிவம் தனது இயலாமையை காட்டிக்கொள்ளாமல் முடிந்த அளவு வேலை செய்தான். கதிர்கள் குவியல் குவியலாக அறுபட்டு வயல்பரப்பில் பரந்து கிடந்தது.

இரண்டு நாட்கள் வெயிலில் காய விட்டு சூடு வைத்தார்கள். மரியக்கண்டு கூடவே நின்று எல்லாம் செய்தான். அந்த வேலை நேரங்களில் தன்னைப்பற்றிய கதை களையும் சொல்வான். "நம்ம ஊரில உழை க்க முடியாதுங்க. வானம் பார்த்த பூமி ரெண்டு மூணு வருஷமா மழையே இல்லை. சீவியம் ரொம்ப கஷ்டமுங்க. நமக்குத் தெரிஞ்சவங்க தான் சிலோனுக்குப்போனா உழைக்கலாம்னு சொல்லி வந்துசேர்ந்தேங்க. உழைச்சு ஊருக்கு காசு அனுப்பணும். பெஞ்சாதி புள்ளைங்க பார்த்திட்டிருக்குங்க. உங்க எல்லோரோட வயல்லயும் எனக்கு வேலை கிடைச்சா போதுங்க. உழைச்சிடுவேன்."

மரியக்கண்டுவின் அப்பாவித் தனமான இயல்பு, வஞ்சகமற்ற உழைப்பு, விசுவாசமான தன்மை எல்லாமே சிவத்தை மிகவும் கவர்ந்தது.

அன்று சூடடிப்பதாய் தீர்மானித்தார் கள். மழை நன்றாய் விட்டுத்தந்திருந்தது. மதியம் தாண்டியதுமே ஆயத்தங்களைச் செய்யத்தொடங்கினார்கள். வயலின் மேட்டுப் பகுதியின் நடுவில் கள்க்கட்டை நட்டு சுற்றி கதிர்ப்பாய்களை பரவி விரித்து வைத் தார்கள்.

நெற்கதிர்களை கொண்டுவந்து பாயில் குவித்தார்கள். பத்து மாடுகளை கயிற்றால் பிணைத்து மறுமுனையை கட்டை யுடன் இணைத்துக்கட்டினார்கள். நீளக்கம்பு கொண்டு மாடுகளை கலைக்க அவை வட்டமாய் கதிர்களை மிதித்து நடந்தன. அந்த எல்லையில் நான்கு புறங்களிலும் பந்தங்கள் எரிந்து வெளிச்சத்தை தந்து கொண்டு டிருந்தது. வட்டமாய் நடந்து கொண்டிருக்கும் மாடுகள் சாணம் போடும் போதெல்லாம் அவை கீழே கதிருக்குள் விழுந்து விடாமல் இருக்க வேலாயுதம் ஓடிஓடி கடகத்தில் ஏந்தினான்.

மாடுகள் சுற்றிச்சுற்றி மிதிக்க வைக்கோலிலிருந்து நெல் மணிமணியாய்ப் பிரிந்தது. வைக்கோலை உதறிப்பிரித்து அப்பால் போட்டார்கள். காற்று வளம் பார்த்து குல்லத்தால் நெல் தூற்றினார்கள். நெல்லை அள்ளி அள்ளி சாக்குகளில் போட்டு முடிச்சு முடிச்சாக கட்டினார்கள். அந்த நெற்குவியலுக்குள் கைவைத்து அளைந்த போதும் அள்ளி அள்ளிக்கட்டிய போதும் எல்லையில்லாத மகிழ்ச்சி ஏற் பட்டது. புதுநெல்லின் வாசனை மூக்கை வந்து நெருடியது.

தொடர்ந்து நாலைந்து நாட்கள் வேலை நடந்தது. "நினைச்சதை விட நல்லாய் பொலி அடிச்சிருக்கு"

பக்கத்தில் போடப்பட்டிருந்த கொட்டிலுக்குள் நெல் மூட்டைகளை அடுக்கினார்கள். நான்குமாத உழைப்பும் அலைச்சலும் ஓய்வுக்கு வந்தது. அப்பாடா என்று மூச்சு விட்டார்கள்.

சுற்றுப்புறக் காணிகளின் அரிவுவெட்டு சூடடியின் போதும் இவர்கள் போய் உதவி செய்தார்கள்.

சிறுபோக விதைப்பு தொடங்க முதல் நெல்லின் ஒரு பகுதியை விற்றுக் கொண்டு ஊருக்குப்போனார்கள்.

போகும் போது சாப்பாட்டுக்கும் நெல் மூட்டைகளை வண்டிலில் ஏற்றிக் கொண்டு போனார்கள்.

அப்போது தான் வேலாயுதத்தின் கல்யாணப்பேச்சை அப்பு எடுத்தார்.

முதலில் தனக்கு இப்ப கலியாணம் வேண்டாம் என்று வேலாயுதம் சொல்லிப் பார்த்தான். அப்புவும் ஆச்சியும் விடவில்லை. சிவம் அன்னத்திடம் ஓடிப்போய் ரகசியமாய் கேட்டான் "ஆரடி பொம்பிளை...."

"வேற ஆர் எங்கட கனகம் மச் சாள் தான்."

"அட பிறகு ஏன் அண்ணை வேண் டாம் எண்டு சொல்லுறார்."

"அவர் மச்சாளை வேண்டாம் எண்டு சொல்லேலை.கலியாணம் இப்ப வேண்டாம் எண்டு தான் சொல்லுறார்."

அவனுக்கு காரணம் புரிந்தது. தலைவாசல் திண்ணையில் அமர்ந்திருந்த அண்ணனை யோசனையுடன் பார்த்தான்.

கனகம்மச்சாள் அப்புவின் தங்கச் சியின் மகள். அவளை மருமகளாக கொண்டு வரத்தான் அப்பு ஆச்சிக்கு விருப் பம் இருந்தது. அவனுக்கும் கனகம் மச் சாளை பிடிக்கும். அண்ணையின் சுறு சுறுப்புக்கு பொருத்தமானவள் தான்.

அவன் வேலாயுதத்தின் பக்கத்தில் போய் அமர்ந்தான். வேலாயுதம் திரும்பி அவனைப் பார்த்தான்.

"ஏன் அண்ணை அப்பிடிச்சொன் னனி."

"இப்ப கலியாணம் வேண்டாம். கொஞ்சம் பொறுத்துச்செய்வம் எண்டு தான் சொன்னனான்."

"அதுதான் ஏன்"

"இப்ப கலியாணம் செய்து அங்க கூட்டிப்போய் இருக்க முடியாது. எனக் கெண்டு ஒரு காணி வேணும். ஒரு சின்னக் கல்வீடு கட்டவேணும். கனகத்தை கூட்டிக் கொண்டுபோய் இருக்கிறதெண்டால் சில வசதியள் வேணும். அந்தக்கொட்டிலுக்க இரு க்க ஏலுமே. அதுதான் "

"சரி அண்ணை. காணி கிடைச்சு வீடுகட்டின பிறகு கூட்டிப்போகலாம் தானே. இப்ப கலியாணத்தைச்செய்யன். அங்க போற வரைக்கும் மச்சாள் இங்க இருக் கட்டும். நீ வந்து வந்து பார்த்துக் கொள்ளலாம் தானே."

அதெல்லாம் கரைச்சல். வயலை விட்டிட்டு இங்க அடிக்கடிவரஏலாது."

"அதெல்லாம் வரலாம். நான் அங்க இருந்து பார்த்துக்கொள்ளுவன் தானே. நீ ஒண்டுக்கும் யோசிக்காதே அண்ணை. கலி யாணத்தைச்செய்" ஒரு வழியாய் வேலா யுதத்தைச் சம்மதிக்க வைத்தான்.

அடுத்த புதன்கிழமை கனகம் வீட்டில் சோறு குடுப்பித்து கலியாணம் நடந்து முடிந்தது. வேலாயுதத்தின் கலியாண நிகழ்வோடு இருவரும் சேட்டு அணியத் தொடங்கினார்கள்.

"நீ கொஞ்ச நாளைக்கு நிண்டிட்டு வா. நான் முதல்ல போறன்"

சிவம் வண்டிலில் பரந்தனுக்கு வந்து விட்டான். ஏதோ எல்லாப்பொறுப் பையும் தானேஏற்றுக்கொண்டது போல உணர்ந்தான்.

மரியக்கண்டுவுடன் சேர்ந்து வரம்பு செதுக்கிக்கொண்டிருந்த ஒரு காலைப் பொழுதில் கார்த்திகேசு வந்தான். சிறிது நேரம் நின்று அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தான். அப்போது தான் மரியக்கண்டு சொன்னான்.

"வர்ற பங்குனித்திங்களுக்கு பொறிக்கடவை அம்மன் கோயிலுக்கு போக லாமுங்க. பொங்கல் பூசையோட விடிய விடிய கூத்தும் நடக்கும்.போன வருஷம் கணேசபுரத்தில இருந்து வண்டி கட்டிக்கிட்டு போயிருந்தோம்."

சிவமும் கார்த்திகேசுவும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"போய்ப்பார்க்கலாம் தான். என்ன சிவம் போவமா?"

"அதுக்கென்ன எப்ப எண்டு தெரி ஞ்சா எங்கட வண்டிலிலயே போயிட்டு வர லாம்."

"எந்தத்திங்கள் பூசை பொங்கல் கூத்து நடக்கும் எண்டு விசாரிச்சு வையு ங்கோ. போவம். அப்ப நான் போட்டு வர ட்டே. அங்க வரம்பு செதுக்க ஆட்களை விட்டிட்டு வந்தனான்"

ஒரு வாரத்தின் பின் வேலாயுதம் வந்து விட்டான்.

"என்னண்ணை அதுக்குள்ள வந்திட்டாய்."

இங்க எவ்வளவு வேலை கிடக்கு. அங்க நிற்க ஏலுமே. வரம்பு செதுக்க வேணும் உழவு ஒழுங்குகள் பாக்க வேணும். விதைப்புக்கு ஆயத்தம் செய்ய வேணும்"

"ஏன் இதெல்லாம் நான் பாக்க மாட்டேனே" சிவத்துக்கு குரல் இறங்கிப் போயிற்று. இதெல்லாம் நான் பாத்து வைப்பன் தானே. நீ விதைக்கிற நேரம் வந்திருக்கலாம்"

"இங்க உள்ள வேலையளை நினைச்சா அங்க நிற்க மனம் வருமே. பாப்பம் விதைப்பு முடிஞ்சாப்பிறகு ஒருக்காப் போய் வருவம்."

இந்த சிறுபோக விதைப்புக்கு ஊரி லிருந்து ஆட்களை கொண்டு வரவில்லை. மரியக்கண்டு போல வந்து நின்ற பலரும் ஒன்று சேர்ந்து வயல்வேலைகளுக்கு வந்தார்கள்.

"வாற திங்கள் பொறிக்கடவை அம்மன் கோயில் பொங்கலாம். போட்டு வரப்போறம் அண்ணை."

வேலாயுதத்திடமும் கேட்டு வைத்துக்கொண்டான். இங்க வந்ததிலிருந்து சிவம் அதிகமாய் எங்கும் போனதில்லை. மனிதர்களையும் இடங்களையும் பார்க்கும் ஆவல் அவனிடம் இருந்தது. இப்போது கோயிலுக்குப் போவதில் பெரும் உற்சாகம் ஏற்பட்டது.

பொங்கல் அன்று காலையில் கார்த்திகேசு அவர்கள் வீட்டுக்கு வந்து விட்டான்.

நீயும் கோயிலுக்குவாவன் அண்ணை"

சிவம் கேட்டுப்பார்த்தான்.

"உங்களுக்குத்தான் பார்க்கிற வயது. போய்ப்பாருங்கோ. எனக்கு இங்க எவ்வளவு வேலையள் இருக்கு"

வேலாயுதம் வர மறுத்தது மனதுக்கு குறையாக இருந்தது.

எந்தநேரமும் இவருக்கு வேலை தான்...

வண்டிலில் சிவத்துடன் கார்த்தி கேசு, மரியக்கண்டு, செல்லத்துரை எல்லோ ரும் ஏறிக்கொண்டார்கள். மாடுகள் பூநகரி வீதியில் ஏறி மேற்காக நடக்கத்தொடங்கின. தெருவின் திருப்பத்தில் உள்ள பாலம்கடந்து போனார்கள்.

"அங்க சந்தியில நிண்டு பியோன் ஏரம்பு கை காட்டிறான். கோயிலுக்குத்தான் வாறான் போல. நிண்டு ஏத்திக்கொண்டு போவம்"

செல்லத்துரை சொன்னதும் சந்தியில் வண்டிலை நிறுத்தி ஏரம் புவையும் ஏற்றிக்கொண்டு போனார்கள்.

பாதையின் இருபக்கமும் மரங் களும் பற்றைகளுமாகவே இருந்தது. சிறிது தூரம் வரை எந்த மனிதர்களையும் காண முடியவில்லை. ஓவசியர் சந்தி கடந்து குஞ்சுப்பரந்தனை நெருங்கினார்கள்.

இப்போது தூரத்தூரக்குடிசை களும் வயல் வெளிகளும் தென்பட்டன. மனிதர்களின் நடமாட்டமும் இருந்தது. பெண் கள் இடுப்பில் குடத்துடன் நடந்து கொண் டிருந்தார்கள். பரந்த வெளியில் பனை மரங்கள் சிறுசிறு கூடலாக நின்றிருந்தன. காலை வெயில்பட்ட காற்று இதமாக வந்து முகத்தில் மோதியது.

மரியக்கண்டு பாதை சொல்லிக் கொண்டு வந்தான்.

'நா இங்க நாலைஞ்சு தடவை வந்திருக்கேன். காட்டில வேட்டைக்குப் போறவங்க இங்க இருக்காங்க. மாரின்னு ஒருதனை நல்லாத்தெரியும். அவன் கிட்ட மான் மரை பண்டின்னு இறைச்சி எடுக்க வந்தி ருக்கேன். அந்தா அந்த ஒற்றையடிப் பாதைக் கப்பால தான் மாரியோட வீடு. நல்ல காட்டுத் தேனும் அவன் கிட்ட எடுக்கலாம்."

சிவத்துக்கும் காட்டு வேட்டைக்குப் போகும் ஆசை எழுந்தது. ஆனால்அண்ணன் என்னசொல்வானோ என்ற தயக்கம்.

ஒரு தடவை அந்த மாரியைப் பார்க்க வேண்டும்.

"எதிரே வர்ற இடது புற வீதியில திரும்புங்க"

வண்டில் திரும்பியது.

மண்சாலை சிவப்பு நிறமாய் புழுதி பறக்க நீண்டிருந்தது.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

"இது தான் கோயில். எதிர்ப்புறம் இருக்கிற வயல்வெளியில வண்டிலை நிறுத்தியிட்டு வாங்க"

சிவமும் கார்த்திகேசுவும் ஆர்வ மாய் பார்த்தார்கள்.

பரந்த இடம். சிறுசிறு மரங்கள் நடுவேகொட்டிலுக்குள் அம்மன்.

சுற்றிலும்நிறைய ஆட்கள் சாம்பி ராணி, கற்பூர வாசனை. அன்று அந்த அம்மன் கோவிலில் தான் அவர்கள் விநா சியைச்சந்தித்தார்கள். (தொடரும்...)




மருதமடு மாதாவே!
உனைத் தேடுவோர் துயரம் அகல,
இவ் ஊரிலே உன்புகழ் பரவ-
எங்கும் ஒளியருள் வீசி வருக!

விவசாய உரவகைகள்,
கிருமிநாசினிகள், உழவு இயந்திர
உதிரிப்பாகங்கள், கட்டடப்பொருட்கள்,
துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
ஆகியவற்றை மலிவாகப்பெற்றுக்கொள்ள
நாடுங்கள்.

**க.டோனேசன் அன் பிறதர்ஸ்**

பிரதான வீதி, முருங்கன்.

T.P.NO:- 023-22 32603
023-22 32604

(சி-8321)




இந்நாட்டில் நிரந்தர
சமாதானமும் அமைதியும் நிலவ
மருதமடு மாதாவே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**அன்ரன் காட்வெயர்ஸ்**

சகல வகையான இரும்புப் பொருட்கள்
கட்டடப் பொருட்கள்
பெயின்ற் வகைகள்மின்சார பாவனைப் பொருட்கள்
துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள்
மீன்பிடி உபகரணங்கள்

**விற்பனையாளர்**

பெரிய கடை, மன்னார்.

T.P :- 023 - 2232881 (சி-8322)




மருதமடு அன்னையின்
அருள் நம் எல்லோருக்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.

இலகு தவணைக்கட்டண முறையில்
இரண்டு வருட உத்தரவாதத்துடன்
புதிய கணனிகளைப் பெற்றுக்கொள்ள
உடன் நாடுங்கள்.

**NORTHERN TECHNOLOGY(PVT)LTD.**

கணனிஉலகின் காட்சிப்பெட்டகம்.

இல.52, இரண்டாம் குறுக்குத் தெரு,
புறக்கண்டிவீதி, வவுனியா.- T.P:- 024 - 21649
இல.20, கன்னாதிட்டிவீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 - 2225653
புனித செபஸ்தியார்வீதி, சின்னக்கடை, மன்னார்.

(சி-8323)




மருதமடுத் திருப்பதியில் அருளாட்சி புரியும்
அன்னையின் அருள்வேண்டி நிற்கின்றோம்.

**ஏஞ்சல் மூக்குக் கண்ணாடி நிலையம்**

***Angel Optictian***

வன்னி மக்களின் நலன் கருதி மிகக்
குறைந்த விலையில் தரமான பிரேம்களைக்
கொண்ட மூக்குக் கண்ணாடிகளை
உங்கள் அருகாமையில் உடனுக்குடன்
பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்
பிறேம், லென்ஸ்,சண்கிலாஸஸ்

உங்கள் விழிகளின் பாதுகாவலர்

இலவச கண் பரிசோதனை

ஏஞ்சல் ஒப்டீசியன்,
1/1 ஆஸ்பத்திரி வீதி,
மன்னார். T.P:- 023 - 2232221.

Angel Optictian,
1/1 Hospital Road,
Mannar. (சி-8324)




மன்னார் ஆயர்
மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையின்
— ஆசிச்செய்தி —



இலங்கை மண்ணில் கிறிஸ்தவம் தொடங்கி இற்றைக்கு ஏறக்குறைய 500 வருடங்களாகின்றன. கிறிஸ்தவம் எம் மண்ணில் காலடி எடுத்து வைத்த தொடக்க காலத்திலிருந்தே அன்னை மரியாள்மேல் உள்ள பக்தியும் மக்கள் மத்தியில் வளர்ந்து வந்துள்ளது. மன்னார் கிறிஸ்தவர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. மன்னார் மண்ணில் ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக வேதகலாபனை இடம் பெற்றது. இவ்வேளையில் தப்பியோடிய கிறிஸ்தவ மக்கள், தாம் அருமை பெருமையோடு வணங்கி வந்த மரியன்னையின் திருச்சுருபத்தையும் தம்மோடு எடுத்துச் சென்றனர். மாந்தையில் வைத்து ஒரு நூற்றாண்டளவாக வணங்கப்பட்ட இந்த மரியன்னையின் திருச்சுருபம் மடுவுக்கு 1670ம் ஆண்டு இப்படிக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு "மடு மாதா" என்ற பெயரில் மரியன்னை கோவில் கொண்டெழுந்தருளினார்கள். இதுவே மடுத்திருப்பதியினதும் அங்கு உள்ள அற்புத திருச்சுருபத்தினதும் சுருக்கமான ஆரம்ப வரலாறாகும்.

அன்று தொட்டு இன்றுவரை மடுத்திருப்பதி, மக்களுக்கு ஆன்மீக வளங்களைப் பெற்றுக் கொடுக்கும் அருளின் இடமாக இருந்து வருகின்றது. ஆடி மற்றும் ஆவணி மாதங்களில் நடைபெறும் முக்கிய திருவிழாக்களின் போது ஆயிரக்கணக்காக, ஏன் இலட்சக்கணக்காக மக்கள் கூடிவருகின்றார்கள். ஆன்ம தாகத்தோடு இங்கு இப்படி வருகை தரும் மரியன்னையின் பக்தர்களை வரவேற்று அவர்கள் ஒவ்வொருவரும் அருள்வளமும், மடு அன்னையின் ஆசீரும் பெற எல்லா ஆயத்தங்களும் மன்னார் ஆயரின் வழிகாட்டுதலில் இத்திருத்தல நிர்வாகத்தால் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்திருத்தலத்திற்கு, மேற்படி நோக்கத்தைத் தவிர்த்து, வேறு நோக்கங்களுக்காக வருவதும், ஆன்மீக தேடலுக்கு ஊறு விளைவிப்பதும் முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பது இந்த உயர் இலட்சியத்தைப் பக்தர்கள் பெறவேண்டுமென்பதற்காகவேயாம்.

இடம்பெற உள்ள இவ்வருடம் ஆவணி 15ம் திகதிப் பெருவிழா, மரியன்னை இறைவனால் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதைக் கொண்டாடும் திருநிகழ்வாகும். இதற்குப் பெருந்தொகையாகப் பக்தர்கள் வருகை தர உள்ளனர். யாழ்.ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும், சிலாபம் ஆயர் அதிவந்தனைக்குரிய மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகையவர்களும், மன்னார் ஆயராகிய என்னுடனும், இலங்கை முழுவதும் இருந்து வருகைதரும் குருக்களுடனும், இப்பெருவிழாத் திருப்பலியை நிறைவேற்றுவார்கள். மருத மடுத்திருத்தாயாரின் அற்புதத்திருத்தலத்திற்கு வருகை தரும் அனைவரும் இகபர நலன்களால் நிறைக்கப்பட 'ஈழநாதம்' பத்திரிகை மூலம் ஆசி கூறிநிற்கின்றேன்.

# மருதமடு மாதா ஆ...

## சிறப்பிதழ் - 15.0...

## மருதமடு அன்னைக்கு...

இன,மத,மொழிவேறுபாடுகளின்றி, அனைவராலும் 'அம்மா' என ஏற்றிப்போற்றும் மருதமடு அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா, 15.08.2003 வெள்ளிக்கிழமை மருதமடு திருத்தலத்தில்நடைபெறுகின்றது. இப்பெருவிழாவில் கலந்து கொள்ள, இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும் வாழுகின்றமக்கள், பிரதேசவேறுபாடுகளைக் களைந்து, ஒரே தாயின் பிள்ளைகளாக ஒன்று கூடி அன்னைக்கு பெருவிழா எடுக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

முதலாம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே இலங்கை மேற்குக்கடலோரப்பகுதியில், தூத்துக்குடி - இலங்கைக் கரையோரப்பகுதி பரதகுல மக்களின் திருமண ஒன்றிப்பினால், புனித தோமா தூதுரைத்த கிறிஸ்தவம் இலங்கையிலும் வேரூன்றத்தொடங்கியது என்றாலும், தகுந்த பராமரிப்பின்மையால் அது முளையிலேயே கருகத் தொடங்கியது என்பது வரலாற்று உண்மை.

கத்தோலிக்க மதத்தை இலங்கைக்கு கொண்டு வந்தவர்கள், இயேசுவை மட்டுமல்ல, அவரது புனித தாயாரையும் மகிமைப்படுத்த விரும்பினர்.எனவே தான் மரியாளின் மாசில்லா உற்பவத்திருநாளையும், அவர்





பரலோக பூலோக அரசியாக விண்ணேற்பு அடைந்ததையும் 'புனிதநாளாக' கொண்டாடத்தொடங்கினர். கத்தோலிக்க மதத்தையும், அவர்களின் திருவிழாக்களையும் அறவே வெறுத்த யாழ்ப்பாண அரசன் 'சங்கிலியனும்' அவனது சகாக்களும், கிறிஸ்தவத்தை அழித்தொழிக்க முனைந்தனர். யாழ்ப்பாணத்தில்மட்டுமல்ல மன்னாரிலும் கிறிஸ்தவம் வேகமாக பரவியதைக்கண்ட 'சங்கிலியரசன்' படையாட்கள், இவர்கள் "போர்த்துக்கேயரின்" உளவாளிகள் என்று கற்பனை செய்ததால், அவர்களை அழித்தொழிக்க மன்னார் மீது போர் தொடுக்க முனைந்தனர்.

இக்கால கட்டத்தில், மன்னார் தீவிலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பால் "மாந்தை" என்னும் கிராமத்தில், மூதாதையர்களினால் "ஜெபமாலை அன்னைக்கு" ஒரு சிற்றாலயம் அமைத்திருந்தனர். மருதமடு அன்னையின் ஆரம்ப இருப்பிடம் இதுவேதான்.இலங்கைத்தீவை ஒல்லாந்தர் கைப்பற்றிய போது, கத்தோலிக்கர்களுக்கெதிராக ஒரு பெரும் கலாபனை உருவெடுத்தது. ஜெபமாலை அன்னையின் பக்தர்கள், அவரது திருச்சொரூபத்துக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படலாகாது காப்பாற்ற வேண்டும் என்ற

பெருநோக்கில்
மக்கள் ஒன்று
அடர்ந்த காட்
பங்கள் 1670
இக்கிராமத்தின்
கிறிஸ்தவர்களி
இத்திருத்தலம்
வருகை தரு
வணக்கஸ்த்தல
பெறுகின்றது.
ஒல்லா
தங்கள் விசுவ
நாட்டிலிருந்து,
கடந்து வன்
ஆச்சரியமான
அங்கே கோவி
யைக்கண்டு
இவரது அற்புத
யும் கண்டு கே
பாகங்களில் இ
அவர

கப்பட்டோரும்,
அவரது ஆ
கொள்வதினா
வைத்திய நிர்
தால் மதத்தால்
மூவின மக்க
ஓரின மக்களா
தண்டை ஒன்று
போர்
அல்லல்பட்ட
தோடு மட்டும
யெல்லாம் தே
தன்னைப்பிரக
ஏற்பட்ட மனம
அன்னையின்
கொண்டிருக்கி
நிலைக்க அ
அமைதி எமது
பரிந்து பேசுத
இறையருள் வே

சிறப்பிதழாக்கம் : காரையூரான்



*கானகம் வாழும் காரிகை தேவதாய்*
*காலைப் பிடிப்பவர் காரிருள் நீங்கிடும்*
*என்று நம்பி என்றும் வாழும்*
*உங்கள் குறைகள் அகன்றிட பிரார்த்திக்கின்றோம்.*

தலைவர்,
பணிப்பாளர்,
பணியாளர்கள்.

**நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம்.**

பிரதான வீதி, முருங்கன்.

எமது சங்க சேவைகள்:-
- நுகர்ச்சி எரிபொருள்
- கிருமிநாசினிவகைகள்
- பிரதிஒளியியல்
- விவசாய உள்ளீடுகள்
- வாடகைச்சேவை
- அந்திம கால சேவை
- விதைநெல், கைத்தொழில் அபிவிருத்தி

ஆகிய தொழிற்பாடுகள்
மூலம் எம் மாவட்டத்திற்கு
நிறைவான தரமான
நியாயமான சேவைகளை
வழங்கி வருகின்றோம்.

(சி-8325)




மருதமடு மாதாவே!
நாங்கள் பட்ட அவலமெல்லாம் நீ...
அன்புச்சுனை பெருகட்டுமென வே...

**FRANCIS ENTERPRI...**

**GENERAL MERCH...**

**Groceries, Distributors of Fishing Gear & Sp...**

பெரிய் கடை,
மன்னார். . T.P: 023-32385

மத்திய...
கொழு...

**Dealers for YAMAHA**
**SUZUKI**

**C.P.C. LANKA LTD.**
**UNILEVER CEYLON LTD**
**UPALI FOOD & BEVERS...**
**CEYLON BISCUITS LTD.**

(சி-8326)

# ... ஆவணிப் பெருவிழா

## ... - 15.08.2003




## ...னைக்கு பெருவிழா

பெருநோக்கில், அன்னையின் திருச்சொரூபத்தை இறை மக்கள் ஒன்று கூடி மருதமரங்கள் நிறைந்து காணப்பட்ட அடர்ந்த காட்டுப்பகுதியில், இருபது பக்தியுள்ள குடும்பங்கள் 1670 இல் கொண்டு சென்று கொலுவேற்றினர். இக்கிராமத்தின் இன்றைய பெயர் தான் 'மருதமடு' மாந்தைக் கிறிஸ்தவர்களினால் பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்ட இத்திருத்தலம் இன்று அகில இலங்கையிலும் இருந்து வருகை தரும் பல்வேறு மதத்தைச்சார்ந்தவர்களுக்கும் வணக்கஸ்த்தலமாகவும், வழிபாட்டு இடமாகவும் பெருமை பெறுகின்றது.

ஒல்லாந்தருடைய கலாபனைகளுக்குப் பயந்து தங்கள் விசுவாசத்தைக்காப்பாற்றிக்கொள்ள யாழ் குடா நாட்டிலிருந்து, எழுநூறு கத்தோலிக்கர்கள் பூநகரியைக் கடந்து வன்னிக்காட்டில் அலைந்து திரிந்த போது, ஆச்சரியமான விதத்தில் மருதமடுவுக்கு வழிநடத்தப்பட்டு, அங்கே கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னையைக்கண்டு மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினர். படிப்படியாக இவரது அற்புதங்களையும், அளவிடமுடியாத ஆற்றல்களையும் கண்டு கேட்டு அனுபவித்த மக்கள் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் படையெடுக்கத்தொடங்கினர்.

அவரது அருளாசியினால் விஷக்கடியினால் பாதிக்




கப்பட்டோரும், தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டோரும் அவரது ஆலயத்தில் உள்ள மண்ணைப் பூசிக் கொள்வதினால் ஆச்சரியமாக குணப்பட்டமையை யிட்டு வைத்திய நிர்வாகமே வியப்பில் திணறுகின்றது. இனத்தால் மதத்தால் அரசியல் வாதிகளினால் பிளவுபடுத்தப்பட்ட மூவின மக்களும் அன்னையின் அன்பால் ஈர்க்கப்பட்டு ஓரின மக்களாக ஒரு தாய் பிள்ளைகளாக அவரது பாதத் தண்டை ஒன்று கூடுவது கண்கொள்ளாக்காட்சியாகும்.

போர்க்கால சூழலில் பாரிய இடப்பெயர்வுகளால் அல்லல்பட்ட மக்களை தனது மடியில் தாங்கிக்கொண்டதோடு மட்டுமன்றி அநீதியிழைத்தவர்களின் இடங்களையெல்லாம் தேடிச்சென்று 'சமாதானத்தின் அன்னை' யாகத் தன்னைப்பிரகடனப்படுத்திக்கொண்டதையும் அதனால் ஏற்பட்ட மனமாற்றங்களையும் எம்மால் மறக்க முடியாது. அன்னையின் பரிந்து பேசுதலினால் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமாதானப்பேச்சு வார்த்தைகள் நீடித்து நிலைக்க அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அமைதி எமது நாட்டில் ஏற்படவும், மருதமடு அன்னையின் பரிந்து பேசுதல் தொடர்ந்து எமக்கும் நாட்டிற்கும் கிடைக்க இறையருள் வேண்டுவோம்.

அருட்திரு. செ. நேசன்,
கிளிநொச்சி.

### யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்ஆண்டகையின் ஆசிச்செய்தி



ஆவணி 15ஆம் திகதி மருதமடுமாதா யாத்திரைத்தல பெருவிழாவையொட்டி கிளிநொச்சியிலிருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகையில் வெளியிடப்படும் சிறப்பிதழுக்கு ஆசி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

மருதமடு அன்னையின் பக்தியானது இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் வளர்ந்து வருகின்றது. புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் பரவிஇருக்கும் தமிழ் மக்கள் அங்கெல்லாம் மருத மடு அன்னையின் விழாவினைக் கொண்டாடுகிறார்கள். கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து, சுவிற்சலாந்து ஜேர்மனி போன்ற இடங்களில் மருதமடு அன்னையின் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

இலங்கையில் சிங்கள தமிழ் கத்தோலிக்க மக்களை இன பேதமின்றி அழைக்கின்ற ஒரு பதியாக் மிக நீண்ட காலம் விளங்கிய மருதமடு அன்னையின் பதி போர் அனுபவங்களின் பின்னர் இன்று நிலவும் சமாதான நிலையில் அவர்களை இணைக்கின்ற ஒரு பதியாகவும் மாறியுள்ளது.

இலங்கை மண்ணில் மிக நீண்ட காலமாக நடைபெற்ற கொடிய போரோடும் அதன் தாக்கங்களோடும் நெருங்கிய தொடர்பு பெற்று மடுப்பதி விளங்குகின்றது. 450 வருட வரலாற்று சிறப்பு மிக்க மடுப்பதியில் 20.11.1999 இல் 38 பேர் கொல்லப்பட்டும் 65 பேர் காயமடைந்தும் ஆலயம் சேதமடைந்தும் போன நிகழ்வு அன்னையின் பக்தர்கள் பலரின் மனதுகளில் தாங்காத சோகத்தையும் வரலாற்று ஏடுகளில் நீங்காத வடுவையும் ஏற்படுத்தியிருந்தது.

2002இல் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது சமாதானத்தை வலியுறுத்தி மருதமடு அன்னையின் திருச்சுருபத்தை பவனியாக தென்னிலங்கைக்கு எடுத்து!ச்சென்ற தேசிய நிகழ்வின் பின்னர் தான் இலங்கை மண்ணில் அமைதி தோன்றியது. தமிழர்களையும் அவர்களது பிரச்சினைகளையும் பற்றி இறுக்கமான மனது கொண்ட சிங்கள மக்கள் பலர் இந்த அன்னை தன் பவனியின் போது பொழிந்த அருள் மழையால் மனம் மாறி சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் என்பன இம் மண்ணில் மலர இடம் கொடுத்தார்கள்.

மருதமடு அன்னையை துன்பகாலங்களில் மட்டுமல்ல இன்ப நேரங்களிலும் போர்க் காலங்களில் மட்டுமல்ல சமாதான நேரங்களிலும் போற்றிப்புகழ்ந்து பாட வேண்டும். நமது தேவைக்காக எப்போதும் அன்னையின் பதி நாடி வேண்டு தல் செய்யவேண்டும்.

மிக நீண்ட காலமாக இம் மண்ணில் நிகழ்ந்த அவலங்களையும் உயிர் இழப்புக்களையும் தடுத்து நிறுத்திய அன்னையே இப்போது பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல் நிலைகளிலும் தன் பங்களிப்பைச்செய்ய வேண்டுமென மன்றாடுவது இன்றைய எமது கடமையாகும். மருதமடு அன்னையிடம் இவ்வாண்டு திருவிழாவின் போது கூடுகின்ற பக்தர்களின் வேண்டுதல் இதுவாகவே இருக்க வேண்டும் என விரும்புகிறோம்.

அன்னைக்குரிய அன்போடும் அரவணைப்போடும் சமாதானத்தில் ஏற்பட்டுள்ள இடைஞ்சல் நிலைகள் நீங்கி நீதியோடு கூடிய நிரந்தர தீர்வினை ஏற்படுத்தித்தர மடு அன்னையிடம் வேண்டுதல் செய்வோம்.




மருதமடு மாதாவே!
எங்கள் எண்ணமெல்லாம்
உன்னிடத்தை நாடி நிற்குதே-வாய்
ஏற்றிப்புகழ் பாமாலை பாடிச் சொல்லுதே.

நம்பிக்கை! நாணயம்!! தரச்சிறப்பு!!!

சுவர்ணமஹால் கோல்ட் ஹவுஸ்

ஓடர் நகைகளை 22கரட் தங்கத்தில்
உத்தரவாதத்துடன் குறித்த காலத்தில் செய்திட
நாடவேண்டிய இடம்

நங்கையர்களின் நகைச்சுரங்கம்.

பெரியகடை, மன்னார். T.P: 023-2232385

(சி-8331)



தேங்கிய துயரினை நீக்கிடும் அம்மா-
இன்று ஊரிலே உன்னோடுநிற்கின்ற
மக்கள்-அவர் உள்ளத்தில் பேரொளி
அருளிடு அம்மா!

எம்மிடம் பிற்றிங் வேலைகள்,
கட்டடங்களுக்கான கதவு,ஜன்னல்,
கேட்டின்பிட்டிங், பென்டரி கபட் பிட்டிங், வியாபார
ஸ்தாபனத்திற்கு தேவையான சோகேஸ்கள்,கண்ணாடிசோரும்,
ராக்கைகள் என்பன மற்ற இடங்களைவிட குறைவான
விலையில் கூடுதலான உறுதியுடன் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

விஜயா அலுமினிய பிட்டிங் சென்ரர்.

இல.95, பஸ்நிலைய
மேல்மாடி, வவுனியா. T.P 024-20034 (சி-8330)



மடுத்தாயின் அருட்கருணை
நம் எல்லோருக்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.
வவுனியா மாநகரில் புதியதோர் உதயம்

விநாயகா டிரேட்சென்ரர்

எங்களிடம் மலிவான விலையில்
தரமான அலுமினிய பார்வகை,ஒட்டுப்பலகை, MDF போட்
PVC வெள்ளைபோட், சிப்போட், எம்போஸ் சீட், தரைவிரிப்புகள்,
ரெக்சின் வகை, வெல்வெட் துணி பிளைவூட் கதவுகள்,
போமிக்கா சீட், குசன் செற்றிகள், அனைத்து வகையான,
கைப்பிடிகள், பூட்டுகள் VHF,UHF CELTAL ANTANA செய்ய
தேவையான பொருட்கள், சகல விதமான கண்ணாடி வகைகள்,
மெகி பொட், நோட்டீஸ் போட், கூலின் ஸ்ரிக்கர் வகைகள்,
சகலவிதமான அலுமினிய பிட்டிங் வேலைகள் என்பவற்றிற்கு.
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

இல:102,முதல் மாடி,பஸ் நிலைய கட்டடம்,
வவுனியா
T.P 071 - 2355563 (சி-8329)



உலகை ஆளும்
மருதமடு மாதாவே!
எங்களை தினம்
காத்திடம்மா!


சிறி பேக்கறி

ஆஸ்பத்திரி வீதி, மன்னார். (சி-8328)

...லமெல்லாம் நீங்கட்டும் எங்கும்
...நகட்டுமென வேண்டுகின்றோம்.

...NTERPRISES
...RAL MERCHANTS
...ning Gear & Spare Parts Etc.

மத்தியசந்தை 2ம் மாடி,
கொழும்பு-11





...NKA LTD.
...R CEYLON LTD.
...OD & BEVERSGES (Pvt) LTD.
...BISCUITS LTD.



மருதமடு அன்னையின் அருள் இந்நாளில்
எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள் அங்கத்துவ சங்கங்கள்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வ.து)

மீனவ சமூகத்திற்கான எமது சேவைகள். உப்பளவீதி, பெரியகடை, மன்னார்.
T.P -023-2232082

- மீன்பிடி உபகரண விற்பனை நிலையம்.
- எரிபொருள் விற்பனை நிலையம்.
- பாரவூர்தி சேவை.
- அங்கத்தவர்களுக்கான குறைந்தவட்டி வீதத்தில் கடன்வழங்கல் சேவை.

இன்னும் பல சேவைகளினூடாக எமது மக்களுடன் இணைந்துள்ளோம்

(சி-8327)

# இலக்கியப் பகிர்வு 01

## இலக்கியம்

கலை நயம் மிக்கதாக ஏதேனும் ஒரு வடிவத்தில் ஒன்றை எழுதி வெளிப்படுத்தும் படைப்பு இலக்கியம் ஆகும்.

"இலக்கியம் என்னும் சொல் எத்தகைய நூலைச் சுட்டுகிறது என்பதை வரையறுத்துக்கூறுவது ஒரு சிக்கலான செயல். ஆனால் அதனை நடைமுறை வாழ்க்கையில் எளிதில் இனம் கண்டு கொள்ள இயலும்" என்று கூறும் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் அதனை பின்வருமாறு விளக்குகிறார்.

ஒருவருடைய மேசையின் மீது புகைவண்டிகளின் காலஅட்டவணைகள், இந்திய வரலாறு, மாநிலத்தன்னாட்சி ஆய்வு அறிக்கை, பாரதியார் கவிதைகள் என்னும் நூல்கள் இருப்பதாக கொள்வோம். உயர்நிலைப்பள்ளி மாணவன் ஒருவனிடம் அந்த மேசையின் மீதுள்ள இலக்கியத்தைக் கொண்டு வா என்று சொன்னால் அவன் மேசையின் மேலுள்ள புத்தகங்களை புரட்டிப்பார்த்து "பாரதியார் கவிதைகள்" என்னும் நூலையே பொதுவாக எடுத்துக்கொண்டு வந்து தருவான்.

இதிலிருந்து புலனாவது யாது? ஓரளவுக்குக் கல்வி அறிவுடையவர் கூட "இலக்கியம் என்பது யாது? என்பதை அனுபவத்தின் வாயிலாக எளிதில் அறிந்து கொள்ள இயலும் என்பது தெரிகிறது. மேலே குறிப்பிட்ட நூல்களுள் பாரதியார் கவிதையை இலக்கியம் எனவும் மற்றவற்றை வெறும் நூல்கள் எனவும் கருதுவதற்குரிய காரணத்தைப் புரிந்து கொண்டால் ஓரளவிற்கு இலக்கியத்தின் இயல்பினை அறிந்தவராவோம்.

புகைவண்டிகளின் கால அட்டவணை, இந்திய வரலாறு போன்ற புத்தகங்கள் கருத்தைத் தெரிவிப்பன. ஆனால் அவை படிப்பவரின் மனதிற்கு மகிழ்வூட்டுவன அல்ல. மேலும் அவை செஞ்சொற் கவியின்பம் பயப்பனவும் அல்ல. இலக்கியம் எனும் சொல்லை மிகவும் பரந்த பொருளில் பயன்படுத்துவோமானால் மேலே குறிப்பிடப்பட்ட முதல் மூன்று புத்தகங்களையும் பயன்பாட்டு இலக்கியம் எனச்சுட்டலாம்.

இலக்கியமானது மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது. அதனது சிந்தனைக்கும், உணர்வுக்கும், கற்பனைக்கும் தீனியாக அமைவது. அவனது மொழியோடு தொடர்புபட்டது. குறிப்பிட்ட ஒரு வடிவினையும் உடையது. படிப்பவர்களின் எண்ணத்தில் எழுச்சியை உண்டாக்கும் ஆற்றல் கொண்டது.

இலக்கியம் படைக்கப்படுவதற்கு உந்துதல் சக்தியாக அமையும் காரணங்கள் பல. அவற்றில் இருந்து மனிதனின் ஆளுமையைப் பொலிவுடன் வெளிப்படுத்தும் தலை சிறந்த கலைப்படைப்பாகவே இலக்கியம் தோன்றுகின்றது எனவும் மனித இனத்தின் அனுபவங்களைக்கலை நயத்தோடு எடுத்துரைப்பதே இலக்கியம் எனவும் பேராசிரியர் அவர்கள் கூறுகின்றார்.





இலக்கியம் படைக்கும் ஆற்றல் எல்லோருக்கும் இருப்பதுண்டு. எனினும் எல்லோராலும் வெளிப்படுத்த முடிவதில்லை. முடிந்தாலும் அவர்கள் வெற்றி பெற முடிவதில்லை.

உண்மையில் பயிற்சியும், முயற்சியும் இலக்கியம் படைக்க அடிப்படையாக அமை கின்றன. இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. ஆனால் தான் சரியான வழிகாட்டலும் முனைப்பான பயிற்சியும் படைப்பாக்கத்திற்கு துணைபுரியும் என்பர்.

## விமர்சனம்

கிரிட்டிஸிஸம் என்றால் கண்டனம் என்று பொருள் கொள்வது இயல்பே. ஆனால் கலை இலக்கியங்களுக்கு கிரிட்டிஸிஸம் என்ற வார்த்தையைப் பிரயோகிக்கும் பொழுது அது பிரத்தியேகமான பொருளைக் கொடுக்கிறது. கலைஇலக்கியங்கள் பற்றிய மதிப்பீட்டை தமிழில் திறனாய்வு என்று கூறுவது வழக்க மாயினும் அது கிரிட்டிஸிஸம் என்ற ஆங்கில வார்த்தையில் முழுஅர்த்தத்தையும் கொண்டு வருவதாக இல்லை. ஏனெனில் "நயங்காணல்" போன்றே திற னாய்வும் இருக்கிறது. திறனா ய்வும் கண்டனமும் சேர்ந்தே கிரிட்டிஸிஸம். எனவேதான் விமர்சனம் என்ற சொல் இரண்டையும் உண்டாக்குவதாய் அமைந்து வழக்கத்திற்கு வந்துவிட்டது.

"கிரிட்டிஸிஸம் என்ற ஆங்கில வார்த்தையின் அர்த்தம் கவனமாக மதிப்பீடு செய்தல் அல்லது தீர்ப்பளித்தல் என்பதாகும். கிரேக்க மொழியில் கிரிட்டிஸ் என்றால் தீர்ப்பளிக்கத் தகைமை பெற்றவன் எனப்பொருள்படும். எனவே விமர்சகன் நொட்டை சொல்பவன் மாத்திரமல்லன், கண்டனக்காரன் மாத்திரமல்ல. பாராட்ட வேண்டியவற்றை பாராட்டிக் கவனமாக மதிப்பீடு செய்து தனது அபிப் பிராயத்தை ஒளிவு மறைவின்றி உள்ளது உள்ளபடி கூறுபவனுமானால் பாரபட்சமற்ற விமர்சனமே ஆக்கப்படைப்புக்கு உதவும் என்கிறார் விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன்.

## மு.தளையசிங்கம்

எங்கள் மண்ணின் மூத்த எழுத்தாளரான மு.தளையசிங்கம் 1935 ல் பிறந்தவர். புங்குடுதீவு இவரது சொந்த இடம் தற்போது எம்மத்தியில் உள்ள புகழ்பூத்த படைப்பாளி மு.பொன்னம்பலம் அவர்கள் இவரது சகோதரர்.

இவரது முதற்சிறுகதை "தியாகம்" 1957 இல் பிரசுரமாகியது. இனப்பிரச்சினையை மையக்கருவாக்கி முதன்முதல் ஆக்க இலக்கியம் படைத்த இவரது சிறுகதைகளின் தொகுப்பு புதுயுகம் பிறக்கிறது.

இவர் எழுதிய "ஒரு தனி வீடு" நாவல் தமிழ் மக்களின் பிரிவினைக்கோரிக்கையை ஒட்டி எழுந்த முதலாவது நாவல் என்ற பெருமையையும் உடையது. புத்திலக்கிய வடிவத்தின் வழிகாட்டி "போர்பறை" "மெய்யுள்" அவ்வாறான நூல்கள் புதுக்குரல்கள் கலைஞரின்தாகம், அண்டை வீடுகள், உள்ளும் வெளியும், மெய் வெள்ளையினை ஆகிய கதைகள் இவ்வாறான படைப்புகளே.

இது தவிர ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி முற்போக்கு இலக்கியம் என்பனவும் அவரது நூல்களே. பொது உடமை வழி நின்ற பொருள் முதல்வாதப் போக்கிற்கும், அகப்பண்பாடு தெய்வீகம் என்ற நிலைப் பாட்டில் உள்ள கருத்து முதல்வா தத்திற்கும் இடையே மெய்முதல் வாதம் என்ற கருத்தினை முன் வைத்தவர் மு.தளையசிங்கம்.

**சிதம்பரம்**



## ஆலமரம்

நானோர் ஆலமரம்

வசந்த காலங்களின் போது
என்னிடம்
பல பறவைகள் வரும்.

பறவைகளுக்கெல்லாம் நான்
நிழல் கொடுப்பேன்
என் தோள்கிளைகளில்
அவர்கள் அமர இடம் கொடுப்பேன்
என் இதய இலைகள் அசைத்து
அன்பள்ளிச்சொரிவேன்
என் தளிர் கரங்கள் கொண்டு
களைத்துப்போயிருக்கும்
அவர்களின் சிறகுகள் கோதிவிடுவேன்.
எனது கனிகளை எல்லாம்
அவர்களுக்காய் உண்ணக்கொடுப்பேன்

பிரயாணப்பறவைகளுக்கு
நான் இளைப்பாறும் இடம்
கர்ப்பிணிப்பறவைகளுக்கு
நான் பிரசவவிடுதி
சின்னஞ்சிறு குஞ்சுகளுக்கு
நான் விளையாட்டிடம்
காதற் பறவைகளுக்கு
நானோர் பூங்கா

எனினுமென்ன
இலையுதிர் காலங்களிலெல்லாம்
நான் மட்டும் மௌனமாய்
எனக்குத்தோள்தர
எந்த சொந்தமுமே இல்லை
கண்ணீர் விழுதுகள் தவிர.

யாழ்வீரன்



## அதன் நோக்கற்ற அமைதியை நான் சகித்திருக்கவா...?

அமைதிக்காலம் சுழிக்கிறது
காவலரணில் வெறுமை பரப்பி

ஏக்கத்தை எஞ்சவிட்டு மட்டும்
சுழித்து நகருது அமைதியின் அகோரம்.

காவலரணின் உயிர்ப்பை பொலிவுற வைக்க
யுத்தத்தைப்போல்
வேறு எதனாலும் முடிவதில்லை.

அமைதியில் காவலரண்
வெதும்பிச்சாகிறது.

இங்கு காவலரண் எனப்படுவது
மரக்குற்றியும் மண் மூடையும்
வெட்டிய குழியும் அல்ல.

நானும் என் மனமும்
என் நினைவுகளும் தான்.

யுத்தம் நிறுத்தப்படுவதாயின்
என் காவல் தேவையற்று நிறுத்தப்படட்டும்.

என் மனதின்
அகாலமரணத்தை வற்புறுத்தும்
அமைதி அழிந்து போவதாக!

சுடுகாட்டு
மனிதச்சாம்பலின் தூசியும் நெடியும்
வெளியின் நிசப்தமும் காற்றின் வெறியும்
காவிவரும் அமைதியில்
எப்படி என்னைக்காத்துக்கொள்ளட்டும்
அது நாசமாய்ப்போக.

இளநீதா




# உயிர் உறவுகள்

**முல்லை யேசுதாசன்**



''கரடிபோக்குச் சந்திப்பக்கம் ஒரே புகைமயம்.'' "ஆமியைப் பெடியள் ஊடறுத்துப் போட்டாங்களாம்."

எந்தப்பக்கமும் தலை நிமிர்த்த முடியாத அகோரமான எறிகணை வீச்சும், ரவுன்சுகளின் இரைச்சலும் இருந்திருந்தது விட்டு. ஏ.கே.எல்.எம். ஜிக்களின் தொடர்ச்சியான உறுமல்கள். ராங்குகளின் கர்...புர் சத்தம். கரடிப்போக்கு சந்திக்கும் பொன்னம்பலத்தாருடைய மில்லுக்குமிடையில் நிற்கவே முடியாது இரண்டு பக்கமும் ஆமி.

கவர் எடுக்க சின்னக்குழிகள் வெட்டினபடி ஜெயந்தன் படையணிப்பெடியள். "அடியடா பிடியடா"அந்தச்சத்தம் வேறு - அதோட பகிடியளும் கண்ணுக்கு தெரியிற ஆமியள சுட்டுத் தள்ளிக்கொண்டு.

"சயனட்டை தாங்கோடா" "எப்படா கொண்டுபோகப்போறியள்" "டேய் சின்னக்காய மடா அது, விடடா கையை" "டேய் உன்ர வாய்க்கு பிளாஸ்டர் ஒட்டோணுமடா" காயக்காரர்களின் முனகலும் எரிச்சல்களும். அதற்குள்ளும் சண்டை நடந்து கொண்டுதானிருந்தது.

விதுரனுக்கு சரியான ஆத்திரம் ஜீவாண்ணனில அவரைப்பேக்காட்டிப்போட்டு பொன்னம் பலத்தார் மில்லடிக்குப் போக நேரம் பாத்துக் கொண்டிருந்தான். "விதுரன் நீ இப்ப அங்க படமெடுக்கப் போனியெண்டா கட்டாயம் சாக வேண்டிவரும்'' இப்பநில்லு நான் சொல்லேக்க போகலாம் எண்டிட்டார். இங்கேயும் சண்டை நடக்கயில்லை என்றில்லை. புகையும் நெருப்பு மாய் செல் அடிக்கடி விழுந்தபடி பலபேர் பங்கருக்குள்ள ஒன்றுமே செய்யேலாது-

ராங் அடிச்சுப்போட்டாங்களாம் செல்லை விட அந்தச்செய்தி வேகமாய் வந்துவிட்டது. கனபேருக்கு அந்த பங்கருக்குள்ள இருப்புக்கொள்ளவில்லை. விதுரனுக்கும் தான். ஜீவா அண்ணனைத் தேடினான் அவரையும் காணவில்லை.

அவனிருந்த பங்கரையும் தாண்டி ஒரு ஸ்டில் கமராக்கார அக்கா ஓடிக்கொண்டிருந்தாள். தனக்கு முன்னமே அடிபட்ட அந்த ராங்கை படமெடுக்கப்போகிறாள் என்று இவனுக்கு பெரியகவலை. பற்றிக்கோல்சரைக் கட்டினான். கமராவைத் தூக்கித் தோளில் மாட்டினான்.

பக்கத்தில் நின்ற சுதன் வெருட்டினான். "என்ன வெளிக்கிட்டிட்டாய். ஜீவாண்ணன் உன்னப்போக வேண்டாம் என்று சொன்னவர்'' அவனுடைய குதிக்காலில் தன்னுடைய சப்பாத்துக்காலால் உழக்கினான். அவன் ஐயோ என்று கத்த விதுரன் பங்கரை விட்டு வெளியே ஓடத்தொடங்கிவிட்டான். உதுதான், உவர்ர அவசரம்தான். இருந்திட்டு சிலவேளை வேண்டிக்கட்டுறவர் பேசிக்கொண்டிருந்தான் சுதன்.

விதுரன் உண்மையிலேயே ஒருதிறமான கமராக்காரன்தான். அவனுடைய படப் பிடிப்புகளில் பிசகுகள் எப்பவும் குறைவுதான். அதால எப்பவும் அவனுக்கு நல்ல மதிப்பு இருக்கும். எந்தப்பிரச்சினையான பெரிய சண்டையெண்டாலும் அந்த இடத்தில எப்படியாவது நுழைந்து விடுபவன். உடம்பு முழுவதும் காயம். பதின்மூன்றுக்கு மேல - அதுபோலத்தான் இவனுடன் வரும் கமராக்களும் காயப் பட்டிருக்கும். கமராக்களுக்கு இவன்மேல் பேரன்பு. தாங்கள் செத்தாலும் இவனைக் காப்பாற்றி விடுங்கள். அப்படி பல தடவைகள் நடந்திருக்கு.

ஒரு எம் எஸ் வண், ஒரு திறீத்தவுசன், இரண்டு நைன்தவுசன் கமராக்கள் இவனோடு படமெடுக்கவந்து செத்துப்போயிருக்கின்றன. எதிரியின் துவக்குக்கு அவ்வளவு தூரத்தில் இவன் கிட்ட இருப்பதால்தான் இவ்வளவும் ஒருமுறை ஒரு ரவுன்ஸ் கமராவையும் துளைத்து காதிலும் பாதியைக்கொண்டு போய்விட்டது.

ஸ்டில் கார அக்காவுக்கு பின்னாலேயே விதுரனும் ஓடிக்கொண்டிருந்தான். எப்படியாவது அந்த ராங் எரிந்து முடியுமுன்னமே அதைப்படம் பிடித்து விட வேண்டும். குனிந்தும், நிமிர்ந்தும் குறோலிலும் அந்த அக்காவுடன் ஓடிக்கொண்டிருந்தான். அக்காவும் அவனைக் கவனமாய் வரச் சொல்லி ஓடிக்கொண்டிருந்தா. அதொரு பெரிய பங்கர்தான். அந்தப்பங்கருக்குள்ளும் கொஞ்சப் பேர் நின்றுகொண்டிருந்தார்கள். ரவுன்சுகளின் அக்கிரமம் தாங்க முடியாமல் தப்புவதற்காய் அந்த ஸ்டில்கார அக்கா அந்த பங்கரை நோக்கி ஓட விதுரனும் பின்னாலேயே ஓடிக்கொண்டிருந்தான். இரண்டு புறமும் இருந்து ரவுன்சுகள் ஏராளமாய் வந்துகொண்டிருக்க இரண்டு பேருமே அந்த பங்கருக்குள் போயிறங்கினார்கள்.

நிச்சயமாய் அவர்கள் இருவரையும் ஆமிகண்டு விட்டான்.

"ஹாய் விதுரண்ண'' பங்கருக்குள் இறங்கினவனை சந்தோசமாய் வரவேற்றது ஒரு பழக்கமான குரல். கானகன் தான். அந்த சண்டைக்குள்ளும் விதுரனைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சி.... "விதுரண்ண நீ சொன்னது மாதிரியே எல்லாம் நடக்குதண்ண'' என்றான்.

"என்னடா''

"நீ சாத்திரம் சொன்னாத்தப்பாதண்ண நீ அண்டைக்குச்சொன்னாய் இன்னும் நாப்பது நாளுக்குள்ள உனக்கொரு தத்து இருக்கு தெண்டு. முப்பத்தி ஐஞ்சு நாளில சண்டை தொடங்கிட்டுது பாத்தியே'' சிரித்தான் கானகன். என்ன தத்தெண்டு பாப்பம் என்றான்.

விதுரனுக்கு ஏன்ரா இவனுக்கு சாத்திரம் சொன்னேன் என்றிருந்தது. "போடா பேயா சாத்திரம் எல்லாம் பொய்யடா. சும்மா உங்களை பேக்காட்டுறனான் -''

"விதுரண்ண அதுக்கேன் நீ கவலைப் படுறாய் நான் காயப்பட்டாலும் படுவனே தவிர சாகமாட்டன். சரி செத்தாலும் . நாலஞ்சு ஆமியைப் போடாமச் சாகமாட்டன் உறுதியாய் சொன்னான் கானகன். அவன் சொல்லச் சொல்ல விதுரனுக்கு பெரும் கவலையாய் போய் விட்டது. ஏன்ரா இவங்கள் இதை நம்புறாங்கள். சே.. நான் அவனை பேக்காட்டியிருக்கவே கூடாது.

உண்மையும் அதுதான் விதுரனுக்கு சாத்திரம் என்றால் என்னவென்றே தெரியாது. எப்பவும் அவனுடன் பழகுவோர்பற்றியும் பக்கத்தில் இருப்பவர்பற்றியும் அறிந்து வைத்திருக்கும் பழக்கம் அவனுக்கு.

அப்படித்தான் கானகனின் பிரச்சினையும். அந்த லைனில் நின்ற பெண் போராளி ஒருவருக்கும் கானகனுக்கும் அக்கா தம்பி உறவு வலுத்துப்போக அடிக்கடி அவவைக் காண கானகன் போக அவவுக்கு வீட்டில் இருந்து வரும் பொருட்களில் இவனுக்கும் அவகொடுத்தனுப்ப, எல்லாவற்றையும் தெரிந்துவைத்துக் கொண்டுதான் அவனுக்கு சாத்திரம் சொன்னவன். ஏதோ சண்டை ஒன்று விரைவில் வரப் போகுதென்று தெரியும். சண்டையில் காயப்படுவது என்பது பெரிய விடயமுமல்ல. தெரியாமல் சொல்லிப்போட்டன். "ஓட்டைவாய்'' தன்னைத் தானே ஒருமுறை மனதுள் பேசிக்கொண்டான் விதுரன்.

பங்கரில் நின்றவர்களிடம் ராங் அடித்தவிடயம் அறிந்து ஸ்டில்கார அக்காவும் அவனும் தண்ணீர் வாங்கிக்குடித்துவிட்டு. விதுரன் வெளிக்கிடும் போது அக்கா மறித்தா. "பொறடா நானும் வாறன் என்று'' அவவுக்கு அவனை உடனேயே பிடித்துப்போயிற்று பங்கருக்கு வெளியில் வந்தவன் திரும்பவும் கீழ்இறங்கி திரும்பமேலேறும் போது கமரா தடுக்கிவிட விழப்போகும் அளவில் சரிய, அப்போது அது நடந்தது. பின்புறமிருந்து முழங்கிய ஒரு. ஏகே. எல்.எம்.ஜி ரவுன்ஸ் பின்புறமாகத்துழைத்து அவனது வயிற்றைப் பிளந்துவிட்டுப்போயிற்றுது. தொப்பென்று விழுந்துவிட்டான் விதுரன். இப்போதும் அந்தக்கமராதான் காப்பாற்றியிருக்கிறது போலும் அல்லது உடனேயே உயிர் போயிருக்குமோ?

விழுந்தவனைக் கண்ட அக்கா விழுந்திற்றான்ரா தூக்குங்கோடா என்றபொழுது அவவின் கைவிரல்கள் இரண்டைக் காண வில்லை. இரத்தம் கைகளில் வழிந்து கொண்டிருந்தது.

திரும்பவும் பங்கருக்குள் அவனை இழுத்தார்கள். கத்தினான் வரதன் "கமரா கவனமடா'' "என்ர சேட்டைக்கழட்டுங்கோடா'' ஜீன்சையும் கழட்டுங்கோடா. அக்கா அந்தப் பக்கம் போய்விட்டா. மெல்ல நிமிர்ந்து காயத்தைப் பார்த்தான் விதுரன். உடனேயே காயத்துக்குரிய மருத்துவ வேலைகள் நடக்கத் தொடங்கிவிட்டது.

யாரோ வோக்கியில் யாருடனேயோ கதைத்தார்கள். "அண்ண விதுரன் தண்ணி அள்ளிட்டானண்ணை'' "டேய் வாளியை உடன் கொண்டு போங்கோடா வாளி பத்திரம்'' பதில்வந்தது.

விதுரனை யாரோ தூக்கினார்கள். "விடுங்கோடா நான் நடந்து போவன் வேறகாயக்காறரைப்பாருங்கோடா.'' அக்கா விதுரனின் சயனட்டையும் தகட்டையும் அறுத்து எடுத்து விட்டா.

பங்கரின் வாசலால் மெல்ல ஏறிவந்து கொஞ்சத்தூரம் நடந்தவன் அப்படியே விழுந்து விட்டான். எழும்ப முடியவில்லை. அவன் பின்னால் அவனோடு புறப்பட்டபெடியள் அவனைத் தூக்கினார்கள். திரும்பவும் தலைதூக்க முடியாமல் ரவுன்சுகள் பறந்தபடி அவர்கள் கவனிக்கப்பட்டு விட்டார்கள் போல ஏ.கே. எல்.எம்.ஜி முழங்கிக்கொண்டிருந்தது.

மெடிசின்கார பெடியள் விடவில்லை. விதுரனை குறோளிலேயே சுமந்து சென்றார்கள் சொஞ்சத்தூரம்-

எதேச்சையாத்தான் அந்தப் பிக்கப் அந்த இடத்திற்கு வந்தது - கொண்டு வந்த சாப்பாட்டை இறக்கிவிட்டு அந்த ஸ்டில் அக்காவையும் விதுரனையும் ஏற்றிக் கொண்டு அந்த வாகனம் பறந்தது. காயம் பட்டதுதான் பட்டது. அந்த ராங்கை படம் எடுத்தாப் பிறகு பட்டிருக்கலாம்தானே. அதைப் படம் எடுக்கவில்லை என்பது இப்ப அவனுக்கு பெரிய கவலை - கட்டிய கட்டுக்களையும் மீறி இரத்தம் போய்க்கொண்டே இருந்தது. செத்துவிடுவோமோ என்று இன்னொருபயம் வந்திட்டுது அவனுக்கு.

வாகனத்தின் வேகத்தில் அந்த றோட்டுகளின் குலுக்கலில. எலும்பெல்லாம் முறிந்து செத்து விடுவோமோ என்று கூட நினைத்தான். பெரிதாக கத்தத்தொடங்கி விட்டான் பெலம் முழுவதும் சேர்த்து.

அக்காவுக்கு தன்னுடைய கையின் வலியை விட அவன் கத்துவதுதான் பெரிதாகத் தெரிந்தது. வாகனம் ஓடுகிற பெடியனை பேசிப்பேசிக்கொண்டே வந்தா - "மெல்லமா ஓடுங்கோவன்ரா தம்பிக்கு நோகுதொல்லே'' சாரதி எதையும் கணக்கெடுக்க மாட்டான் அவனுக்குத்தெரியும்.

அக்காவினுடைய பரிவு விதுரனுக்கு ஆறுதலாயிருந்தது. எனக்காக எவ்வளவு பேர் கஸ்டப்படுறாங்கள் - தன்னை உடன கொண்டு போகச்சொன்னவர். தன்னை குறோள் இழுத்தே கொணர்ந்து சேர்த்தவன், அக்காவை, சாரதியை நினைக்க... அதுவே அவனுக்குத்தப்பிவிடுவேன் என்ற நம்பிக்கையைக்கொடுத்தது - இப்போது மெல்ல மெல்ல அவனுக்கு மயக்கம் வந்து கொண்டிருக்கும் போது வாகனம் நின்றுவிட்டது.

'ஏமைனஸ்' இரத்தம் அந்த மெடிக்சில் எப்போதும் குறைவுதான். பிளட் பிரசர். சீரோவை நெருங்கிவிட்டது. இவனைக்கண்டதும் வேலைகள் அவசரமாகத்தொடங்கிவிட்டது. அங்கு பணிசெய்யும் இயக்க வைத்தியரின் இரத்தம் ஏற்றப்பட்டது. சாரதியும் இரத்தம் கொடுத்தான்.

விதுரன் கண்விழித்தபோது அவனுக்குப்பக்கத்தில் நின்ற மெடிக்ஸ் பெடியன் சொன்னான். "அண்ணா உங்களுக்கு கனகாலம் வாழுறத்துக்கு சான்ஸ் இருக்கு'' கனநேரம் பக்கத்தில் நின்று கதைத்தான் - வேகமாக வைத்தியம் பார்த்தவரை, இரத்தம் கொடுத்தவர்களை, எல்லாவிபரமும் சொன்னான். உங்களுடைய சினேகிதன் கானகன் - ஏ ஒன்பது வீதியில் நின்று திறமையாகச் சண்டை பிடித்து வீரச்சாவு என்று ஸ்டில்அக்கா சொன்னதையும் சொன்னான்.

அந்த மெடிக்ஸ்சில எல்லாக் காயக் காறரையும் பார்த்துவிட்டு விதுரனிடம் வந்து கனநேரம் கதைப்பான். அவனை விசாரிப்பான் நன்றாகக் கவனிப்பான். என்னவோ எல்லோருமாகச் சேர்ந்து பெரிதாக விழுந்து விழுந்து தன்னைக் கவனிக்கிறார்கள் என்று நினைத்தான் விதுரன். அந்த மெடிசின் பெடியன்கூட தன்னோடயே அதிகநேரம் மினக்கெடுவதாய் தெரிந்தது. இவனுக்கும் எனக்கும் என்ன உறவு? ஏன் இப்படி விழுந்து விழுந்து பார்க்கிறான் - அவனிடம் கேட்கத்தான் வேண்டும். சந்தர்ப்பத்துக்கு காத்திருந்தான்.

ஒரு நாள் எல்லா வேலைகளையும் முடித்து அருகில் வந்தவனிடம் கேட்டான். "ஏன் என்னை மட்டும் இவ்வளவு நன்றாகக் கவனிக்கிறீர்கள்'' என்று. "இல்லையே. எல்லோரையும் போலத்தான் உங்களையும் கவனிக்கிறன் எந்த வித்தியாசமும் பாக்கேல்ல'' சிரித்தபடி தெளிவாய்ச்சொன்னான். "இல்லை நான்கடைசிவரையும் நம்பமாட்டன்.'' சிரித்துக்கொண்டே போய்விட்டான் அவன்.

வழமைபோல கொஞ்சநாட்கள். விதுரனைக்கவனித்துக்கொண்டே இருந்தான் அந்த மெடிசின் பெடியன். கொஞ்ச நாளைக்குப் பிறகு அவனைக்காணவில்லை. சொல்லாமல் கொள்ளாமலே போய்விட்டான். இன்னொரு பெடியன் வந்து அவனை வழமைபோல கவனித்தான்.

விதுரனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எல்லோரிடமும் அவனை ப்பற்றி விசாரித்தான். அவனின் பெயர் அகிலனென்று தெரிந்துகொண்டான். எங்கே நிற்கிறான் என்று தெரிந்துகொண்டான். அவன் ஒரு முறை தன்னை வந்துபார்க்க மாட்டானா என்றும் காத்திருந்தான் - அவனில் ஒரு பாசமே ஏற்பட்டுப் போனது விதுரனுக்கு.

ஒருநாள் விதுரனுக்கு ஒரு கடிதம் வந்தது. அகிலனிடமிருந்து "பாசமிகு அண்ணனுக்கு'' என்று தொடங்கி ஒரு நாள் ஒரு பெடியன் வந்து தம்பி சுகம் சொல்லிவிட்டதாய் சொன்னான். விரைவில் சுகம் வரவேண்டும் என்று ஆசைப்பட்டான் விதுரன். அவனைப் போய் பார்க்கவேண்டும்.

விதுரன் நன்றாக சுகப்பட கனநாட்களாகிவிட்டது. தம்பி அகிலனை கன இடங்களில் விசாரித்து கடைசியாய் அவன் மன்னாரில் நிற்பதாய்அறிந்தான். அவனைத்தேடிப்போனான்.

அந்த முகாமில் அவனை சந்தித்தான் விதுரன். பெரிய வரவேற்பு விதுரனுக்கு . முகாம் பொறுப்பாளர் அவனை மரியாதையாக வரவேற்று, உபசரித்தது இன்னொரு சந்தேகம் விதுரனுக்கு. நேரவே பொறுப்பாளரிடம் கேட்டான். "அண்ண நீங்கள் ஏன் இவ்வளவு மரியாதையாய் வரவேற்று உபசரிப்பு செய்யிறியள்'' என்று "நீங்கள் அகிலன்ர அண்ணன் அதுதான் இந்த மரியாதையும் உபசரிப்பும்'' என்றார். அப்பிடியென்றால் அகிலன் என்னை விட...." எங்கையண்ண அகிலன்'' விதுரன் கேட்டான். "உங்களுக்கு இதரை வாழைப்பழம் தான் நல்லதாம் அதுதான் வாங்கப் போட்டான். இப்ப வருவான்.''

"அகிலன் உங்களில சரியான நேசம். உங்களைப் பற்றித்தான் நெடுகக்கதைப்பான். ஒரே விதுரண்ண விதுரண்ணதான் வாய்ப்பாடம்.'' ஆனா சரியான குழப்படி.

"அப்பிடித் தெரியேல்ல என்றான்'' விதுரன்.

"நீங்க இருக்கிறீங்கள். பேசாமல் இருக்கிறான். இல்லாட்டி அவ்வளவுதான். உங்களச் சொல்லித்தான் பயமுறுத்துறது ஆளை. விதுரண்ணைட்ட சொல்லுறம் என்றால் ஆள் கப் சிப்.''

பொறுப்பாளர் சொல்லச் சொல்ல விதுரனின் மனதுக்குள் ஒரு தம்பி பெரியவனாக வளர்ந்து கொண்டேயிருந்தான்.

விதுரன் புறப்படும் நேரம். அகிலன் வெளியில் வந்து வழியனுப்பிவைத்தான். மௌனமாக அமைதியாக அதிகம் பேசாமல். நேரமிருந்தால் அடிக்கடி வந்திட்டுப்போங்கோ என்றான்.

விதுரன் வெளியில் வந்தபோது விதுரனோடு .வந்த நண்பன் கேட்டான். "டேய் விதுரா அவன் உனக்கு சொந்தத்தம்பியோ'' என்று.

இல்லையடா பேயா பேசாமல் வாடா என்று சொல்ல வாயெடுத்தான் விதுரன் - சொல்லவில்லை பேசாமல் தலையாட்டினான் ஓம் என்று.

அகிலன். அந்தத்தம்பி. ஏன் எதுக்கு அவனை அண்ணனாக வரித்தான் என்பது அவனுக்கு விளங்கவே இல்லை.

விதுரனுக்கு இனிஇல்லையென்று பாசமுள்ள தம்பி ஒருத்தன் இயக்கத்தில, அதுவும் மெடிசினில இருக்கிறான் அவ்வளவுதான். ●





## குட்டிக்கதை

# மீளாத்துயரின் இறுதி...

ஒரு அடர்ந்த காட்டிலே ஒரு மரத்தின் கிள்ளயில் இருபுறாக்கள் கூடுகட்டி தங்கள் வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டு இருந்தன.

அன்று அடிவானில் இருந்து கதிரவன் மெல்ல மெல்ல மேல் வானுக்குச் சஞ்சரிக்கத் தொடங்கினான். வழக்கம் போல அவ்விரு புறாக்களும் உணவு தேடுவதற்காகச் சென்று இருந்தன. அப்போது எங்கிருந்தோ வந்த ஓர் அம்பு ஒரு புறாவின் உடலைச் சல்லடை செய்தது. மற்றய புறா ஒன்றையும் அறியாது திடுக்கிட்டு பறந்தது. அப் போது தான் தன்னுடைய சகோதரன் வேடனின் அம்பில் பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் மறைந்திருந்த வேடன் வெளிவந்து தனது. சகோதரனைப் பிடிப்பதையும் கண்டு கண்ணீர் விட்டபடி இருப்பிடம் செல்லாது வழியில் ஒரு மரத்தில் இருந்தவாறு கண்ணீர் விட்டழுதது. அடுத்த நாளை அறிவிப்பதற்காக கதிரோன் தன் ஒளிக் கரங்களைப் பூமி எங்கும் பரப்பத் தொடங்கினான், அந்தப்புறா விடிந்ததும் வேடனின் இருப்பிடத்தில் உள்ள ஒரு மரத்தில் அமர்ந்தது. அப்போது வேடன் அம்பு வில்லுடன் வருவதைக் கண்டு வேடனே எனது கதையைக் கேட்டுவிட்டு என்னையும் கொன்றுவிடு என்று கூறத்தொடங்கியது.



வேடனே! எங்கள் தாய் தந்தையர்கள் எம்மைப் பெற்று வளர்த்து வந்தபோது எனது தந்தையைக் கொண்டுவிட்டாய். பின்னர் எனது தாய் சிரமப்பட்டு எமக்கு உணவு தந்து வளர்த்துவந்தாள். எமக்குச் சிறகு முளைப்பதைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தாள். அன்றும் ஒரு நாள் தாயானவள் எமக்கு உணவு தரும்போது எமது கண் முன் வைத்து தாயைக் கொன் றாய் பின் நாங்கள் தாய் இல்லாது உணவு இன்றி உறக்கமின்றிச் சிறிது சிறிதாகத் தத்தித்தத்திப் பறந்து உணவுதேடி எங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து வந்தோம். அப்போது தான் நீ எனது சகோத ரனையும் கொண்டாய். இப்போது நான் தந்தை இன்றி தாய் இன்றி சகோதரனின்றி இருக்கமாட்டேன். தாய் தந்தை இல்லாத போது சகோதரனும் நானும் ஒருவருக்கு ஒருவர் உதவியாய் இருந்தோம். சகோத ரன் இல்லாது நான் வாழமாட்டேன். ஆகவே என்னை யும் கொன்றுவிடு என்று கூறி மரத்தில் இருந்து வேடனின் காலடியில் வீழ்ந்து புறா இறந்தது.

பூ.நிரஞ்சன்.




# விடுகதைகள்

01) தச்சன் செய்யாத பெட்டி தானாகத் திறந்து மூடுமாம் அது என்ன?
02) சிவப்பு நிறப்பையினுள் சிவப்புநிறமுத்துக்கள் அது என்ன?
03) ஒரு கூட்டினுள் இரு தைலங்கள். அது என்ன?
04) தலையைச் சீவினால், தாகம் தீர்ப்பான். அது என்ன?
05) ஏறமுடியாத மரத்தில் எண்ணாயிரம் காய்கள். அது என்ன?

விடைகள்

01. கண்ணிமை. 02. மாதுளம்பழம். 03. முட்டை. 04. இளநீர். 05. நட்சத்திரம்.

ந.வனிதா.

*"நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்*
*சொல்லு தமிழெங்கே?*
*சுருதி எங்கே? - எல்லைவரும்*
*ஏத்து புராண ஆகமங்கள் எங்கே?*
*பிரசங்கங்கள் எங்கே?*
*ஆத்தன் அறிவெங்கே அறை"*

என்று ஆழகாகப் பாடினார் புலவர் ஒருவர்.

அடிபட்டு, உதைபட்டு, அவமானப்பட்டுத் தமிழ்

# மகோன்னத பெரியார்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பற்றி அறிவோம்



மொழி அல்லற்பட்ட காலம் அந்தக் காலம். இப்படி இருளடைந்த காலத்திலே தான் இருளகற்றி ஒளி பரப்ப ஆறுமுகன் என்ற அழகுப் பெயருடன் ஓர் ஒளித் தீபம் உதயமாகிற்று. ஆயிரத்து எண்ணூற்று இருபத்து இரண்டாம் ஆண்டு (1822) மார்கழி மாதம் 18ம் திகதி நல்லூரிலே அத்தீபம் ஒளி வீசிற்று.

தந்தையார் கந்தப்பிள்ளையும், தாயார் சிவகாமி அம்மையும் ஆறுமுகன் எனப் பெயர் கூட்டிச் சிறப்புடன் பேணி வளர்த்தனர். கருவிலேயே திருவுடைய ஆறுமுகன் தமிழை முறைதவறாது கற்றார். ஆங்கிலம், புவியியல் எண்கணிதம் யாவும் துறைபோகக் கற்றார்.

ஆங்கிலேயர் வருகையினால் தமிழரின் வாழ்வில்கலை, கலாச்சாரம், பண்பாடு, மொழி, சமய மாற்றங்கள் போன்றனஏற்பட்டன. ஆறுமுகன் உள்ளம் கொதித்தார். ஆங்கில மோகத்தில் தமிழ் மக்கள் திளைப்பதை வெறுத்தார். சீர்திருத்த சமுதாயத்தை உருவாக்க அயராது பாடுபட்டார்.

கிறிஸ்தவர்களுடன் வாதிட்டார். முடிவில் வெற்றிவாகை சூடினார்.

மனித வாழ்க்கை சமயசாரப்பட்டது. அது ஆன்மீக இலட்சியத்தை அடைய வேண்டியது. அதற்கு இறையுணர்வு அவசியமானது என்றெல்லாம் வலியுறுத்தினார். இவரது சிறப்பு, ஆற்றல், அறிவு அனைத்தையும் கண்ட திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

நாவலர் பெருமான் கோயில்கள் தோறும் சென்று பிரசங்கங்கள் செய்தார். சைவத்தினதும், தமிழினதும் பெருமைகளை எடுத்துரைத்தார். அந்நிய மோகத்தின் ஆபத்துக்களை விளக்கினார். சைவசமய மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ஆலய வழிபாட்டு மரபுகளை நெறிப்படுத்தினார்.

மாணவர்களுக்காகப் பாலபோதினி, சைவவினாவிடை முதலாய நூல்களை எழுதி வெளியிட்டார். ஏட்டிலுள்ள நூல்கள் யாவற்றையும் அச்சிற் பதிக்க விரும்பிய நாவலர், இந்தியா சென்று அச்சியந்திரம் பெற்று வந்தார், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் வித்தியானுபால அச்சியந்திரசாலையை நிறுவினார். இதன் மூலம் பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் என்பவற்றை வசன நடையில் எழுதிவெளியிட்டார். இதனால் வசன நடை கைவந்த வல்லாளன் எனப்போற்றப்பட்டார்.

ஆறுமுக நாவலர் பிறந்திரா விட்டால் அந்நியப் பிடியில் சிக்கிய எமது தழிழ் எங்கே? ஆகமங்கள் எங்கே? வேதம் எங்கே? என்றெல்லாம் பெரியார் சி.வை. தாமோதரம்பிள்ளை கேட்கும் கேள்விகளில் நியாயம் உண்டல்லவா?

கு.மணிமேகலை

# வாரம் ஒரு குறள்



நாகரிகம் என்ற போர்வையில் இன்று நடக்கக் கூடாததெல்லாம் நடந்து முடிகிறது. ஏதோ வெல்லாம் நடத்தப்படுகிறது. எப்படி யெல்லாமோ நடத்தப்படுகிறது. ஆனால் அவற்றுள் எத்தனை அடுத்தவர்களால் மதிக்கப்படுகிறது என்பதும், பெருமை பெறுகிறது என்பதும் கேள்விக்குரியதாகவே உள்ளது. நம்மில் பலர் "இது பழையது" என்று சிலவற்றைத் தட்டிக் கழித்து விடுகின்றோம். ஆனால் அதில் நிறைந்துள்ள பண்பையும், அதனால் கிடைக்கக் கூடிய கேடில்லாத பயனையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க மறந்து விடுகின்றோம். இதனால் பண்பான செயல்கள் இல்லாமலே போய்விடுகிறது. இதற்கு வள்ளுவர் என்ன சொன்னார் தெரியுமா?

**"பழையம் எனக் கருதிப் பண்பல்ல செய்யும்**
**கெழுதகைமை கேடு தரும்"**

என்பதே அது

## குறுக்கெழுத்துப் போட்டி 33

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 04 | | |
| | | 09 | | | |
| | | 15 | | | |
| | | | 22 | | |
| | | 27 | | 29 | |
| 31 | | | | | |

### இடமிருந்து வலம்

01. திருவள்ளுவரால் இயற்றப் பட்டது.
09. கோயில்.
15. கிழமைகளில் ஒன்று.
22. சந்திரனைக் கண்டு மலர் வது.
29. நிலா.
31. இரவுக்குதிரானவை தலைகீழாக உள்ளது.

### மேலிருந்து கீழ்

01. ஒரு பத்திரிகை.
02. ஆண்டு குழம்பி உள்ளது.
04. அளவீடுகளில் ஒன்று குழம்பி உள்ளது.
09. தொடக்கம்.
27. வீட்டு மிருகம் தலைகீழாக உள்ளது.
29. வீடு.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.31 இன் விடைகள்

இடமிருந்துவலம்

01. கானகம்.
07. மருதம்.
16. கிழமை.
23. கனி.
27. அமைதி.
31. மா.
34. முதுரை

மேலிருந்துகீழ்

01. காமதேனு.
03. கதலி.
06. அக்கினி.
08. கருமை.
22. முதுமை.
23. கதிரை.
27. அலை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.31 இன் பரிசுக்குரியவர்

**நா.எழில், ஆண்டு - 02A, மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலயம்.**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.31இன் பாராட்டுக்குரியவர்கள்.

01. ம. பிறேமா, பாலிநகர், வவுனிக்குளம்.
02. வ.துசித்தா, குருமன்காடு, வவுனியா.
03. த.சுவர்ணா, தரம்-03, மு/கொல்லவிளங்குளம். அ.த.க.பாடசாலை.
04. லெ. வினோதா, கல்மடுநகர்.
05. யோ.தீபன், முழங்காவில்.
06. லோ.கருணாதேவி, வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.33
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# மறதியோ மறதி



லியனாடோ டாவின் ஸி உலகப் புகழ் பெற்ற ஓவியர். மற்றும் கணி தநிபுணர் என் பது உங்க ளுக்குத் தெரி யும். ஆனால் அவருக்கு ஞாபக மறதி அதிகம் என்பது உங்களுக்குத் தெரியுமா? எதையாவது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமானால் அதைக் குறித்து வைத்துக் கொள்வார், ஆனால் அதில் சங்கடம் என்ன வென்றால் அந்தக் குறிப்புப் புத்தகத்தையே அவர் பலமுறை தொலைத்துவிட்டு எங்கே வைத்தோம்?" என்பதை மறந்து விடுவாராம்....

இ.ராஜ்குமார்

# நல்லவை செய்வோம்

ஒற்றுமையை நினைப்போம்
ஒழுக்கத்தை கற்போம்
கலைகளை பயில்வோம்
கற்றதை மீட்போம்

நல்லோரை அணுகுவோம்
தீயோரை வெறுப்போம்
தீமையை கழிப்போம்
நன்மைகளைச் செய்வோம்.

இறையை வணங்குவோம்
பொறுமையை
கடைப்பிடிப்போம்
ஆசானை மதிப்போம்
புகழ் பெற்று வாழ்வோம்.

**ந.இந்துஜா,**
**கிளி/பிரமந்தனாறு ம.வி**

04.07.2003 வெள்ளிநாதம் பத்திரிகையில் 'மாயா' என்பவர் எழுதிய 'ஆரெட்டச் சொல்லியழ' என்ற கட்டுரை தொடர்பாக, மறு தரப்பினரின் விளக்கம் கீழேதரப்படுகிறது.

பிரச்சினைகளை மட்டுமல்ல, பிரச்சினைகளுக்கான விளக்கங்களையும் பிரசுரிப்பது பத்திரிகாதர்மம். இருப்பினும், அக்கட்டுரையில் சொல்லப்பட்ட சில விடயங்கள் குறித்து கட்டுரையாளரின் கருத்துநிலைக்கு சார்பான ஆதாரங்களும் கிடைக்கவே செய்துள்ளன. அவை இப்போதுள்ள மகப்பேற்றியல் வைத்திய நிபுணரின் நியமனத்திற்கு முந்திய காலத்தினதாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இது ஒரு விவாத மேடையாகி சர்ச்சைகளுள் எவரையும் சிக்கவைப்பதில் எமக்கு உடன்பாடில்லை... மக்கள் சேவையில் மோசடிகள், குழப்பங்கள் ஏற்படக் கூடாது என்பது மட்டுமே இப்படியான கட்டுரைகளைப் பிரசுரிப்பதன் நோக்கம் எவரையும் துன்பப்படுத்தவோ, மனப்பாதிப்புக்குள்ளாக்குவதற்கோ இல்லை....

# 'ஆரெட்டச் சொல்லியழ'

## 'மாயா'வின் கட்டுரை தொடர்பாக மறு விளக்கம்

**ஒரு சாதாரண** பிரசவத்திற்கு , திகதி குறிப்பது என்பது தாயிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் குறிக்கப்படும் ஒரு சராசரி கணிப்பீடாகும். இத்தகவல்களை மேலை நாட்டில் உள்ள பெண்களில் 40% ஆனவர்களே சரியான தகவல்களை வழங்குகின்றார்கள். எமது பிரதேசத்தில் இந்நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளக்கூடியதாகஇருக்கும்.

எல்லாச்சிசுக்களின் வளர்ச்சியும், தாயின் கருப் பையினுள் நாங்கள் எதிர்பார்ப்பது போல் சீராக இருப்பதில்லை. வளர்ச்சி குறைவான சிசுக்கள் பிரசவம் தொடங்கு முன்பேயே கருப்பையினுள் இறக்கக்கூடும். இவ்வாறான நிலமைகளை இலத்திரனியல் சாதனங்கள் மூலம் கண்டறிந்து தாயிற்கும், சிசுவிற்கும் எந்தவித பிரச்சினைகளும் இன்றி பிரசவம் நடைபெறும் நாளை தீர்மானிப்பது என்பது மகப்பேற்றியல் நிபுணத்துவத்தில் ஒன்று.

நன்கு வளர்ச்சியுள்ள ஒரு சிசு சராசரியாக கணிக் கப்படும் ஒரு பிரசவத் திகதிக்குப் பின் எவ்வளவு நாட்கள் கர்ப்பப்பையினுள் சிசுவின் உயிருக்கு ஆபத்தின்றி இருக்கும் என்பது அடுத்து தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம். நாட்செல்ல நாட்செல்ல பிள்ளை வளர்ச்சிக்கு ஏற்ப தேவைப்படும், தாயிடமிருந்து சூல்வித்தகம் ஊடாக சிசுவிற்கு செல்லும் குருதியின் அளவு குறைவடைவதனால், குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் சிசுவை வைத்திருப்பது என்பது ஆபத்தானது.

70% தாய்மார்களுக்கு குறிப்பிட்ட திகதிக்கு முன்பே பிரசவம் தொடங்கி விடுவதனால் இப்பிரச்சினை எழுவதில்லை. 30% தாய்மார்கள்ுக்கே மேற்குறிப்பிட்ட தீவிர கண்காணிப்பு அவசியமாகின்றது.

இத்தகைய தீவிர கண்காணிப்பின் இடையே, பிரசவத்திற்கு சரியாக கணிக்கப்பட்ட திகதியில் இருந்து சராசரியாக 7 - 10 நாட்கள் வரைதானாக பிரசவவேதனை ஏற்படுகின்றதா என்பது அவதானிக்கப்படும். சராசரியாக குறிக கப்பட்ட பிரசவத்திற்குரிய நாளில் இருந்து இன்னும் 07 நாட்களுக்கு மேல் தாமதப் படுத்தக்கூடாது என்பது மகப் பேற்றியல் மரபு (Universal) மாயா என்பவர் குறிப்பிட்டது போல நாள் சென்று, குத்துத் தொடங்க வலாமெனின் மகப் பேற்றியல் பிரிவு என்பது ஏன் வைத்தியசாலையில் இருக்க வேண்டும்.

மேலும் சில தாய்மார் களுக்கு, உயர்குருதி அமுக்கம், சலரோகம் இன்னும் பல வியா திகள் கர்ப்பகாலத்தில் ஏற் படுகின்றது. இவ்வாறான நோய் நிலைகளில் தாய் சிசு மரணங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும். இவ்வகை நிலைகளில் இருந்து தாயை காப்பாற்ற குறித்த திகதிக்கு வெகு முன்பே சிசுவை பிரசவிக்க வைக்கவேண்டிய அவசியமாகின்றது.

மேற்குறிப்பிட்ட நிலைமைகள் அனைத்திலும் எவ்வாறு சிசுவை பிரசவிக்க வைப்பது என்பது அடுத்து தீர்மானிக்கப்பட வேண்டியவிடயமாகும். இதுவரை காலமும் மேற்குறிப்பிட்ட நிலமைகளில் பின்வரும் மருத்துவ நடை முறைகள் கையாளப்பட்டன. அவையாவன.

01) கர்ப்பப்பையின் கழுத்து (Cervix) குழந்தை சாதாரணமாக பிரசவிக்கக் கூடிய நிலமையில் காணப்படா விட்டால் அறுவை சிகிச்சைமுறை (Casserian section) மூலமும்,

02) கர்ப்பப்பையின் கழுத்து, குழந்தை சாதாரண முறையில் பிரசவிக்கக் கூடியதாக விரிவடைந்து இருந்தால் சின் ரோசினோன் எனும் மருந்தை தாய்க்கு கொடுப்பதன் மூல மும் பிரசவத்தை உண்டு பண்ணலாம்.

மேற்குறிப்பிட்ட முறைகள் அனைத்தும் ஓர் தகுதிவாய்ந்த மருத்துவரினால் மட்டுமே கையாளப்படக் கூடியவை. ஆனால் தற்போதைய நவீன கண்டுபிடிப்பான புறோஸ்ரகிளான்டின் (Prosta Glandin $PGE_2$) மகப்பேற்றியல் முறையில் புதிய மாற்றத்தை கொண்டு வந்திருக்கிறது. இம் மருந்தை யோனி வழியின் மேற்பகுதியில் வைக்கும் போது (மாயா எழுதியதுபோல் கருப்பையினுள் திணிக்கப்படுவது இல்லை), மூடப்பட்ட கர்ப்பப்பையின் கழுத்து, பதப்பட்டு விரிவடைவது மட்டுமின்றி, பிரசவ வேதனையையும் தொடக்கி வைக்கின்றது.

கருப்பையின் கழுத்து விரிவடைந்தவுடன், பன்னீர் குடம் உடைக்கப்பட்டு சின்ரோசினோன் எனும் மருந்து சேலைன் (N.saline) எனும் திரவத்துடன் சேர்க்கப்பட்டு ஊசிமூலமாக உடலினுள் உட்செலுத்தப்படும் போது சாதாரண பிரசவம் நிகழுகின்றது. எனவே இம் மருந்து பாவிப்பதன் முக்கிய நோக்கம் கர்ப்பப்பை கழுத்து சாதாரணமாக பிரசவிக்கக்கூடிய நிலையில் கணப்படாமல் உள்ள கர்ப்பிணிப்பெண்களுக்கு தேவையற்ற அறுவைச் சிகிச்சையை குறைத்து சாதாரண பிரசவத்தை உருவாக்குவது ஆகும்.

மருத்துவ ஞானமற்ற மாயா என்பவர் இக்கூற்றினை திரிபு படுத்தி, அறுவைச் சிகிச்சை முறையினை கூட்டுவதாகவும் கருச்சிதைவு ஏற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நவீன மருந்து விலை கூடியது என்பதால் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு, அரசாங்கத்தினால் வழங்கப்படுவது இல்லை. தேவையற்ற ஒரு அறுவைச்சிகிச்சையினால் ஏற்படும் பக்கவிளைவுகளை தடுப்பதற்கும், அதன் பின்பு அடுத்தடுத்த பிரசவங்களினால்ஏற்படும் பக்கவிளைவுகளை (மரணம், உட்பட) தடுப்பதற்கும் தேவையான கர்ப்பணித் தாய்மார்களிற்கு இம்மருந்தை வாங்குவதற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

இம் மருந்து வவுனியாவில் இல்லாத காரணத்தினால் அண்மையில் உள்ள அனுராதபுரத்திற்கு தேவையான மக்கள் இதனை வாங்கச் செல்கின்றார்கள். ஓரிரு வேளைகளில் ஆலோசனை வழங்கப்பட்ட தாய்மாருக்கும் கர்ப்பப்பையின் கழுத்து மருந்து பாவிப்பதற்கு முன்பே சாதாரணமுறையில் சிசு பிரசவிக்க கூடிய முறையில் விரிவடைந்து பிரசவம் ஆரம்பமாகலாம். இதை கடவுள் தவிர எந்த மருத்துவராலும் தீர்மானிக்க முடியாது.

கடையில், கொமிசன் என்று தன்னலமற்ற சேவை வழங்கும் ஒரு பிரிவை அவதூறுபடுத்தியும், கொச்சைப் படுத் தியும் எழுதியிருப்பது மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது.

இம் மருந்து பாவிப்பது குழந்தை கர்ப்பப்பையினுள் சமாதி ஆவதை தடுப்பதற்கே ஆகும் என்பது உங்களுக்கு புரிந்திருக்கும்.

மகப்பேற்றியல் முழுவதையும் ஒரு கடிதத்தினூடாக விளங்கப்படுத்துவது என்பது யாராலும் முடியாத காரியம். எம்மால் இயலுமானவரை நாம் தெளிவு படுத்தியுள்ளோம்.

**இப்படிக்கு,**
**டாக்டர் துஸ்யந்தன்,**
வைத்திய அதிகாரிகள் சங்கம்
பொது வைத்தியசாலை,
வவுனியா.

# எங்கள் மண்ணின் மாண்பு

**— சிதம்பரதிரு —**

*எங்கள்மண் வளமானது. இந்த வளத்திற்கு அடிப்படைக்காரணம் எங்கள் மண்ணில் உள்ள இயற்கைத் தாவரங்களே. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. ஆனால் மரங்கள் இல்லா இடத்தில் வாழத்தான் முடியுமா?*

*மரங்களின் இயற்கை எமக்குத்தந்த அரும் பெரும் கொடை. பசுமை பொங்கிச்சரிய பெருத்து விரிந்து நிற்கும் மரங்களின் ஒருகிளையைக்கூடத்தறிப்பது பொருத்தமானதா?*

*அமரர் நாக.பத்மநாதன் அவர்கள் "ஆதாரம்" சஞ்சிகையில் எழுதிய "மண்ணின் குரல்"எனும் உருவக் கதையினை இங்கு தருவது பொருத்தமானது என நினைக்கின்றேன்.*



**மண்ணின் குரல்.**

*"கொதிக்கும் நிலத்தின் அடியிலே பட்ட வேரொன்று தன்கதையைச் சொல்லத்தவித்தது."*

*"சொல்" என்றேன். அது பலத்தபடி கூறிற்று.*

*"பொன் முட்டையிட்ட வாத்தை வெட்டினானாம் பேராசைக்காரன்."*

*"இது பழைய க்கதைதானே!" என்றேன்.*

*"ஆனால் இன்று நடப்பதும் இதுதான்! இனி நான் மண்ணுள் மடியப்போகும் சிறியவேர். இதற்கு முன் ஒரு விருட்சமாய் நின்றேன். நாங்கள் கொடுத்த தழைகள், கிளைகள் பல்லாண்டு காலம் வழங்கிய பெரும் பெரும் கொப்புக்கள் ஏராளம்.*

*ஆனால் பாதகன் ஒருவன் முழுமரமாய் எம்மை விற்றான். வாங்கினான் இன்னொருவன் கிளைகளைத் தறித்த பின் எம்மை அடியோடு வெட்டி வீழ்த்தினான். விறகுக்காகக் கொண்டு சென்றான். வெறும் மணலை மட்டுமே விட்டுச் சென்றான்" என்றது.*

*இவ்வேளை இன்னொரு குரல்கேட்டது. அது பூமியின் குரல்.*

*"நான் பசுமையை ஆக்குகிறேன். வாழ்வுக்கு உதவ மரங்களை வளர்க்கிறேன். இன்றைய மனிதரகங்கள் செய்வது...?"*

*என் மனச்சான்று வலித்தது.*

# குறிஞ்சாத்தீவு உப்பளம்

**சிவகமலா**


**வன்னிப்** பெருநிலப் பரப்பில் அமைந்துள்ள ஆனையிறவு குறிஞ்சாத்தீவு உப்பளம் எம்மக்களின் வரப்பிரசாதமாகும். நாடு பூராகவும் தேவையைப்பூர்த்தி செய்யக்கூடிய அளவில் உப்பு இங்கு உற்பத்தி செய்யப்பட்டது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்பு குறிஞ்சாத்தீவு உப்பளம் ஆரம்பத்தில் 60 ஏக்கர் நிலப் பரப்பில் 10 பாத்திகள் வீதம் அமைக்கப்பட்டு, 60 ஏக்க ரிலும் 600பாத்திகளில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. 600 பாத்திகளிலும் ஓர் ஆண்டுக்கு விளை விக்கப்பட்ட சராசரி உப்பு, 30,000 - 35,000 மெற் றிக்தொன் ஆகும்.

இந்தநிறு வனத்தில் 1134 ஊழியர்கள் வேலை வாய்ப்பைபெற்று வேலை செய்து வந்தனர். இவர்களை தற்காலிக, நிரந்தர, பருவகால ஊழியர் என்று தரம் பிரித்து அவர்களின் சேவைக் கேற்ப, பதவிக்கேற்ப, சம்பளத்திட்டம் அமைந்திருந்தது. இந்த ஊழியர்கள் யாவரும் அயராது உழைத்தனர்.

1976ஆம் ஆண்டு குறிஞ் சாத்தீவு உச்சி உற்பத்தி ஆண்டாகக் காணப்பட்டது. இந்த ஆண்டிலேயே 37,000 மெற்றிக்தொன் விளைவைப் பெற்றது. இது ஆனையிறவு உப்பளத்துடன் அண்டியிருப்பினும் தனியான அமைவிடத்திலேயே உப்பு விளைவிக்கப்படுகிறது. எனினும் ஆனையிறவு உப்பளத்துடன் ஒப்பி டும் போது கிட்டத்தட்ட இரண்டினது விஸ்தீரணமும் ஒரே அளவாகக் காணப்படுகிறது.

1966ஆம் ஆண்டுக்கு முன் உப்புத்திணைக்களத்தின் கீழ் இயங்கிவந்தது. பின்பு 1966ஆம் ஆண்டு தொடக்கம் 1992ஆம் ஆண்டு வரை கூட்டுத்தாபனமாக இயங்கி வந்தது. 1990 ஆம் ஆண்டு இரா ணுவ அனர்த்தத்தால் உப்பளம் மூடப் பட்டதுடன் 1992ஆம் ஆண்டின் பின் இலங்கையின் அனைத்து உப்பளங் களும் தனியார் மயமாக்கப்பட்டது. எனினும் ஆனையிறவு உப்பளம் மட் டும் இன்னும் தனியார் மயப்படுத் தப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.



இதற்கான காரணம் இரா ணுவக்கெடுபிடியும் இதன் தள அமைவிடமும் ஆகும். இலங்கை யில் பல பிரசித்தி பெற்ற உப்பளங் கள் உள்ளன. அவை ஆனையிறவு, புத்தளம்,பாலாவி, அம்பாந்தோட்டை யாகும். இதைவிட மன்னார், செம்மணி போன்ற இடங்களிலும் உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது.

புத்தளத்தில் அமைந்துள்ள உப்பளம் கம்பெனி மூலமும், அம்பாந்தோட்டையில் அமைந்த உப்பளம் E.T.F நிறுவனம் மூல மும் மன்னார் செம்மணி மாந்தை யாகிய இடங்களில் அமைந்த உப்பளங்கள் "மாந்தை உப்பு உற் பத்தி லிமிட்டட்" மூலமும் இயங்கு கின்றது.

தற்போது குறிஞ்சாத்தீவு உப்பளமானது உப்பு உற்பத்தி நிறுவனத்தால் மீள்பொலிவு பெற்று உப்பு விளைவிக்கப்படுகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பால் உப்பு உற்பத்தி விஸ்தீரண அளவு பன்மடங்காகக்குறைந்துள்ளது. தற்போது 12 ஏக்கர் மட்டுமே புனர மைப்புச்செய்து உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

உப்பு உற்பத்தி செய் வதற்கு 1பாத்தி அமைப்பதற்கு ஏற்படும் செலவு 7000 ரூபாவுக்கும் அதிகமாகும். ஒரு ஏக்கரில் 10 பாத்திகள் அமைக்கலாம். இவற் றிற்கான மொத்தச்செலவு 70,000 ரூபாவுக்கு அதிகமாக தேவைப் படுகிறது.

உப்பு உற்பத்திக்கான காலம் மே - யூன் மாதம் தொடக்கம் ஒக்டோபர் 15வரையாகும் கால நிலை சீராக இருக்கும் போது வருடம் ஒன்றிற்கு 60 ஏக்கரிலும் சராசரியாக சுமார் 6000மெற்றிக் தொன் உப்பைப்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(சி-8233)

# பொருண்மிய வாசல்

பகுதி-03



## தொடர்கதை

### அத்தியாயம் -05

‘சரிதான் நீ சரியான முறையில் நடந்து கொண்டால், நீ இங்கு இருப்பதற்கு தடைகள் எதுவும் இருக்காது. எனசோட்லி அன்புடன் கூறினான். நீ எங்கிருந்தும் ஓடி வர வில்லை. உனது பாட்டன் இங்கே கொண்டு வரப்பட்டான். அவனுக்கும் இங்கு வருவதற்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை. ஆனால் எங்கிருந்தோ ஓடி வந்த கௌசக் போன்றவர்களால் எந்தவித பிரியோசனமும் இல்லை.’

‘எனக்கு எங்காவது பிரயாணம் செய்ய வேண்டுமென்று தோன்றியதேயில்லை என்றான் நீக்கிரோ.


‘சரிதான் என்றான் சோட்லி. நான் மறுபடியும் பிரயாணம் செய்வதானால், அது ஆபிரிக்காவுக்கோ அல்லது சீனாவுக்காகவோதானிருக்கும். இந்தஇரண்டு இடங்களுக்கும் போனால், பார்த்தவுடனேயே எமக்கும் அவர்களுக்குமிடையேயுள்ள வித்தியாசம் உடனேயே தெரிந்துவிடும். மற்றைய இடங்களுக்கு சென்றால், கதைக்கத் தொடங்கிய பின்னரே, வித்தியாசம் தெரியும். இதைக்கூட எப்போதும் சொல்லமுடியாது. ஏன் என்றால் அங்குள்ளவர்களில் அரைவாசிப்பேருக்கு ஆங்கிலம் தெரியும். நாம்தான் பிழை விடுகிறோம். ஒவ்வொருவரும் தமது மொழியை மட்டும் தெரிந்தவர்களாக இருந்தால் பிரச்சினைகளில் பல பெருமளவில் விடுபட்டுப்போய்விடும். இருமொழிஅறிவு என்பது, ஒருவனது கண்கள், தலையின் பின்புறத்தில் இருப்பது போன்றது என எனது மனைவி கூறுவாள்.’ அவளை மிஞ்சி எதுவுமே நடந்ததில்லை.

‘உன்னால் அவளின் அளவுக்கு முடியாதுதான்.’ பையன் முணுமுணுத்தான். அவள் மிகவும் மென்மையான இளகிய குணங்களை கொண்டவள் தான். அவளைப் போன்ற மென்மைகொண்ட ஒரு வெள்ளை இனம்பெண்ணை, நான் ஒருபோதும் கண்டதேயில்லை.

சோட்லி மறுபடியும் திரும்பி எதுவும் பேசாமல், சிறிது நேரம் வேலை செய்தான். சில நிமிடங்களின் பின், நிமிர்ந்து தனது கையிலிருந்த மண்வாரியின் கைபிடியால், அந்தக்கறுத்தப்பையனின் தோள்களில் மெதுவாகத்தட்டினான். சோட்லி ஒரு செக்கன் அந்தப் பையனின் முகத்தை, தனது ஈரமாக்கிவிட்ட கண்களில் தோன்றிய மிகுந்த அர்த்த புஷ்டி நிறைந்த பார்வையுடன் நோக்கினான். பின் இதற்குப்பழிவாங்குவதே எனது வேலை. கடவுள் இதற்கான கட்டளையை எனக்குத்தந்துள்ளான்.’

தான் நடந்து கொண்டது பற்றி நகரத்திலுள்ளவர்கள், சோட்லி கூறியிருந்த விதத்திலேயே தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை மிஸிஸ்மக்கின்ரயர் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. அவளது நடவடிக்கை குறித்து அங்கிருந்த எல்லோரும் குறைபட்டுக்கொண்டனர். அவளுக்கு இந்நிலையில் இப்போது எப்படியும் கௌசக்கை வெளியேற்றுவதற்கான வலுவான கடமைப்பாடு இருக்கிறது என்பது விளங்க ஆரம்பித்தது. ஆனால் அதைச்செய்வது கடினமானது என்பதால், அதை அவள் தவிர்த்து வந்தாள்.

அதிகரித்து வரும் குற்ற உணர்வை இனிமேல் பொறுக்க முடியாமல், ஒரு குளிர் மிகுந்திருந்த சனிக்கிழமை, காலை உணவை உட்கொண்டபின், கௌசக்கை அப்புறப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மிஸிஸ்மக்கின்ரயர் புறப்பட்டாள். அவள் யந்திரங்கள் விடும் கொட்டைகைக்கு வந்தபோது, அங்கே கௌசக் சுறுசுறுப்புடன் ரக்ரரில் ஏறும் சத்தம் கேட்டது.



# இடம் பெயர்ந்தவன்

## பிளானறி ஓ கொணரின்

நிலம் முழுவதும் உறைபனியால் மூடிக்கிடந்தது. வயல்கள் எல்லாம் செம்மறி ஆட்டின் கரடுமுரடான முதுகைப் போலத்தென்பட்டன. மரங்கள் எல்லாம் காய்ந்து தடிப்பான மயிர்கள் போல் சிலிர்த்தெழும்பி மேல்நோக்கி ஆகாயத்தை தொடுவது போல் இருந்தது. கொட்டகையில் இருந்து வந்த ஒலியால், அந்தக்கிராமப்புற அமைதி குலைந்து போனது. சிறிய உழவியந்திரத்திற்கு முன்னாலிருந்த தரையில் முழங்காலில் நின்று கொண்டு, யந்திரப்பாகம் ஒன்றை கௌசக் பொருத்திக்கொண்டிருந்தவன், இன்னும் 30 நாட்களுக்கு மட்டுமே அவளிடம் வேலை செய்ய வேண்டியிருக்கும். “அதற்குள் வயல் முழுவதையும் உழவுசெய்து விடமுடியுமென்று” அவள் எண்ணினாள். கறுத்தப் பையன் சில உபகரணங்களுடன் நின்றான். சோட்லி கொட்டகைக்குள் அப்போது வந்து பெரிய உழவுயந்திரத்தில் ஏறினான். அவனும் நீக்ரோவும் வெளியே சென்றபின் தான் செய்யவந்துள்ள விருப்பமற்ற அந்தக் கடமையை நிறைவேற்றக் காத்திருந்தாள். அந்தக் கடினமான நிலத்தை காலால் உதைத்தாள். பாரிசவாதம் வந்தது போல், குளிர் அவளது கால்களிலும், கைகளிலும் ஏறியது. ஒரு தடித்த கறுப்புக் கோட்டும், தலையில் சிவந்த துணியும் அணிந்திருந்தாள். கண்கள் கூசாமலிருக்க, கறுத்தத் தொப்பியை முன்புறமாக சரித்து அணிந்திருந்ததால், அதன் கறுத்த விழிம்புகளின் கீழிருந்த அவளது முகம் சுருக்கங்களுடன் திகழ்ந்தது. எதுவும் பேசாமலிருந்தும் கூட இரண்டொருமுறை அவளது இதழ்கள் தானாகவே அசைந்தன. உழவுயந்திரம் போடும் சத்தத்திற்கு மேலாக சத்தமிட்டபடி, ஸ்குரூரைவரை எடுத்துத்தரும்படி நீக்கிரோவை கௌசக்கேட்டான். அது முன்னோக்கி வந்ததும் அவளுக்குத் தெரிந்தது. நீக்கிரோ பூமியிலிருந்து ஒரு ஸ்பிரிங்கினால் தூக்கி எறியப்பட்டது போல், அது வந்த பாதையிலிருந்து துள்ளிக்குதித்தான். சோட்லி நம்பமுடியாத அளவுக்கு மெதுவாக தலையைத் திருப்பி, தோள்பட்டை வழியே பார்த்தான். இடம்பெயர்ந்தவனை நோக்கிச் சத்தமிட அவள் நினைத்தாள். ஆனால் அவளால் முடியவில்லை. அவளது பார்வையுடன் சோட்லியினதும் நீக்ரோவுடையதும் மோதி, பின் அவர்கள் என்றைக்குமான

கிடைத்தவுடன் பின்புறமாகி, அந்தக் குளிர்ந்த தரையில் மிசினின் கீழே உட்புகுந்தான். அவனது முகத்தை அவளால் பார்க்கமுடியவில்லை. அவனது கால்களும் பாதங்களும் உடம்பின் ஒரு பகுதியும், நாகரீகமற்ற வகையில் ரக்ரரின் ஒரு பக்கத்தால் வெளியே தெரிந்தன. அவன் அணிந்திருந்த றப்பர் பாத அணிகளில் சேறு சிதறிப்பட்டு, காய்ந்து வெடித்துக் காணப்பட்டது. அவன் ஒரு தொடையை மேல்எழுப்பி, பின் பதித்து ஒரு பக்கமாக சரிந்து கொண்டான். அவனில் அவளுக்கிருந்த எல்லாக்கோபங்களிலும், அவன் அங்கிருந்து தானாகவே அகலவில்லை என்ற சினமே மேலோங்கியிருந்தது.

சோட்லி பெரிய ரக்ரரில் ஏறி கொட்டகையிலிருந்து வெளியே கொண்டு வந்தான். அதனது சக்தியும் வெப்பமும் அவனுக்கு ஒரு வலிமையும் திடீரென ஏற்பட்ட ஒரு தூண்டுதலையும் ஏற்படுத்தவே, சடுதியாக அதற்குக்கட்டுப்பட்டான். அவன் சிறிய யந்திரம் இருக்கும் பக்கமாக அதைச்செலுத்தி, பின் ஒரு சிறிய சரிவில் அதை நிறுத்திவிட்டு அதிலிருந்து பாய்ந்திறங்கி கொட்டகையை நோக்கி நகர்ந்தான். இப்போது கிடையாகி விட்டிருந்த கௌசக்கின் கால்களையே மிஸிஸ் மக்கின்ரயர் பார்த்துக்கொண்டிருந்தாள்.பெரியரக்ரரிலிருந்து பிரேக்நழுவும் சத்தமும் கணக்கிட்டு வைத்தது போல் அது தன்மையுடன் விறைத்துப்போயினர். போலிஸ்க்காரனின் முதுகொலும்பை யந்திரத்தின் சில்லு உடைத்த போது, அவனிடமிருந்து மெலிதான சத்தமேகேட்டது. அவள் மயங்கி விழுவதைக்கண்ட இருவரும் அவளை நோக்கி ஓடி வந்தனர்.

அவளுக்கு தான் எங்கோ ஓடியது (அனேகமாக அது வீட்டுக்குள் ஓடியதாகவும் பின் திரும்பி வந்ததாக இருக்கலாம்) நினைவில் இருந்தது. பின்பு அவள் அந்தச் சம்பவம் நடந்த இடத்திற்கு திரும்பி வந்தபோது, ஏன் வீட்டுக்குள் ஓடினாள் என்றோ, திரும்பவும் அறையில் மயங்கி விழுந்தாளா என்றோ அவளால் நினைவுபடுத்த முடியவில்லை.

அவள் பின்பு உழவுயந்திரப்பகுதிக்கு வந்தபோது, அம்புலன்ஸ் வந்திருந்தது. கௌசக்கின் உடல்மேல் அவனது மனைவியும் இரு குழந்தைகளும் கவிழ்ந்து கிடந்தனர். அத்துடன் ஒரு கறுத்த உடைதரித்த உருவம் ஏதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. முதலில் அது ஒரு டொக்ரராக இருக்கலாம் என மிஸிஸ்மக்கின்ரயர் எண்ணினாள். பின்பு ஒரு வெறுப்பான உணர்வுடன், அது பாதிரியார் என இனம் கண்டு கொண்டாள். அவர் தான் அம்புலன்ஸை அழைத்து வந்தவர். நெரிபட்டவனின் வாய்க்குள் எதையோ நழுவ விட்டுக்கொண்டிருந்தார். ஒரு நிமிடத்திற்குப்பின் அவர் எழுந்துநிற்க, அவரது இரத்தம் தோய்ந்த காற்சட்டையைப்பார்த்த பின்னரே, அவரது முகத்தை அவள் பார்த்தாள். அவளைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவர்., அவளில் இருந்து பார்வையை விலக்கிய போது, மற்றக்கிராமமக்களில் தெரிந்தது போலவே, எந்தவித சலனமும் அதிலும் தெரியவில்லை. அவளும் அந்த அனுபவத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து மீளமுடியாமல் அவரை தொடர்ச்சியாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

நடக்கும் எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து அவளது மூளையால் கிரகிக்க முடியவில்லை. தான் வேற்று நாடொன்றில் இருப்பது போலவும், அந்த உடம்மை சூழ்ந்து அந்த நாட்டினர்குனிந்த நிலையில் பார்த்துக் கொண்டிருப்பது போலவும், தான் ஒரு அந்நியப்பெண் போல் கௌசக்கின் உடம்மை அம்புலன்சில் ஏற்றுவதைப் பார்த்துக்கொண்டிருப்பது போலவும் மிஸிஸ்மக்கின்ரயருக்கு தோன்றியது.

**பின்கதை:-**

அன்று பின்னேரம் எந்த வித முன்னறிவித்தலுமின்றி சோட்லியும் புதிய வேலை ஒன்றை ஏற்பதாக அங்கிருந்து வெளியேறினான். நீக்கிரோசல்க் உலகின் வேறு பகுதிகளை பார்க்க வேண்டும் என்று தோன்றிய சடுதியான ஆசையால், நாட்டின் தென்பகுதியை நோக்கிச்சென்றான்.

**சு.மகேந்திரன்**

அஸ்ரரால் ஒரு துணையில்லாமல் வேலை செய்யமுடியவில்லை. எந்த வித உதவிகளும் கிடைக்காத இந்த நிலையில் அவளை நரம்புத்தளர்ச்சி நோயை உண்டாக்கி, வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டியநிலை மிஸிஸ்மக்கின்ரயருக்கு ஏற்பட்டது. வைத்தியசாலையிலிருந்து வெளியே வந்தபோது, அந்த எஸ்ரேற்றை நிர்வகிக்கும் சக்தி தனக்கில்லை என்பது அவளுக்குப் புரிந்தது. மாடுகளை இதற்காகவே இருக்கும் ஏல விற்பனையாளர்களிடம் கொடுத்தாள். அவன் அதனைநட்டத்தில் விற்றுக் கொடுத்தான். இருப்பதைக் கொண்டு வாழ தனது ஓய்வுபெற்ற இக்காலகட்டத்தில் முயன்றாள். மேலும் குறைந்துகொண்டு போகும் தேகசுகத்தையும் கவனிக்கவேண்டியிருந்தது. ஒரு கால் செயலிழக்க கைகளும் தலையும் நிலைதவறி ஆடத்தொடங்கின. நாள் முழுவதும் படுக்கையிலிருக்க வேண்டிய நிலைஏற்பட, ஒரு கறுப்பினப்பெண் எந்நேரமும் பக்கத்திலே இருக்கவேண்டியநிலை ஏற்பட்டது. அவளது கண்பார்வை குறைய, பேச்சு வெளியே வரமாட்டாத நிலை ஏற்பட்டது. அவளை நினைவில் வைத்து அதிகமாக எவருமே கிராமத்திலிருந்து வருவதில்லை. அந்த வயதான பாதிரியார் மட்டுமே வருபவராக இருந்தார்.ஒருபை நிறைந்த் பாண் துண்டுகளுடன், கிழமைக்கு ஒருமுறை தவறாமல் அவரும் வரும் அவர், அவற்றை மயில்களுக்கு கொடுத்தவிட்டு, அவளின் பக்கத்திலிருந்து தேவாலயத்தின் கோட்பாடுகளைச் சொல்லியபடியிருப்பார்.

(முற்றும்)

---

## ஊக்கமாத்திரை



# நிறைவான சமூகம்

ஒரு சமூகம் என்பது குறித்த ஒரு தொகையான மக்கள் ஒன்று சேர்ந்து, தம்மையும் நிறைவாக்கி, அடுத்துள்ளோர்க்கும் உதவிபுரிந்து சந்தோஷத்துடனும் நிம்மதியுடனும் வாழ வழிசெய்யும் ஒரு கட்டமைப்பாகும்.

இங்கு பெரியவன், சிறியவன் என்ற பாகுபாடு இருத்தல் ஆகாது. கற்றவன் கல்லாதவன் என்ற வேறுபாடு இருக்கக் கூடாது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசம் இருத்தல் ஆகாது. எல்லோரும் ஒரு தாயின் மக்களாக வாழப் பழகுதல் வேண்டும்.

இந்தச் சமூகக் கட்டுக்குள் வழி காட்டிகளாக முதியோர்கள் திகழ வேண்டும். அவர்கள் சமூகத்தின் விழுமியங்களை நன்கு தெரிந்திருப்பாராகையினால் வழி காட்ட வேண்டிய பொறுப்பு அவர்களுடையதாக இருத்தல் முக்கியமானது.

முதியவர்கள் மார்க்கங்களைக் காட்டிக் கொடுக்க முடியுமாயின் இளைஞர் குழு அதனை நெறிப்படுத்தத் தயாராக இருக்க வேண்டும். இன்று இளைஞர்கள் உலகின் ராஜாக்களாக இருக்கின்றார்கள். அவர்களின் உன்னத செயற்பாடுகளே பல அற்புதங்களை நிகழ்த்த உதவியாக உள்ளன. அவர்கள் நினைத்தால் அகிலத்தையே அசைத்துக் காட்ட முடியும். இந்த வகையில் ஒரு சமூகத்தின் உயர்வைச் சித்தரிக்கக் கூடிய பொறுப்பு வாய்ந்தவர்கள் இளைஞர்கள் யுவதிகளே...

மேலும் ஒரு சமூகம் சிறப்படைய வேண்டுமானால் கல்வி,அறிவு என்பன சிறப்பாகப் பேணப்பட வேண்டும். வேலை வாய்ப்புகளுக்கான கல்வியாக இல்லாது பண்போடு கூடிய கல்வியாக, பகுத்தறியக் கூடிய கல்வியாகப் பெறவேண்டிய ஒழுங்குகள் மாணவரிடையே ஊட்டப்பட வேண்டும். மூடத்தனமான பழக்கவழக்கங்களை மாற்றியமைக்கக் கூடிய வழிவகைகள் ஆராயப்பட வேண்டும். இந்த ரீதியில் மாணவர் சமுதாயம் ஒழுங்கமைக்கப்பட முடியுமானால் ஒரு சமூகம் என்பது நிறைவானதாகவும் சந்தோஷமானதாகவும் பரிணமிக்க முடியும்.

மொத்தத்தில் திட்டமிடுதலின் மூலம் செயற்பட முடியுமாயின் ஒரு சமூகத்தை உயர்ந்த ஸ்தானத்திற்குக் கொண்டுவர முடியும் என்பதுஎல்லோர் மனத்திலும் இறுக்கமாகப் பதிக்கப்பட வேண்டியதாகும்.

**மாவன்னா**

# படைத்தரப்பு ஒத்துழைப்பு போதாமையால் தாமதிக்கும் மனிதநேயப்பணி


அண்மைக்காலமாக யாழ்குடாநாட்டில் இராணுவத்தால் யுத்த காலத்தில் புதைக்கப்பட்டு, கைவிடப்பட்ட பல்லாயிரக்கணக்கான மிதிவெடிகள் மற்றும் வெடி பொருட்களினால் மக்கள் மத்தியில் அச்சத்தையும் பெரும் ஆபத்தையும் அவையவங்கள் இழப்பையும் ஏற்படுத்தி வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் மனித நேய நிபுணர்களினால் வெடி பொருட்கள் அகற்றும் நடவடிக்கை தொடர்ந்தாலும், இராணுவத்தினரால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள கண்ணிவெடிகள் (UXO) மற்றும் வெடிபொருட்களை முழுமையாக அகற்ற முடியாமலும், பயிற்றப்பட்ட ஆளணி பற்றாக் குறையாலுமே இவ்வனர்த்தங்கள் ஏற்பட காரணமாக இருக்கலாம்.

மற்றும் இராணுவத்தினர் கண்ணிவெடிகளை அகற்றும் மனித நேய அமைப்புக்களிடம் தங்களின் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டது தொடர்பான தெளிவான வரை படத்தினைக்கொடுத்து அவர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்காமையுமே.

இதில் வேடிக்கையானதும் நகைப்புக்குரியதுமான விடயம் என்னவெனில் சில தினங்களுக்கு முன்னர் யாழ் குடாநாட்டில் மனித நேயத்தினரால் அச்சிடப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பான எச்சரிக்கை வாசகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை இராணுவத்தினர் மக்களுக்கு பிரயோகித்தமையே.

இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட வெடிபொருட்களின் இடங்கள் தொடர்பான வரை படத்தினை மனிதநேயகண்ணி வெடிஅகற்றும் பிரிவினரிடம் முழுமையாக ஒப்படைத்து ஒத்துழைக்காமல், அவர்களால் வெளியிடப்பட்ட வெறும் கடதாசியிலான துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகிப்பதால் என்ன பயன். அதனை வெடிக்காமல் தடுத்து விட முடியும் என எண்ணுகின்றார்கள் போலுள்ளது அவர்களின் செயற்பாடு.



இப்படி துண்டுப்பிரசுரங்களை மக்கள் மத்தியில் விநியோகிப்பதால் தாங்கள் வெடி பொருட்கள் அகற்றும் பணியில் முழுமையாக செயற்படுவதாக வெளிக் காட்டிக்கொள்ள முனைகின்றனரே தவிர, உண்மையான இதய சுத்தியுடன் அல்ல. அவர்களாலேயே புதைக்கப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பாக அவர்களே எச்சரிக்கை செய்வது ஒரு கண் துடைப்பு நடவடிக்கையாகவேயுள்ளது.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஒன்றரை வருடத்திற்கு மேல் பூர்த்தியாகி விட்ட நிலையிலும் இதனை அகற்றி அச்சுறுத்தல் இல்லாமல் மக்களின்இயல்பு வாழ்க்கையை மேம்படுத்த முடியாமைக்கு காரணம் இராணுவத்தினரின் அக்கறையின்மையும், அகற்றாமையுமே முக்கிய காரணமாகவுள்ளது.



அண்மைக்காலமாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே பெரும்பாலான சம்பவங்கள் நடைபெற்று வருகின்றது. இவ்வாறான சம்பவங்கள் யாழ்குடாநாட்டில் சில தினங்களுக்கு முன்னர் மட்டுவிலிலும் அதனை அடுத்து சுன்னாகத்திலும் இடம்பெற்றது தெரிந்ததே.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அநேகமான இடங்களில் "வெடிபொருட்கள் கவனம்" என்ற பலகைகள் மற்றும் அபாயக்கொடிகள் அலங்காரக் கொடிகளாகக்காட்சியளிக்கின்றனவே தவிர அவற்றை விரைவில் அகற்றி மக்களின் சுதந்திரமான இயல்பு வாழ்க்கைக்கு இட்டுச்செல்லவில்லை.

இவ்விடயத்தினை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்துடன் ஒப்பிடும்போது அண்மைக்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் பெருமளவில் குறைந்து விட்டது என்றே கூறவேண்டும்.

**க.ஜெயசீலன்**

இதற்கு காரணம் உள்ளூரில் இருந்து பயிற்சி பெற்று மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடேயாகும். பாதுகாப்பு அரண்கள் அமைந்திருந்த இடங்களை அண்டிய பகுதிகளையும் மக்கள் மீளக் குடியேறும் இடங்களையும் மற்றும் மக்களின் அன்றாட நடமாட்டங்கள் கூடுதலாக காணப்படும் இடங்களையும் கண்டறிந்து தொகுதி வாரியாக அகற்றி அழித்து வருகின்றனர். இவர்களின் சேவை அளப்பரியது. ●



# நேர்நோக்கு

## ஆபத்தான நிலை எது?

வரலாற்றில் மிக அபாயகரமான காலத்தை இலங்கை எதிர்நோக்கி வருகின்றது என அபாய எச்சரிக்கை விடுத்திருக்கிறார் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. நாட்டின் ஆட்சியாளர் ஒருவர் நாட்டின் ஒரு பகுதியை மற்றொருவருக்கு கையளிக்க தயாராவது இதுவே முதல் தடவையாகும் எனவும் போலியான சமாதானத்தின் பேரில் விடுதலைப்புலிகளிடம் நாட்டைக்கையளிக் கப்போவதாகவும் அவர் கூறுகிறார். இதனை அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கிற்கு ஓர் இடைக்கால நிர்வாகக்கட்ட மைப்பை உருவாக்குவதற்காக ஐக்கியதேசிய முன்னணி முன்வைத்துள்ள திட்ட வரைவு தொடர்பாகவே அவரது இந்த எச்சரிக்கை அமைந்திருக்கிறது என்பது வெளிப்படையான விடயமாகும்.

இந்தத்திட்ட வரைவு எதனைச்சாதிக்க போகிறது என்பது ஒரு புறமிருக்க அது தொடர்பாக இன்று தென்பகுதி மக்களுக்குச் சொல்லப்படுவது அதற்கு விரோதமான கருத்துகளே. அரசாங்கம் இத்திட்டவரைவு குறித்து இரு மனத்துடன் செயற்பட்டதா? அல்லது எவரையாவது ஏமாற்ற முனைகிறதா? என்ற கேள்விகள் விடுதலைப்புலிகளுக்கும் சனாதிபதிக்கும் இருவேறு பட்ட அல்லது சிறிதளவாயினும் மாறுபட்ட திட்ட வரைபுகள் அனுப்பப்பட்டமை எழுப்பின இக்கேள்விகளை பொதுசன ஐக்கிய முன்னணி குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவே பலமாக எழுப்பினார். இரண்டு திட்ட வரைவுகளும் தனக்குக்கிடைக்கவேண்டுமென வலியுறுத்தினார். அவ்வாறு இல்லாவிடில் திட்ட வரைவு குறித்து கருத்துக்கூற முடியாதென்று வலியுறுத்தினார். இறுதியில் இது குறித்து சிறிலங்காபிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் விளக்கமும் கூறப்பட்டது.

திட்ட வரைவு குறித்து கருத்துக்கூற முடியாதென சனாதிபதி கூறிய போதும்அதற்கு எதிரான பிரச்சாரத்தில் அவர்கள் பின் நிற்கவில்லை. இது தொடர்பான எதிர்ப்பிரச்சாரத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி சார்பாகவும் இத்திட்ட வரைவை ஆராயும் சு.க.வின் குழுவுக்குத்தலைவர் என்ற ரீதியில் லக்ஸ்மன் கதிர்காமரும் தொடர்ச்சியாக எதிர்க்கருத்துக்களை வெளியிடுவதில் ஈடுபட்டுவந்தார். அவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தது போல சந்திரிகாவின் இந்த உரை அமைந்தது.

இவர்களின் எச்சரிக்கை தமிழீழம் அமையப் போகிறது என்பதாகவே இருந்தது. இவ்வாறான எச்சரிக்கையை இவர்கள் விடுத்துக்கொண்டிருக்க ஜே.வி.பி சிகலஉறுமய, மற்றும் பௌத்த அமைப்புகள் இடைக்கால நிர்வாக அமைப்பிற்கு எதிரான தீவிர பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றன. ஜே.வி.பி யுத்தத்திற்கு தயாராகுமாறு பிரச்சாரம் செய்வதாக கூடத்தகவல்கள்வெளிவருகின்றன. எவ்வகையான யுத்தம் என்பதுதான் தெரியவரவில்லை.

ஒட்டுமொத்தத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தயக்கத்துடன் முன்வைத்த இடைக்கால நிர்வாகம் குறித்த திட்டவரைவு தொடர்பாக நிறைவேற்று அதிகாரம்-கொண்ட சனாதிபதியும் அவர் தலைமை வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும் ஜே.வி.பியினரும் ஏனைய இனவாதிகளும் கடுமையான விமர்சனத்தையே முன்வைத்திருக்கின்றனர். அவர்களின் எச்சரிக்கையின் தொனிப்பொருள் நாட்டின் ஒரு பகுதி தாரைவார்த்துக்கொடுக்கப்படப்போகின்றது என்பதாகும்.

ஆனால் இந்த எச்சரிக்கையானது புளித்துப்போன ஒன்றாகும். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தீவிரமாக நடந்த யுத்தத்திற்கும் இன்றைய நிலைக்கும் இன்றுஇடம் பெற்று வருகின்ற சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடனான சமாதான முயற்சிகளுக்கும் கூட இந்த வெற்றுக்கோசங்களே காரணமாகும். இந்தக்கூக் குரல்கள் தான் இவர்கள் கூறும் நாடு "பிளவுறக்" காரணமாக அமையவும் போகிறது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக போராடுவதை முதலில் நாட்டைப்பிளவு படுத்த முயல்வதாகக்கூறிய சிறிலங்காவின் இரு பெரும் கட்சிகளும் கூறி அதனை அடக்கமுயன்று உண்மையிலேயே பிரிவை நோக்கித்தள்ளின. பின்னர் சமாதான பேச்சுகள் ஒப்பந்தங்களின் போதெல்லாம் அப்போதுள்ள பிரதான எதிர்க்கட்சியும் இனவாதிகளும் செய்த பிரச்சாரமும் போராட்டங்களும் இந்நிலையை மேலும் வலுப்படுத்தின.


சனாதிபதி சந்திரிகா கூறுவது போல் "நாடு மிகவும் அபாயகரமான நிலையில் இருந்தது" அவரது ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் தான் என்பதே உண்மையாகும். அரசியல் இராணுவ பொருளாதார ரீதியாக அடுத்து என்ன? எனத்தீர்மானிக்க முடியாத நிலை ஏற்படும் வரை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குருட்டுத்தனமான யுத்தத்தை நடத்தினார். சிறிலங்காவை மீளமுடியாத நிலைநோக்கி தள்ளிச்சென்றார்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கைகள் சிறிலங்கவை சற்று ஆசுவாசப்படுத்திவருகையில் சனாதிபதி சந்திரிகா விடுத்துள்ள எச்சரிக்கை என்றுமே மீளமுடியாத நிலைக்கு சிறிலங்காவை தள்ளப்போகிறது.

**வேலவன்**

தேர்ந்த ஞானத்திற்கு ஒரே அறிகுறி, போதனை செய்யும் ஆற்றல். - அரிஸ்ட்டாட்டில்

# மூன்றாம் ஆண்டு நினைவலைகளில்



கடற்புலி
லெப். கேணல் பழனிராஜ் / பழனி
( அங்கமுத்து சிவநாதன் )
கண்டி

15-04-1974 தாயின் மடியில்

15-08-2000 தாயக மடியில்

மலையகம் தந்த மாவீரனே
பார் விரிந்தோடும் புகழுடன்
படை நடத்தும் தலைவரின் சேனையில்
ஆர்ப்பரித்தெழும் ஆழ்கடலில்
ஆக்ரோஷத்துடன் படைநடத்தி
வீரத்தடங்கள் பதித்திட்ட
காவிய நாயகன் பழனியே
காலங்கள் பல கடந்திடினும்
கரையாத உன் நினைவுகளுடன்
உறவுகள்

இன்று (15.08.2003 வெள்ளிக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் இவரது மூன்றாம் ஆண்டு நிகழ்வில் போராளிகள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி-
ஓவசியர் கடை முன்பாக,
இரணைப்பாலை வீதி,
புதுக்குடியிருப்பு,

க. இராசலட்சுமி,
குடும்பத்தினர்,
பொலிகண்டி.

(3477)

---

மிக விரைவில்... வி.பி.யோசப் எழுதும்
வெள்ளிநாதத்தில் **"பாடசாலை போக வேணும்"**
(மொழிபெயர்ப்புத் தொடர்)

---

# நெடுங்கேணி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பணிநிலை வேண்டுகை.

கீழ்காணும் பதவிகளுக்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வயதெல்லை -**
18 வயதுக்கும் - 45 வயதுக்கும் உட்பட்டவர்கள்.

### 01. பதவி – பொதுமுகாமையாளர் 101/10

சம்பள அளவுத் திட்டம் 4750 – 6850
100X10 – 110X10

**தகைமைகள்:**

அ] கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 12வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது.

ஆ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம்( உயர்தரம்) க.பொ.த.(உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

### 02. பதவி – எழுதுநர் 302/14

சம்பள அளவுத்திட்டம் 3750 – 5200
70X10 – 75X10

**தகைமைகள் -**

அ] கூட்டுறவுப் பணியாளரின் 15வது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்டத்தில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது.

ஆ] க.பொ.த.(சாதாரணம்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம், வர்த்தக எண்கணிதம், தமிழ் என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் லிகிதராக 01 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**குறிப்பு -**


சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கும் தட்டெழுத்தாளர் பயிற்சி சான்றிதழ் பெற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் .

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு 30.08.2003 அன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக 'தலைவர்' நெடுங்கேணி பனை,தென்னை வள.அபி.கூ.சங்கம் நெடுங்கேணி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.

**தலைவர்,**
**நெடுங்கேணி.ப.தெ.வள.கூ.சங்கம்.**

(3632)

---

KP **King Parrots**

(Dealers: T.V, Deck, Radio, Fan, Watch, Clock and Electronic Items)

T.P : 024-23123

No: 20, BAZAAR STREET, VAVUNIYA.

வடபகுதிக்கான ஏக விநியோகஸ்தர் கிங்பரட்ஸ்

வவுனியா, யாழ்ப்பாணம், நெல்லியடி

(சி-8247)

---

SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN

**SHAN** COMPUTER & TYPEWRITING INSTITUTE

கணனி தொழிநுட்பக் கலைஞர்களுக்காக

மல்ரிமீடியா
**Multimedia**

வவுனியாவில் முதன்முறையாக

22-08-2003 திகதிக்கு முன் பதிவு செய்யும் மாணவர்களுக்கு 60% கழிவு வழங்கப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் : 25-08-2003
நேரம்: 10.00 AM & மாலை 06.00 PM

**British Business college - Colombo**
**IDPM -UK**
**IMS -UK**
ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து

உடன் தொடர்புகொள்ளவும்

**SHAN** COMPUTER & TYPEWRITING INSTITUTE

இல-37,வைரவர் கோவில் வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.
☎024-20143 email-shancomputer institute@hotmail.com

தமிழ் மக்களுக்காக!

(சி-8334)

SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN

● **அன்பின் அனுமாரே! மெகா சீரியல் பற்றி என்னநினைக்கிறீர்கள்?**

சு.ரவிராஜ்,
திருகோணமலை.

ஒரு படித்த துணுக்குத் தருகிறேன். தூக்குத் தண்டனைக் கைதியிடம் நீதிபதி கேட்டார் உனது இறுதி விருப்பம் என்ன என்று.

குற்றவாளி சொன்னார் ஒளிபரப்பாகும் தமிழ் சீரியல் ஒன்றைத்தான் முழுமையாகப் பார்த்து முடிக்கவேண்டும் என்று.



# அனுமார் பதில்கள்

● **அனுமாரே! இந்துக்கலாச்சார அமைச்சர் பெருமான் தனது மெய்ப்பாதுகாவல் சிங்கள இராணுவத்தினரை பாதணிகளுடன் நல்லூர்க்கோயிலடிக்கு கூட்டிவருகிறாரே கண்டீரா?**

மணிசேகரம்,
கல்வியங்காடு.

கலாச்சாரக் காவலரின் காவலருக்கு கால் சுடாமல் காப்பது காலாச்சாரத்தின் மேன்மையன்றோ என்று 'அந்த' ஈஸ்வரனே விளக்கம் தந்தால் விளக்கெண்ணையாய் பதியவேண்டிவருமே.

● **ஹாய் அனுமாரே! நான் அனுப்பும் சில ஆக்கங்களை பத்திரிகையில் சேர்க்காத வெள்ளிநாத பத்திரிகை ஆசிரியர்மீது பயங்கரக் கோபம் எனக்குள்ளது. எவ்வாறு வெளிப்படுத்தலாம்.**

ஆ.சுதர்சிகா,
கிளி/முருகானந்தா ம.வி

நேரில்வந்து.....

● **அனுமாரே! ஒரு பெண்ணைக் காதலித்துக்கொண்டு இன்னொரு பெண்ணிற்கு முடிவு சொல்லும் ஆண்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பா.நகுலன்,
உடையார்கட்டு.

''ஆணுக்கு மட்டுமே நெஞ்சம்வைச்சான். (ஆண்டவன்) பெண்ணுக்கு அதில வஞ்சம்வைச்சான்" என்ற பாடல்வரி பிழை என்று நினைக்கிறேன்.

● **பானுக்கும் மீனுக்கும் காணிவாங்கிய கதை ஒன்று உண்டு. இது பற்றி கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்கள் பார்க்கலாம்.**

க. இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

ஒன்றுமில்லாமலே உபசபா நாயகர் கதிரைவாங்க வெளிக்கிட்டவர் நம்மாள். உது என்ன பிரமாதம்.

● **அனுமாரே! சென்ற முல்லைத்தீவு வெற்றிவிழா அன்று படையினரின் மனோநிலை எவ்வாறு இருந்திருக்கும்.**

ஜெ.ஜெயூரன்,
மு/விசுவமடு.ம.வி.

கடவுளின் கருணையால் முல்லைத்தீவில் தமக்கு கடமை நியமனம் கிடைக்காததற்கான நன்றி கூறலாய் இருந்திருக்கும்

● **ஹலோ அனுமாரே! அடிக்கடி என்னுடன் சண்டைபோடும் அண்ணா ஒரு அமைதியான அண்ணியைக் கொண்டுவரப்போகிறார். அவர்களின் பாடு எப்படியிருக்கும்.**

வி.கவிப்பிரியா,
புதுக்குடியிருப்பு.

அமைதியும் அட்டகாசமும் சேர்ந்து உமக்கொரு மருமகப் பிள்ளை கிடைக்கட்டும்.

● **அன்பின் அனுமாரே! வாகனம் ஓடும்போது முன்னால் என்ன இருக்கும் என்பதை திடமாகக் குறிப்பிடுங்கள்.**

ஊர்க்குருவி,
வட்டக்கச்சி.

இடிபடும்வரை பாதையிருக்கும்.

● **அன்பின் அனுமாரே! ஈழத்தமிழருக்காக குரல்கொடுத்த வைகோவை சிறையிட்டுள்ளார்களே நாம் என்ன செய்யலாம்?**

வ.பவான்,
கற்சிலைமடு.

ஈழத்தமிழருக்காக அவர் குரல் கொடுத்தார். நீர் கைகொடுக்க வேண்டும். அதற்குக் குறைந்தால் கௌரவக் குறைவாகிவிடாதா?

---

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

1985 ஆம் ஆண்டு ரஞ்சன் லாலா வீரச்சாவடைந்த செய்தி அம்மாவுக்கு எட்டியது. அம்மாவும் மகளும் திருமலையிலிருந்து பருத்தித்துறைக்குச்சென்றார்கள் . அங்கு சென்ற அவர்கள் இன்னுமொரு துணிகரப்பணியை பொறுப்பேற்றார்கள். அதாவது ரஞ்சன் லாலாவின் வித்துடலை அம்மா குடும்பத்தினர் பொறுப்பேற்றுப் பத்திரமாக, கௌரவமாக அடக்கம் செய்து விட்டு திருமலை வந்துசேர்ந்தார்கள்.

இவ்வாறு அம்மாவின் வாழ்வு தன்னலமற்றதாக இருந்து வரும் போது விடுதலைப்புலிகள் இன்னுமொரு பெரிய சவாலுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டார்கள்.அது இந்தியத் தேசிய நலனையே முதன்மைப்படுத்தும் இந்தியாவினுடைய பிராந்திய விஸ்தரிப்புவாதமாகும். இந்த நோக்கின் அடிப்படையில் IPKF இனர் 1987ஆம் ஆண்டு மத்திய காலப்பகுதியில் தமிழீழப்பிரதேசங்கள் எங்கும்முகாமிட்டு ஆக்கிரமித்துக் கொண்டார்கள் .

இந்த ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலைப்போரை பாதுகாக்க தேசியத் தலைவரால் இந்திய இராணுவத்தினருக்கு எதிராகப்போர் தொடுக்கும்படி கட்டளையிடப்பட்டது. அச்சமரில் வெற்றிபெற தேசியத்தலைவர் தலைமை தாங்கினார். இவ்வெற்றி விடுதலைப்போரை அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி நகர்த்தியது. சமரின் முடிவில் 1990 ஆம்ஆண்டு ஆரம்ப காலப்பகுதியில் இந்தியஇராணுவம் தோல்வியுடன் தமிழீழத்தை விட்டு விலகிச் சென்றது.

இவ்வரலாற்றுக்கால கட்டத்தில் போராளிகள் திருமலை நகருக்குள் நுழைகின்ற போது மக்களின் எழுச்சிபூர்வமான உணர்வலைகள் போராளிகள் மனங்களை மேலும் எழுச்சி கொள்ளவே வைத்தது. அம் மக்களில் அம்மாவும் ஒருவராக இருந்து போராளிகளை அரவணைத்துக் காத்திருந்தார். அவரின் காத்திருப்பு பிள்ளைகளை எதிர்பார்க்கும் தாய்மைக்குநிகரானதே. அதற்கு அப்பால் விடுதலைப் போருக்கு வலுச்சேர்க்கும் தகவலுடன் காத்திருந்தார்.

அதாவது இந்தியாவின் கைக்கூலிக்கு ஆட்படும் பண்பு தான் தமது அரசியல்பண்பென வரித்துக் கொண்டு செயலாற்றி வந்தது ஒரு மாற்றியக்கம். இக்குழு நிலத்துக்குக்கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதக் களஞ்சியம் பற்றயி தகவலை அம்மா போராளிகளுக்கு வழங்கினார். நகரில் அமைந்துள்ள பொதுக்காணியுள் இருந்த ஆயுதக்களஞ்சியத் திலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட A.K வகை ஆயுதங்களும் ஒருலட்சத்திற்கு மேற்பட்டரவைகளும் போராளி களினால் கைப்பற்றப்பட்டன. அவ் ஆயுதப் பொருட்கள் விடுதலைப் போருக்கு வலுச்சேர்த்தது. இப்பணியில் ஈடுபட்டபோராளிகளுக்கான உணவு, தேனீர், ஓய்வு அனைத்தும் அம்மா வீட்டில் தான்....

போராளிகள் நகரிற்கு வந்தால் அம்மாவீட்டாரின் அன்பார்ந்த மனப்பூர்வமான உபசரிப்பைப் பெற்றே செல்வார்கள். ஒரு சில நாட்கள் போராளிகள் செல்லாமல் விடுவதும் உண்டு. அவ்வாறு செல்வதைக்குறைத்தால் அம்மாவின் கண்டிப்புக்குள்ளாகும் நிகழ்வுகளும் அவ்வப்போது நடை பெறும். இவ்வாறான காலவோட்டத்தில் அம்மா பேத்தியின் பொழுது போக்குடன் தன் பின்னிட்ட காலத்தைக்கழித்தார். அம்மாவின் குடும்பம் பல்தரப்பட்ட உதவிகளை போராளிகளுக்கு வழங்கி வந்தது. அடுத்த கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கும் என்ற அரசியற் தெளிவுடன் தம் பங்களிப்புக்களை போராளிகளுக்குச்செய்தார்கள். போர் தொடங்கினால் தமக்கு உயிராபத்து ஏற்படும் என்று தெரிந்தே போராளிகளை அன்புடன் ஆதரித்தார்கள்.

இச்சூழ்நிலை 1990 ஆம் ஆண்டு மத்திய காலப்பகுதியில் பெரும் மாற்றத்திற்குள்ளாகியது. அதாவது இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியது. போர் ஆரம்பமாகிய ஒரு சில வாரங்களில் தமிழர்கள் சிங்களவர்களாலும் அரசபடைகளாலும் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலுக்குள்ளாகினர். இதன்போது பல இளைஞர்கள் குடும் பஸ்த்தர்கள் கடத்தப்பட்டு கொல்லப் பட்டார்கள். கோடிக்கணக்கில் பெறுமதிமிக்க சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பலநூறு வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன, சேதமாக் கப்பட்டன.

இவ்வரலாற்று நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் மக்கள் திருமலை மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்தார்கள். திரியாய் ஊடாகவும், கடல் வழி மூலமாகவும் வன்னி, யாழ்ப்பாணம், இந்தியா எனப்பல இடங்களுக்குச் சென்று தஞ்சம் புகுந்தார்கள் இவ்விடப்பெயர்வில் அம்மாவின் மகள்குடும்பத்தினரும் உள்ளடங்கினர். ஆனால் அம்மா அவ்வீட்டிலேயே இடம் பெயராது இருந்து விட்டார்.

அம்மா பின்னிட்ட காலங்களில் தனிமையில் நோயால் பீடிக்கப்பட்டு இருந்தார் . அக்காலத்தில் அம்மாவுக்கு சில ஆசைகள் இருந்தன. அவ்வாசைகள் சொந்த வீட்டில் கிடந்து சாகவேண்டும், இளையவன் யோகன் கொள்ளி வைக்க வேண்டும், தேசியத் தலைவரைப்பார்க்க வேண்டும், தான் வளர்த்த போராளிகளை காண வேண்டும் ஆகியவையேதான். அப்போது தான் தனது ஆத்மா சாந்தியடையும் என அடிக்கடி சொல்லிக்கொள்வார்.

அம்மாவின் ஆசைகளில் ஒன்று மட்டுமே நிறைவேறியது. 1994 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து தான் அன்பாகவளர்த்த போராளிகளை கண்டு கதைத்து உணவு பரிமாறிச் சென்றார். யாழ்ப்பாணம் வந்து சென்று குறுகிய காலப் பகுதிக்குள் அம்மா சாவடைந்து விட்டார்.

ஒரு சமூகத்தினால் தமக்கு வழங்கப்படுகின்ற அறிவு, ஆற்றல், அனுபவம் போன்ற அனைத்தையும் அந்தச்சமூகத்திற்கே பயன்படுத்த வேண்டுமென்ற சமூக உணர்வின் உயரிய வெளிப்பாடுகளாகஇயங்கும் இத்தகையோர் என்றும் போற்றப்பட வேண்டும். ●

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –31



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –31

............................................................

............................................................

............................................................

............................................................

பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –30



க.இரத்தினசிங்கம்
இல:-226,ஜெயந்திநகர்
கிளிநொச்சி

### பரிசுக்குரிய வரிகள்

கூடு பிரித்து வெளியேவந்து
நாடுகாக்கும் ஏக்கமோ?
நாளைய உலகின் நாயகன் நீயே
வேளைவரும்போது காட்டு உன்வீரத்தை

### பாராட்டுக்குரிய வரிகள்

*செல்லடிபட்டு செல்லரித்துப்போனது-எங்கள்
தேசத்தின் தேட்டங்கள் மட்டுமல்ல-என்
நேசத்தின் உறவுகளும், பாசத்தின் சிகரங்களும்
ஏன் என்கால்களும்தான்.*

கா.தேனுஷான்
வட்டக்கச்சி.

*துப்பாக்கிரவையால்-ஏற்பட்ட
சமாதானத்தை
துப்பாக்கி ரவையால்-ஏற்பட்ட
தூவாரத்தால் பார்க்கிறாயா?*

இ.கிங்ஸ்லிதாஸ்.
காவல்துறை.

*துப்பாக்கி துளைத்த சல்லடைக்குப்பின்னால் நின்று
அப்பா, அம்மாவின் அவலத்தைப்பார்க்கிறாயா?
துப்பாக்கிக்கயவன் தூரவிலகும் வரை-அவனிடம்
தப்பிப்பிழைத்தால் தான், தாய்நிலத்தைக் காண்பாய்நீ!*

பி.சாதுரியன்.
வன்னேரிக்குளம்.

*பிஞ்சின் உள்ளம் எதையோ தேடுகிறது.
உன்னைப் பெற்றெடுத்த அம்மாவையா
இல்லைத் தமிழீழத்தையா? எப்படியும்
தமிழரின் உண்மைகளை மறைக்கமுடியாது.*

ஆ.சுதர்சிகா
கிளி/முருகானந்தா ம.வி

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு வழங்குகின்றது. கிளிநொச்சி.


## வெள்ளிநாதத்தை

**இலங்கை எங்கிலும் பெறவெள்ளிநாதத்தின் சந்தாதாரராகுங்கள்**

| | |
|---|---|
| ஆண்டுச்சந்தா | 750.00 |
| அரையாண்டு | 400.00 |

உங்கள் தொடர்புகளுக்கு:
வெள்ளிநாதம்
ஈழநாதம் பணிமனை
யாழ்சாலை,கிளிநொச்சி.
எனும் முகவரிக்கு அனுப்புக.

**தபால் மூலம் எல்லா இடங்களிற்கும் அனுப்பி வைக்கப்படும்.**

வன்னிப் பெருநிலப்பரப்பு வாழ் மக்களின்
தங்கநகைத் தேவைகளை நீண்ட காலமாக
நம்பிக்கை, நாணயத்துடன் நிறைவேற்றிவரும்
ஒப்பற்ற ஸ்தாபனம்.

லாவண்யா ஜுவல்லறி



Laavanya
JEWELLERY

இல. 45, பெரியகடை, மன்னார்.
தொலைபேசி:-023 2232043
இல. 60, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

தொலை பேசி- 024 22484
தொலை நகல்-: 024 20236.

SM Graphics
(சி-8333)

## நிலவனின் நினைவில்...



கூடு விட்டுப்பிரிந்த குருவிகள் மகத்துவமான
தேடலொறில்ஒன்றாகஒரு கூடுகட்டி
வாழும்இந்தவாழ்வின்
தவிர்க்கவியலாநியதியாய்ஆழிவெயின்
நிர்மலத்தை நோக்கி
ஒவ்வொன்ய்ப் பறக்கும் குருவிகள்
துயருற்று துயருற்று இருக்கும்
குருவிகளின் வாழ்வு நீளும்
அதே கூட்டில் அதே வாழ்வில்....

நிலவன் வெளியீட்டகம்

02வது வருடமும்

மேஜர் நிலவன்

இரங்கசாமி மதுசங்கர் (திருமலை)

# 31ம் நாள் அழைப்பிதழ்



பிறப்பு -15.02.1947
இறப்பு -16.07.2003

அன்னாரது மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 15-08-2003 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் வீட்டுக் கிரியை நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், சகல ஊழியர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அமரர் சின்னப்பிள்ளை ஆறுமுகம்**
(உதவிக் கல்விப்பணிப்பாளர் முன்பள்ளி, முல்லைவலயம்)

4ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

மனைவி,
பிள்ளைகள்.

EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்- 021-2223891, 021-2226297, 074 512666,
01-360290, 01-360291, 0712-348888, 0712-349999,
e-mail- jaffna@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.